
# பரத நாட்டியம்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

TG 454

## தரம் 6



அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம் மகரகம

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# பரத நாட்டியம்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் - 06

**அழகியல் கல்வித் துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**
**இலங்கை**
**2007**

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

மீள்பதிப்பு 2009

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

வெளியீடு
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக
ப்ரின்ட்கெயார் பெகேஜிங் (பிரைவேட்) லிமிட்டடினால் அச்சிடப்பட்டது.

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# உதவிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கையின் கலைத் திட்டக் கொள்கையில் பாடசாலைக் கலைத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒரு முறை காலத்திற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. அதற்கேற்ப 2007ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருகின்ற கலைச் சீர்த்தத்தின் கீழ் இப்பாடத் திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிவுரைப்பு வழிகாட்டி நூலும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத் திட்டங்களில் குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புக்களும் அவற்றின் உள்ளடக்கமும் அமைந்திருந்தமையால், அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச்செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரையொன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகம் செய்யப்படுகின்ற பாடத் திட்டங்களில் அவ்வவ் பாடங்களில் மாணவர் அடைந்து கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல இனங்காணப்பட்டுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்று அதேநேரம் அவற்றை நடைமுறையில் செயல்படுத்துகின்ற தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரையொன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத் திட்டத்தைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன் அதில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரை வழிகாட்டிப் பகுதியில் புதிய கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவன் நூலகத்தைப் பயன்படுத்துதல், நூல்களை வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடம் இருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், இயலுமெனின் இணையத்தளம் மூலம் தகவல் திரட்டுதல், முதலான கண்டறிதல் மூலமாக கற்றல் கலாசாரமொன்றைக் காண முடியும். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும், ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களை அடையச் செய்வதே ஆசிரியர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுரைகள் மூலம் பொசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றல் சூழ்நிலையானது மாணவர்களைப் பெரிதும் கவர்ந்ததாக அமையும்.

இதற்காக இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக, புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம். இற்தப் புதிய வகுப்பறைக் கற்றல் கற்பித்தற் செயலொழுங்கின் போது மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். அதனால், அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்கள், இடையூறுகள் என்பவற்றை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்பபங்களில் நீங்கள் உதவி செய்யுங்கள். அயலிலுள்ள சகபாடிகளுக்கு உதவி செய்ய மாணவர்களை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை மேலும் பலப்படுத்தக் கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவரை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் பரம்பரையொன்றை உருவாக்குவதும் அதற்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகம், வகுப்பறை புதிய கற்றல் கலாச்சாரத்திற்கு ஏற்க உருவாக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

விமல் சியம்பலாகொட
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பளைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்டும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் வுசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவலற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிக்ட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்ககூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதம் என உறுதியாக நம்புகின்றேன்.

**டபிள்யு.எம்.என்.ஜே. புஸ்பகுமார**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
இசுருபாய
பத்தரமுல்ல
12.11.2009

# முன்னுரை

தேசிய கல்வி நிறுவகத்தினால் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூன்று பகுதிகளைக் கொண்டது. அவையாவன:

* விரிவாக்கப்பட்ட பாடத்திட்டம்
* செயற்பாட்டுத் தொடரகம்
* கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்தலுக்கான கருவிகள்

பரத நாட்டியம் கற்பிப்பதற்குரிய நோக்கங்களை அடையும் வகையில் இரசித்தல், ஆக்கத்திறன் செயன்முறை, அறிமுறை, கலாசாரப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் தேர்ச்சிகளையும், தேர்ச்சி மட்டங்களையும் உள்ளடக்கி இப்பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூல் எழுதப்பட்டுள்ளது.

மாணவர்கள் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் குறிப்பிடப்பட்ட தேர்ச்சி மட்டங்கள் சம்பந்தமான பாட உள்ளடக்கம் இணைக்கப்பட்டு இருப்பது இந்நூலின் சிறப்பியல்புகளாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவும் பொருட்கள் தர உள்ளீடுகள் கொடுக்கப்பட்டு இருப்பதால் இவற்றை நேரத்தோடு கேட்டு, உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டுகின்றது. பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை நிச்சயப்படுத்திக் கொள்வதற்குரிய பல ஆலோசனைகள் கணிப்பீடும் மதிப்பீடும் என்ற பகுதியிலே உள்ளடக்கப்பட்டுள்ளன.

***"பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டமும்"*** என்ற பகுதியை பாடசாலைக் கல்வியோடு சார்ந்த அனைவரும் முறையாக வாசித்து விளங்க வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களுக்கு: கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை ஒப்படைக்கும்போது, பாடவிதானச் செயற்பாடுகளைச் செயற்படுத்தும்போது, ஆசிரியர் பணிகளை மேற்பார்வை செய்யும் போது, உரியவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கு பாடசாலை முகாமைத்துவத்தில் ஈடுபடுபவர்களுக்கு இது தேவையான விளக்கத்தைக் கொடுக்கின்றது.

இந்நூலின் இரண்டாம் பகுதியிலே பாடத்திட்டத்தைச் நடைமுறைப்படுத்துவதற்குரிய செயற்பாட்டுத் தொடரகம் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. இச்செயற்பாடுகளை ஆசிரியர்கள் நூற்றுக்கு நூறு விழுக்காடு கடைப்பிடிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஒவ்வொரு ஆசிரியரும் தத்தமது ஆற்றலுக்கும் ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்கும் ஏற்ப இவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு அவர்களுக்கு பூரண சுதந்திரம் உண்டு. எடுத்துக்காட்டாக இரண்டு குழுக்களாக மாணவர்களைப் பிரிக்கலாம் என்று கூறியிருப்பினும், மாணவர் தொகைக்கேற்ப அவர்களைப் பிரித்து உரிய மாற்றங்களைச் செய்வதற்கு ஆசிரியருக்கு உரிமை உண்டு. குழுச் செயற்பாடுகளுக்கு உரிய நேர ஒதுக்கீடு ஆகியவற்றை ஆசிரியர் சாதுரியமாகக் கையாள வேண்டியவராக உள்ளார்.

ஒரு பாடவேளை 40 நிமிடங்களைக் கொண்டதாக இருப்பினும், சில சந்தரப்பங்களில் இரு பாடவேளைகளில். ஒரு தேர்ச்சி மட்டத்தினை பூரணப்படுத்திக் கொள்ள வேண்டி நேரிடும். ஆகையால், அதற்கேற்றவாறு நேரசூசியில் கொடுக்கப்பட்டுள்ள பாடவேளைகளுக்கு ஒப்ப செயற்பாடுகளைப் பகுதி பகுதியாக அமைத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு ஆசிரியருக்கு உண்டு. மேலும் முன்னைய நாளில் ஆரம்பிக்கப்பட்ட செயற்பாட்டில் ஒன்றை தொடர்ந்து மறுநாள் செய்யும்போது முதல் நாள் நிறைவு செய்தவற்றை மீண்டும் மீட்டல் செய்த பின்னர் தொடர வேண்டும் என்பதும் ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏதேனும் ஒரு செயற்பாட்டினை பூரணப்படுத்துவதற்கேற்ப வெவ்வேறு செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது நீங்கள் அறிந்ததே. இதன்பிரகாரம் உத்தேச செயற்பாடானது கூறப்பட்டபடி நிறைவேற்ற வேண்டும் என உங்களிடம் ஒருபோதும் எதிர்பார்க்கப்படமாட்டாது. மாறாக, சிறந்த ஆய்வுகளுக்கேற்ப கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை மேம்படுத்த வேண்டிய புதுப் புது உபகரணங்களைப் பயன்படுத்தி சிறந்த கற்றல் நடத்தையை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். புதுப்புது விடயங்களை அறிமுகப்படுத்தும்போது உங்களின் வினைத்திறன், விளைதிறன் ஆகியன வளர்ச்சி காணும் நோக்கில் இவ்வழிகாட்டி நூலைத் தேசிய கல்வி நிறுவகம் வழங்கியுள்ளது.

இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் மூன்றாம் பகுதியில் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு உதவும் உபகரணத் தொகுதிகள் (கருவிகள்) அடங்குகின்றன. செயற்பாட்டுத் தொகுதி ஒன்றை மையமாகக் கொண்டு வழங்கப்படும் இவ்வுபகரணங்கள் வகுப்பறைக்கு வெளியேயும் தொடர்ச்சியாக மாணவர்கள் கற்பதற்கு துணை புரியும். இக்கருவிகளைப் பயன்படுத்தி மாணவர்களின் கற்றலை மதிப்பீடு செய்து தேவையான மீளவலியுறுத்தல்களைச் செய்வது உங்கள் பணியாகும். கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு மதிப்பீட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல், அறிவு, தனிப்பட்ட திறன்கள், மனப்பாங்கு வளர்ச்சி என்பன வளர்ச்சி பெறும் வகையில் பயனுள்ள கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

## பணிப்பு

பேராசிரியர் ஜே. டபிள்யூ. விக்கிரமசிங்ஹ
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## மேற்பார்வையும் வழிகாட்டலும்

- கலாநிதி - விமல் சியம்பலாகொட
  உதவிப் பணிப்பாளர் நாயகம்
  மானிட சமூக விஞ்ஞானப் பிரிவு,
  தேசிய கல்வி நிறுவகம்
- திரு.சுதத் சமரசிங்க
  பணிப்பாளர் அழகியற்துறை
  தேசிய கல்வி நிறுவகம்
- திரு.உ.நவரட்ணம்
  பணிப்பாளர் - தமிழ்த்துறை
  தேசிய கல்வி நிறுவகம்
- திரு.து.இராஜேந்திரம்
  சிரேஷ்ட விரிவுரையாளர் - கல்விப்பீடம்
  இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
- திருமதி. சுனேத்ரா ஜோண் ஜெஸ்லி
  செயற்றிட்ட அதிகாரி
  செயற்றிட்டத்தலைவர் - தமிழ்மொழிமூல அழகியற் பாடநெறிகள்
  தேசிய கல்வி நிறுவகம்

## ஆக்கியோர்

1. கலாபூஷணம் திருமதி லீலாம்பிகை செல்வராஜா
   முன்னாள் ஆசிரிய ஆலோசகர் - யாழ் கல்வித் திணைக்களம் - வலயம் - 02
2. திருமதி. சுமதி புவனேந்திரா - நடன ஆசிரியை
   கணபதி இந்து மகளிர் கல்லூரி - கொழும்பு - 12
3. திருமதி. பாரதி சிவயோகநாதன் - நடன ஆசிரியை
   இராமகிருஷ்ண வித்தியாலயம் - கொழும்பு - 06
4. திருமதி சுபாஷினி சர்வேஸ்வரன் - நடன ஆசிரியை - கொழும்பு - 04

## செயற்றிட்ட தலைவரும், இணைப்பாளரும்

- திருமதி. சுனேத்ரா ஜோண் ஜெஸ்லி
  செயற்றிட்ட அதிகாரி
  செயற்றிட்டத்தலைவர் - தமிழ்மொழிமூல அழகியற் பாடநெறிகள்
  தேசிய கல்வி நிறுவகம்

**கணனி வடிவமைப்பு** :- திருமதி நாதியா மஸிஸ்

# பொருளடக்கம்

பக்கம்

## பகுதி - I

| | | |
|---|---|---|
| 01. | பாடத்திட்ட முன்னுரை | i |
| 02. | பாடத்திற்கான தேர்ச்சிகள் | ii |
| 03. | வகுப்பிற்குரிய தேர்ச்சிகள் | iii |
| 04. | பாடசாலைக் கொள்கையும் நிகழ்ச்சித் திட்டமும் | iv |
| 05. | தர உள்ளீடுகள் | v |
| 06. | கற்றல் - கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடுகள். | vi |
| 07. | பாடத்திட்டம் | vii |

## பகுதி - II

| | | |
|---|---|---|
| 08. | கற்றல் - கற்பித்தல் முறைமை | 01 |
| 09. | செயற்பாடுகள் | 05 |

## பகுதி - III

| | | |
|---|---|---|
| 10. | கணிப்பீடும் மதிப்பீடும் | 114 |
| 11. | கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள் | 117 |

# பகுதி - I

## பாடத்திட்டம்
## தரம் 6

தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
2007

# 01. அறிமுகம்

ஆரம்பக் கல்வியை நிறைவுசெய்து கொண்டு கனிட்ட இடைநிலைப் பிரிவின் முதலாம் தரமாகிய ஆறாம் தரத்தில் கல்வியை மேற்கொள்ள வரும் மாணவர்களுக்குப் பொருத்தமானதாக புதிய பரத நாட்டிய பாடத்திட்டம் இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய கல்வித் திட்டங்களும், புதிய எண்ணக் கருக்களும் இக்கலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் நடனம், சங்கீதம், சித்திரம், நாடகம் ஆகிய கவின் கலைகள் ஒன்றிணைந்த பாடமாக ஆறாம் தரத்தில் கற்பிக்கப்பட்டு வந்துள்ளன. 2007 ஆம் ஆண்டிலிருந்து இக்கலைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக ஆறாம் தரத்தில் கற்பிக்கப்படவுள்ளன. நயத்தல், ஆக்கத்திறன், செய்ம்முறை, அறிமுறை, கலாசாரப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு இக்கலைத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. மாணவர் மையக் கல்விக்கு முதலிடம் கொடுக்கின்ற இப்புதிய கலைத்திட்டமானது ஆசிரியரும் மாணவரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், மாணவர்களின் தேடிக்கற்றலை ஊக்குவிப்பதற்குரிய செயற்பாடுகள் பலவற்றைக் கொண்டதாகவும் வடிவமைக்கப் பட்டுள்ளது.

மாணவர்கள் அவதானித்தல், தொடர்பாடல் திறன்கள் ஆகியவற்றையும் அவைக்காற்றுத் திறன்கள் பலவற்றை விருத்தி செய்தும், வகுப்பில் தமக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தாமாகவே தீர்வு கண்டு கற்றலை ஆனந்தமாக ஏற்றுக்கொள்ளலுமே இப்புதிய கலைத்திட்டத்தின் இலக்குகளாகும். 21ஆம் நூற்றாண்டில் ஏற்படக்கூடிய சவால்களைச் சந்திக்கவும், உலகமயமாக்கலின் முக்கியத்துவத்தை உணரவும், திறன்களை வளர்த்துக் கொள்ளவும், நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தவும், அறிவாற்றலை மேம்படுத்தவும் வேண்டி இப்புதிய கலைத்திட்டமானது வடிவமைக்கப்படுகிறது.

இப்பாடத்திட்ட ஆவணத்தில் அறிமுகம், பாடத்திற்கான தேர்ச்சிகள், வகுப்பிற்குரிய தேர்ச்சிகள், கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை, பாடசாலைக் கொள்கையும் நிகழ்ச்சித்திட்டமும், மாணவர்களின் அடைவைக் கணிப்பீடும் மதிப்பீடும் செய்தல், தர உள்ளீடு, கற்றல் - கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடு, தேர்ச்சி மட்டப் பாடத்திட்டம் (தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், உள்ளடக்கம், பாடவேளைகள்) என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 02. பாடத்திற்கான தேர்ச்சிகள்

01. பரத நாட்டியத்தின் அறிமுறை சார்ந்த அறிவினை விருத்தி செய்வதன் ஊடாக ஆடும்திறன், இரசிக்கும் ஆற்றல், விமர்சிக்கும்திறன் ஆகியவற்றை விருத்தி செய்தல்.

02. பரத நாட்டியத்தின் செய்ம்முறை சார்ந்த அறிவினை வழங்குவதன் மூலம் அறிமுறை சார்ந்த அறிவினை விருத்தி செய்தல்.

03. அறிமுறை சார்ந்த அறிவின் ஊடாக ஆடும்திறன், இரசிக்கும்திறன், விமர்சிக்கும் ஆற்றல் ஆகியவற்றை வளர்த்தல்.

04. i. ஆற்றுகைத்திறன், உருப்படிக்கு ஏற்ப ஆடும்திறன், வடிவமைக்கும்திறன் என்பவற்றை விருத்தி செய்தல்.

05. பரத நாட்டியத்தை இரசித்து அனுபவிக்கும் திறனை விருத்தி செய்தலும் ஏனைய நடன வகைகளை இரசித்தலும் நயத்தலும்.

06. பரத நாட்டியத்தின் தோற்றம், வளர்ச்சி அதன் வளரச்சிக்குப் பங்களிப்புச் செய்தோர் என்பவற்றை அறிந்து சமூக பண்பாட்டு விழுமியங்களைப் பேணவும் ஆய்வுகளை மேற்கொள்ளவும் ஊக்குவித்தல்.

07. அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியின் ஊடாகச் சமநிலை ஆளுமையை அடைவதற்கு உதவுதல்.

08. பரத நாட்டியத்துக்கு ஊடாக தேசிய ஒருமைப்பாட்டினையும் நல் இணக்கத்தையும் மேம்படுத்தல்.

## 03. வகுப்பிற்குரிய தேர்ச்சிகள்

01. பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்து தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

02. சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமியக் கலை தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக்கொணர்வார்.

03. பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

04. பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

05. பரத நாட்டியம், கிராமிய நடனம் என்பவை பற்றியும் இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும் இவற்றின் இசை பற்றியும் விபரிப்பார்.

## 04. பாடசாலைக் கொள்கையும் நிகழ்ச்சித்திட்டமும்

பரத நாட்டிய பாடங்களை வகுப்பறையில் கற்பிப்பதுடன் வகுப்பறைக்கு வெளியேயும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளை உள்ளடக்கும் வகையில் பாடசாலைக் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்துக் கொள்ளல் விரும்பத்தக்கதாகும். குறிப்பாகப் பரத நாட்டியத்திற்கு வாரத்திற்கு 03 பாடவேளைகளே ஒதுக்கப்பட்டிருப்பதால் இத்தகைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதன் மூலம் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட குறிக்கோள்களையும் தேர்ச்சிகளையும் அடையக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு பாடசாலைக் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் திட்டமிடும்பொழுது பாடசாலையில் உள்ள வளங்களும், மாணவர்களிடையே காணப்படும் தனியாள் வேறுபாடுகளும் கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

## நேரசூசி

பரத நாட்டியம் அறிமுறையும், செய்ம்முறையும் இணைந்த ஒரு பாடமாகும். அறிமுறை அறிவில் மட்டும் தேர்ச்சி பெறல் பயனளிக்காது. இவர்கள் செய்ம்முறையில் உயர் தேர்ச்சி மட்டத்தை அடையவேண்டும் என்பதால் நேரசூசியில் அதிக பாடவேளைகள் செய்ம்முறைப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. பாடசாலையில் உள்ள வசதிக்கேற்ப செய்முறைப் பயிற்சிக்காக இரு பாடவேளைகள் தொடர்ச்சியாகவும் வழங்கப்படலாம்.

## ஆசிரியர் தகைமைகள்

பரத நாட்டியப் பாடத்தைக் கற்பிப்பதற்கு இத்துறையில் முறைப்படி பயிற்சி பெற்றவர்களே பொருத்தமானவர்களாவர். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத பட்சத்தில் இப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், பரத நாட்டியத்துறையில் நிபுணத்துவம் பெற்ற மற்றொரு ஆசிரியரது உதவியைப் பெறல் இன்றியமையாததாகும்.

## அதிபரின் கற்பித்தல் தலைமைத்துவப்பங்கு

பாடசாலை அதிபர் ஒருவர் முகாமைத்துவத் தலைமைத்துவத்தோடு கற்பித்தல் தலைமைத்துவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். எனவே பரத நாட்டியத்தைக் கற்பிப்பதற்குப் பயிற்சிபெற்ற ஆசிரியர் ஒருவரைப் பெற்றுக்கொள்ளல், இப்பாடத்தைக் கற்பிப்பதற்கென தனியான ஓர் அறையை ஒழுங்கு செய்தல், தேவைப்படும் தரஉள்ளீடுகள், பாடத்திட்டம், வழிகாட்டி நூல்கள் முதலியவற்றைப் பெற்றுக் கொடுத்தல் அவருடைய கடமையாகும்.

## இணைப்பாட விதானச் செயற்பாடுகள்.

இவை தொடர்பான சில ஆலோசனைகள் இங்கு தரப்படுகின்றன.

01. நடனங்களைக் கற்பிக்கும்போது ஒன்றிணைந்த தன்மை பேணப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. இதனால் நடன ஆசிரியர்களுக்கும் ஏனைய பாட ஆசிரியர்களுக்கும் இடையே தொடர்பாடல் இடம்பெற வேண்டியது இன்றியமையாததாகும். இதற்கான ஏற்பாடுகளை அதிபரின் ஊடாகச் செய்தல் வேண்டும். எடுத்துக் காட்டாக நடன ஆசிரியர் பாடல்களை இசையுடன் கற்பிப்பதற்கு இசை ஆசிரியரின் உதவியைப் பெறலாம். இவ்வாறே ஏனைய பாட ஆசிரியர்களின் உதவியை நடன ஆசிரியர் பெற்றுக் கொள்ளலாம்.
02. ஆண்டின் ஆரம்பத்திலேயே இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கான திட்டம் வகுக்கப்படல் வேண்டும். வகுப்பறை மன்றங்கள், இலக்கிய மன்றங்கள், கலை மன்றங்கள் போன்றவற்றை உருவாக்கி நடன நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல்.
03. வருடாந்த பாடசாலை வைபவங்களாகக் கொண்டாடப்படும் பரிசளிப்பு விழா, கலை விழா, தமிழ்மொழித் தின விழா, இலக்கிய விழா, சமய விழாக்கள், நடன மன்றத்தின் நடனப் போட்டிகள் ஆகியவற்றில் மாணவர் பங்குபற்றுவதற்கு மட்டு மன்றி தாமே சுயமாக நடன நிகழ்ச்சிகளை ஆக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதல்.
04. நடனம் தொடர்பான கண்காட்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டு மாணவர்களின் ஆக்கத் திறன் வளர்ச்சிக்கும், இரசிக்கும் தன்மைக்கும் வழி வகுத்தல்.
05. பரதக் கலைக்குத் தொண்டாற்றிய தமிழகக் கலைஞர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுதல்.
06. கலை மன்றங்கள், ஆலயங்கள். தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் மாணவர் பங்குபற்றக் களம் அமைத்துக் கொடுத்தல்.

## 05. தர உள்ளீடுகள் (கற்பித்தல் உபகரணங்கள்)

பரத நாட்டியப் பாடக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது கீழ்க்காணப்படுகின்ற தர உள்ளீடுகளைப் பயன்படுத்துவது விரும்பத்தக்கதாகும்.

- தட்டுக்கழி, தட்டுப்பலகை, நட்டுவாங்கதாளம்
- ஒலிப்பதிவுக்கருவி
- ஒலிப்பதிவு நாடா
- ஒளிப்பதிவுக்கருவி
- ஒளிப்பதிவு நாடா
- வானொலி
- விளக்கப்படங்கள், சஞ்சிகைகள்
- சுருதிப்பெட்டி
- தம்புரா
- மிருதங்கம்
- டோல்கி
- தபேலா
- உடுக்கை
- தவில்
- பிடில்
- வீணை
- நடனம் தொடர்பான நூல்கள்
- ஆடை ஆபரணங்கள்
- ஒப்பனைப் பொருட்கள்
- புகழ் பெற்ற நாட்டியக் கலைஞரின் படங்கள்
- பாய், வெண்கட்டி, கோலாட்டக் கழிகள், பின்னல் கோலாட்டக் கயிறுகள்
- வீடியோ பெட்டிகைப் பதி கருவி
- தொலைக்காட்சிக் கருவி
- பிரிஸ்டல் அட்டைகள்

# 06. கற்றல் - கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடு

## தரம் - 06
## பாடத்திட்டம்

| பிரதான தேர்ச்சிகள் | | பாடவேளைகள் |
|---|---|---|
| 1.0 | நயத்தல் | 08 |
| 2.0 | ஆக்கத்திறன் | 15 |
| 3.0 | செய்ம்முறை | 51 |
| 4.0 | அறிமுறை | 10 |
| 5.0 | கலாசாரப்பின்னணி | 06 |
| | மொத்தம் | 90 |

# பாடத்திட்டம் - தரம் 6

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 1.0<br>பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்து தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார். | | |
| 1.1<br>வெகுசனத் தொடர்பு ஊடகங்கள் மூலம் வெளிக்கொணரப்படும் கலை நிகழ்ச்சிகளில் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார். | • சிறுவர் நிகழ்ச்சிகள்<br>- அபிநய நடனம்<br>- தனி நடனம் | 03 |
| 1.2<br>பரத நாட்டியம் மற்றும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பாட சாலைக் கலை விழாக்களில் இடம் பெறும் நடன நிகழ்ச்சிகளையும் இனங்கண்டு இரசித்தவற்றை வெளிப்படுத்துவார். | • தைப்பொங்கல் விழா<br>* கும்மி<br>* கோலாட்டம் | 01 |
| | • புதுவருடப் பிறப்பு விழா | 01 |
| 1.3<br>கலை நிறுவனங்களினால் நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகளிலும் நடனப் போட்டிகளில் இடம்பெறும் நிகழ்ச்சிகளிலும் தாம் நயந்தவற்றைக் கூறுவார். | • ஆடை அணிகள்<br>* பஞ்ச கச்சம்<br>* கொஸ்டியும் (Costume) | 03 |
| 2.0<br>சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமியக்கலை தொடர்பான ஆக்கச் செயற்பாடு-களையும் வெளிக்கொணர்வார். | | |
| 2.1<br>இயற்கைச் சூழலில் உள்ள உயிரினங்களைப்போல் பாவனை செய்து காட்டுவார். | • விலங்கினங்கள்<br>* குரங்கு<br>* யானை<br>* முயல்<br>* புலி<br>* சிங்கம் | 04 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 2.2<br>சிறிய அபிநயப் பாடல்களுக்கும் கதைப் பாடல்களுக்கும் அமைவான அபிநயங்களைத் தாமே அமைத்து ஆடியும் பாடியும் காட்டுவார். | • அபிநயப் பாடல்கள்<br>* புருவி ஒன்று மரத்திலே<br>* பூமகளின் புன்னகை<br>* சின்னஞ்சிறு கண்ணன் | 03 |
| | • கதைப் பாடல்<br>* முயலாரின் அகங்காரம் | 03 |
| 2.3<br>கிராமியப் பாடல்களுக்கு ஏற்ற எளிய பாத அசைவுகளைத் தாமாகவே அமைத்து ஆடற் கோலங்களை ஆற்றுகைப் படுத்துவார். | • நடனக் கோலங்கள்<br>* வட்டத்தில் நடத்தல்<br>* வட்டத்தில் ஓடுதல்<br>* வட்டத்தில் துள்ளித் துள்ளி ஓடுதல்<br>* நகைகொட்டி ஆடுதல்<br>* வரிசையாக நின்று ஆடுதல்<br>* அரை வட்டத்தில் ஆடுதல்<br>* V வடிவத்தில் ஆடுதல் | 03 |
| 2.4<br>வருட இறுதியில் மாணவர்கள் தமது ஆக்கங்களை மேடை யேற்றுவார். | | 02 |
| 3.0<br>பரத நாட்டிய பாத அசைவுகளையும் கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார். | | |
| 3.1<br>பரத நாட்டியத்திற்குரிய வணக்க முறையினையும் தியான சுலோகத்தையும் அபிநயித்துக் காட்டுவார். | • வணக்கம்<br>* நமஸ்காரம் | 03<br>02 |
| 3.2<br>ஒற்றைக்கை முத்திரைகளையும் இரட்டைக்கை முத்திரைகளையும் அவற்றின் விநியோகத்தையும் செய்து காட்டுவார். | • தியான சுலோகம்<br>* முத்திரைகள் | 05 |
| | • ஒற்றைக் கை முத்திரைகள் (1 - 28)<br>• விநியோகம் - பதாகம் | 03<br>02 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 3.3<br>இலகுவான சந்தங்களுக்கேற்ப லயத்துடன் அசைந்து காட்டுவார். | • நடைகள்<br>* சதுஸ்ரம்<br>* திஸ்ரம் | 05 |
| 3.4<br>பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டுவார். | • தட்டடவுகள் 1 - 8<br>• நாட்டடவுகள் 1 - 4 | 15<br>08 |
| 3.5<br>தாளத்திற்கேற்ப ஆடிக்காட்டுவார். | • தாளம்<br>* ஆதி<br>* ரூபகம் | 02 |
| 3.6<br>வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக்காட்டுவார். | • கிராமிய நடனம்<br>* கும்மி<br>* கோலாட்டம் | 06 |
| 4.0<br>பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக் கருக்களையும் விளக்கு வார். | | |
| 4.1<br>பரத நாட்டிய வணக்கம், தியான சுலோகம் ஆகியவற்றில் பயன் படுத்தப்படும் முத்திரைகளை இனங் கண்டு குறிப்பிடுவார். | • வணக்கம் (நமஸ்காரம்)<br>* கடகாமுகம்<br>* ஷிகரம்<br>* சதுரம்<br>* அஞ்ஜலி | 02 |
| | • தியான சுலோகம்<br>* ஸுசி<br>* பிறளம்பம்<br>* முகுளம்<br>* ஷிவலிங்கம்<br>* சிலிட்ட காங்கூலம்<br>* ஹம்ஸாஸ்யம்<br>* திரிலிங்கம்<br>* சந்திரகலா<br>* சதுரம்<br>* அலபதுமம்<br>* அஞ்ஜலி | 02<br><br>03 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 4.2<br>ப, ர, த என்னும் மூன்றெழுத்துக்களும் குறிக்கின்ற சொற்கள் (பரத இலட்சணம்) எவை எனக் கூறுவார். | • பரத இலட்சணம்<br>* ப - பாவம்<br>* ர - ராகம்<br>* த - தாளம் | 01 |
| 4.3<br>ஒற்றைக் கை முத்திரைகளின் பெயர்களைக் கூறி, பதாக முத்திரை விநியோகத்தையும் கருத்துடன் கூறுவார். | • ஒற்றைக் கை முத்திரைகள் (1 - 28) | 03 |
| 4.4<br>பரத நாட்டியத்தின் தோற்றத்திற்குரிய பின்னணியை விளக்குவார். | • நடனத்தின் தோற்றம்<br>* உலகியல் வரலாறு | 02 |
| 5.0<br>பரத நாட்டியம், கிராமிய நடனம் என்பவை பற்றியும் இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும் இவற்றின் இசை பற்றியும் விபரிப்பார். | | |
| 5.1<br>இலங்கையின் பாரம்பரிய நடனங்களான பரத நாட்டியம், கண்டிய நடனம், றுஹுனு நடனம், சபரகமுவ நடனம் ஆகியவற்றின் கலாசாரப் பின்னணியை அறிந்து விளக்குவார். | • பரதத்தின் தோற்றம்<br>• 5ஆவது வேதம் | 02 |
| 5.2<br>சமய விழாக்களிலும் சமூக விழாக்களிலும் இடம்பெறும் கிராமிய நடனங்களினதும் அவற்றின் இசையினதும் கலாசார பின்னணியை அறிந்து விளக்குவார். | • தைப்பொங்கலுக்குரிய நடனம்<br>* கும்மி<br>* கோலாட்டம் | 02 |
| 5.3<br>இலங்கையிலுள்ள பிரதேசங்களுக்குரிய கூத்து வகைகளின் கலாசாரப் பின்னணியை விளக்குவார். | • மன்னார் நாட்டுக்கூத்து<br>* வடபாங்கு<br>* தென்பாங்கு | 02 |

# பகுதி - II

# செயற்பாடுகளின் தொடரகம்

## கற்றல் - கற்பித்தல் முறைமை

இப்பாடத் திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாக மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உரு வாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செய்கைகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த 'ஊடு கடத்தும் பங்களிப்பு' (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட 'கொடுக்கல் வாங்கல் பங்களிப்பு' (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படு கின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்தி மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

ஊடுகடத்தும் பங்களிப்பில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே ஆசிரியர் மாறியுள்ளார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர் களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர்- மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக் கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாட லாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கேவல (கருத்துநிலை) விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாறுகிறார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலும், இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங் களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு 'உருமாற்றப் பங்களிப்பு' (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள பாடத் திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகளின் தொடரகம் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி 'ஈடுபடுத்தும்படி' (Engagement Step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சாடைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்க. இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக் குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல் / படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், காட்சி அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல் / பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள் / கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations), கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் இங்கு அடங்கும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஆய்வு முறையான கண்டுபிடிப்புகளுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு ஆய்வு ரீதியான பேறுகளைக் கண்டு பிடிப்பதற்குச் (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப் படையாகக் கொண்டாகும். பிரசினத்தோடு தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாடலுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப் படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான முடிவுப் பொருளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டுபிடிப்புக் களுக்கான விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு (Eleboration) மாணவர்களுக்குச்
சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் . பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறா யினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப் படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை உருமாற்றுப் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற் றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரதேசத்தின்போது கொடுக்கல் வாங்கல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்குவதற்கும் இடம் ஏற்படுகிறது.

புதிய ஆயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது உருமாற்றுப் பங்களிப்புக்கு மேலதிகமாக ஊடுகடத்தும் பங்களிப்பிலும், கொடுக்கல் வாங்கல் பங்களிப்பிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

இப்புதிய பாடத்திட்டத்திற்கேற்ப பரத நாட்டிய படத்திற்கான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் போது பின்வரும் அணுகுமுறைகளையும் கையாள்வது விரும்பத்தக்கதாகும்.

- கற்றல் என்பது கட்டுருவாக்கச் செயன்முறையாக அமையவேண்டும் என்பதே இன்றைய கல்வி நிலைப்பாடாகும். எனவே தான் கற்பித்தலைப் பார்க்கிலும் கற்றலுக்கு முன்னுரிமை வழங்கப்படல்.

- கிடைக்கக்கூடிய வளங்களை கவனத்திற்கொண்டு அவற்றுக்கேற்ப மேலதிக செயற்பாடுகளை ஆசிரியர் மேற்கொள்ளல்.

- தேர்ச்சி மட்டத்தை நோக்கி மாணவர்கள் அடைந்துள்ள அடைவை இனங்கண்டு தேவையான இடங்களில் மீளவலியுறுத்தல்.

- மாணவர்களின் சுய ஆக்கங்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தல்.

- குழுவாக இயங்குவதற்கு மாணவர்களுக்கு ஊக்கம் அளித்தல்.

- கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துதல்.

- வெகுசனத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துதல்.

- மாணவர்களுடன் கலந்துரையாடி மாணவர்கள் சுயமாகச் செயற்படுவதற்கு நெறிப்படுத்துதல்.

- பாடத்திட்டம், ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி, துணைநூல் இம்மூன்றினையும் ஒன்றிணைத்து கற்பித்தல் - கற்றல் பணிகளில் ஆசிரியர் ஈடுபடல்.

# தரம் - 06

**தேர்ச்சி 1.0** : பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்து தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்1.1.** : வெகுசனத் தொடர்பு ஊடகங்களின் மூலம் வெளிக் கொணரப்படும் கலை நிகழ்ச்சிகளில் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.1** : சிறுவர் நிகழ்ச்சிகள், அபிநய நடனம், தனிநடனம் ஆகியவற்றில் நாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவோம்.

**நேரம்** : 02 மணித்தியாலங்கள். (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : - வரைபடங்கள், புகழ்பெற்ற நாட்டியக் கலைஞரின் படங்கள், தொலைக்காட்சிப் பெட்டி ஒளிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக்கருவி, செயற்பத்திரம் 1.1.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**
**படி 1.1.1**

- தொலைக்காட்சியில் இடம்பெறுகின்ற நடன வகைகளுள் தனி நடன வகை எவை எனவும் அபிநய நடன வகையைச் சார்ந்தவை எவை எனவும் கலந்துரையாடுங்கள்.
- கீழ்வரும் விடயங்களைக் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நடத்துங்கள்.

> - அபிநய நடனங்களில் பயன்படுத்தப்படும் ஒற்றைக் கை முத்திரைகளும் அதில் இடம்பெறும் அபிநயங்களும்.
> - அபிநய நடனங்கள் தனியாகவும் ஆடலாம், பலர் சேர்ந்து ஆடப்படக் கூடிய நடனமுமாகும்.
> - தனி நடனமானது பரதம் சார்ந்ததாக அமையலாம்.
> - தனி நடனம் என்பது கிராமியம் சார்ந்ததாகவும் அமையலாம்.

(30 நிமிடங்கள்)

**படி 1.1.2**

- வகுப்பறையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரிக்குக.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தைக் கொடுத்து அதனைப் பூரணப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடச் செய்க.
- ஒவ்வொரு குழுவும் சரியாகச் செயற்படுவதை அவதானித்து உறுதிப்படுத்துக.

**(40 நிமிடங்கள்)**

## படி 1.1.3

- ஒவ்வொரு குழுவினரும் தாம் குறிப்பிட்டவற்றை வகுப்பறையில் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு சமர்ப்பித்ததை ஏனைய குழுக்களும் அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்குக.
- மாணவர் குறிப்பிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீள்வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

> - தொலைக்காட்சியில் காண்பிக்கப்படும் சிறுவர் நிகழ்ச்சிகளுக்கும், பாடசாலைக் கலைவிழாக்களில் இடம்பெறும் சிறுவர் நடன நிகழ்ச்சிகளுக்கும் இடையே காணப்படுகின்ற ஒருமைப்பாடு.
> - பாடசாலைக் கலை விழாக்களில் இடம்பெறும் தனி நடனங்களுக்கும் வேறு கலை மன்றங்களில் நடத்தப்படும் தனி நடனங்களுக்கும் இடையே காணப்படுகின்ற வேறுபாடு.
> - தனி நடனங்களைப் பட்டியல் படுத்தல்

(50 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- கலை மனறங்களில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கும், பாடசாலையில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கும் இடையே காணப்படும் விசேட தன்மைகளைக் கூறுவார்.
- அபிநய நடனங்களில் மாணவர்கள் கண்டுகொண்ட சிறப்பம்சங்களை வெளிக்கொணர்வார்
- தனி நடனங்களில் காணப்படும் சிறப்பம்சங்களைப் பட்டியற்படுத்துவார்.

# செயற்பத்திரம் - 1.1.2

## சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.

குழு - I

- பரத நாட்டியம் மற்றும் கிராமிய நடன நிகழ்ச்சிகளில் நீங்கள் கண்டு இரசித்தவற்றைக் குறிப்பிடுங்கள்.

குழு - II

- சிறுவர் அபிநய நடனங்களில் நீர் இரசித்த பகுதிகளைச் செய்து காட்டுங்கள்.

குழு - III

- பரத நாட்டியத்திற்குப் பயன்படுத்தப்பட்ட ஆடை அணிகளைக் குறிப்பிடுங்கள்.
- கிராமிய நடனங்களுக்கு அணியப்பட்ட ஆடை, ஆபரணங்களைப் பட்டியல் படுத்துங்கள்.
- சிறுவர் நடனங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட ஒப்பனை, ஆடை, ஆபரணங்கள் முதலியவற்றைக் கூறுங்கள்.

**தேர்ச்சி 2.0** : சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமியக் கலை தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : இயற்கைச் சூழலிலுள்ள உயிரினங்களைப் போல பாவனை செய்து காட்டுவார்.

**செயற்பாடு 2.1** : விலங்கினங்களான குரங்கு, யானை போல பாவனை செய்வோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள். (2 பாடவேளை)

**தர உள்ளீடு** : தட்டுக்கழி, தட்டுப்பலகை, மிருகங்களின் படங்கள், செயற்பத்திரம் 2.1.2

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு.

### படி 2.1.1

- பாவனை செய்தல் என்றால் என்ன என வினவுதல்.
- குரங்கு, யானை ஆகியவற்றின் செயற்பாடுகள் பற்றிக் கேட்டு மாணவர் கூறுவதற்கு இடமளியுங்கள்.
- மிருகக் காட்சிசாலையில் நாம் பார்க்கக் கூடிய மிருகங்கள் பற்றி வினவுதல்.
- ஒரு தபாற்காரனைப் போல அல்லது ஒரு குறி சொல்லும் பெண் போலப் பாவனை செய்து பார்த்தல்.
- பின்வரும் விடயங்களிற் கலந்துரையாடுங்கள்.

◆ ஒருவரைப் போலவோ அல்லது பறவை, மிருகம் போலவோ செய்து காட்டல் பாவனை எனப்படும்.
◆ குரங்கு, யானை செயற்பாடுகள்.
◆ குரங்கு:- - தாவுதல், குட்டி காவுதல், உணவுண்ணுதல், குட்டியைப் பற்றிக் கொண்டு தாவுதல்.
◆ யானை:- - நடக்கும் முறை, நீராடுதல், பாரந்தூக்குதல், கிளைகளை முறித்தல்

(20 நிமிடங்கள்)

### படி 2.1.2

- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து, செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தலுக்கேற்ப செயற்படுகின்றனரா என உறுதிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

படி 2.1.3

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டைச் செய்து காட்டச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொருவரும் இயங்குவதை உறுதிப்படுத்தி ஆலோசனை வழங்குங்கள்.
- குழுச் செயற்பாட்டின் செயன்முறையின் பின் அது பற்றிய விமர்சனங்களைக் கூற இரு குழுவினருக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் செயன்முறைப் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.

◆ மிருகங்களின் பாவனைகளினூடாக எமது நடிப்பாக்கச் செயற்பாட்டினை மெருகேற்றச் செய்தல்.
◆ விலங்குகளின் உணவுண்ணும் முறை, நடத்தைக் கோலங்கள் என்பவற்றை நன்கு மனத்தில் நிறுத்தி அம்மிருகங்களாகவே தம்மைப் பாவித்துப் பாவனை செய்தல்.
◆ அவதானிப்பதன் மூலம் பாவனை செய்யும் திறனை விருத்தி செய்தல்.

(30 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- இயற்கைச் சூழலில் காணப்படும் உயிரினங்களை இனங்காண்பார்.
- மிருகங்களின் செயற்பாடுகளை இனங்காண்பார்.
- மிருகக்காட்சிசாலையில் பார்த்த மிருகங்களை இனங்கண்டு கூறுவார்.
- குரங்கு, யானை ஆகியவற்றின் செயல்களைப் பாவனை செய்வார்.

# செயற்பத்திரம் 2.1.2

## சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.

### குழு -I

- குரங்கு உணவுண்ணும் முறையைப் பாவனை செய்க.
- கிளையைப் பற்றிப் பிடிக்கும் குரங்கின் செயலைச் செய்து காட்டுக.
- குரங்கு குட்டியைக் காவும் செய்முறையைப் பாவனை செய்க.
- மரக்கிளையில் தாவும் மந்தியைப் போல பாவனை செய்க.

### குழு - II

- யானை உணவுண்ணும் முறையைப் பாவனை செய்க.
- மிருகக்காட்சிசாலையில் யானைகள் நடனமாடுவதைச் செய்து காட்டுங்கள்.
- யானை நீராடும் செய்கையைப் பாவனை செய்க.

**தேர்ச்சி 2.0** : சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமியக் கலை தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : இயற்கைச் சூழலிலுள்ள உயிரினங்களைப் போல பாவனை செய்து காட்டுவார்.

**சேயற்பாடு 2.2** : விலங்கினங்களான முயல், புலி, சிங்கம் போல பாவனை செய்வோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள். (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : - தட்டுக்கழி, தட்டுப்பலகை, மிருகங்களின் படங்கள், செயற்பத்திரம் 2.2.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 2.2.1**

- ஏற்கனவே பாவனை செய்த குரங்கு, யானை ஆகியவற்றை நினைவு கூர்தல்.
- முயல், புலி, சிங்கம் ஆகியவற்றின் படங்களைக் காட்சிப்படுத்தல்.
- குரங்கு, யானை ஆகியவற்றில் இருந்து இவை வேறுபடும் தன்மைகளைக் கூற மாணவருக்கு இடமளியுங்கள்.
- முயல், புலி, சிங்கம் ஆகியவற்றின் செயற்பாடுகளைக் கலந்துரையாடுங்கள்.

| | | |
|---|---|---|
| ◆ முயல் | - | அதன் மென்மை, பயந்த சுபாவம், ஒலியை அறியும் அதன் செயற்பாடு, முயல் பாய்தல். |
| ◆ சிங்கம் | - | கர்ச்சித்தல், கம்பீரம், உணவுண்ணும் முறை. |
| ◆ புலி | - | இரையைத் தாக்கும் முறை, பயமற்ற சுபாவம், சிங்கத்திற்கும், இதற்கும் இடையே உள்ள வேறுபாடு |

(20 நிமிடங்கள்)

**படி 2.2.2**

- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திலுள்ள அறிவுரைக்கேற்ப செயல்படுவதை உறுதிப்படுத்தி ஆலோசனை வழங்கி முழுமைப்படுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

**படி 2.2.3**

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டைச் செய்து காட்டச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொருவரும் இயங்குவதை உறுதிப்படுத்தி ஆலோசனை வழங்குங்கள்.
- ஒரு குழு செயற்பாட்டில் ஈடுபடும் போது மறுகுழு அவற்றை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் செயன்முறைப் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.

> - முயல், புலி, சிங்கம் ஆகிய விலங்குகளின் உணவுண்ணும்முறை, நடத்தைக் கோலங்கள் என்பவற்றை நன்கு மனதில் நிறுத்தி அம்மிருகங்களாகவே தம்மைப் பாவித்துப் பாவனை செய்தல்.
> - அவதானிப்பதன் மூலம் பாவனை செய்யும் திறனை விருத்தி செய்தல்.
> - பாவனை செய்வதன் மூலம் நடனத்திறன், செயற்றிறனை நன்கு விருத்தி செய்தல்.

(20 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- முயல் ஒலியை அறியும் செயன்முறை, பாயும் செய்கை ஆகிய அதன் இயல்புகளை அறிந்து குறிப்பிடுவார்.
- முயலின் செய்கைகளை பாவனை செய்வார்.
- சிங்கத்தின் செய்கைகளைப் பாவனை செய்வார்.
- புலிகளின் செய்கைகளை பாவனை செய்வார்.

## செயற்பத்திரம் 2.2.2

**சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**

### குழு -I

- முயல் உணவுண்ணும் செயன்முறைகளைப் பாவனை செய்க.
- முயல் ஒலியை அறியும் போது அதன் செய்முறையைப் பாவனை செய்க.
- முயல் பாயும் செயன்முறையைப் பாவனை செய்க.

### குழு - II

- சிங்கம் உணவுண்ணும் முறையைப் பாவனை செய்க.
- சிங்கத்தின் நடையைப் பாவனை செய்க.
- சிங்கம் கர்ச்சிக்கும் போது எவ்வாறிருக்கும் என்பதைப் பாவனை செய்க.

### குழு -III

- புலி உணவுண்ணும் செயன்முறைகளைப் பாவனை செய்க.
- புலி நடந்து செல்லும் முறையைப் பாவனை செய்க.
- உணவைப் பிடிக்கும் செயலைப் பாவனை செய்க.

**தேர்ச்சி 2.0** : சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமியக் கலை தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : கிராமிய பாடல்களுக்கேற்ற எளிய பாத அசைவுகளைத் தாமாகவே அமைத்து ஆடற் கோலங்களை ஆற்றுகைப் படுத்துவார்.

**செயற்பாடு 2.3** : கிராமியப் பாடலொன்றை ஆடற்கோலங்களுடனும், பாத அசைவுகளுடனும் ஆற்றுகைப்படுத்துவோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள். (2 பாடவேளை)

**தர உள்ளீடு** : - பாடல் எழுதப்பட்ட அட்டை, ஒலிப்பதிவுக் கருவி, ஒலிப்பதிவு நாடா, தட்டுக்கழி, தட்டுப்பலகை. செயற்பத்திரம் 2.3.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**
**படி 2.3.1**

- கிராமிய கலைகள் எவை? அவற்றின் பண்புகள் யாவை? என வினவி, ஆசிரியர் தெரிவு செய்த கிராமியப் பாடலொன்றை (உ-ம்:- ஏதாவதொரு கிராமியப் பாடல்) ஆசிரியர் பாடிக் காட்டியோ, ஒலிப் பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர் பாடலைச் செவிமடுக்க இடமளியுங்கள்.
- செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையிற் கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

- கிராமியக் கலைகளின் அறிமுறை அறிவினை மீட்டல், அவற்றின் பண்புகளைக் கேட்டு அவற்றின் பல்வேறு வகைகளையும் கூறுங்கள்.
- பாடலை ஆசிரியர் காட்சிப்படுத்தி, பகுதி பகுதியாகப் பாடலை ஆசிரியர் பாட மாணவர் தொடர்ந்து பாட வழிகாட்டுங்கள்.
- ஆசிரியரும், மாணவரும் இணைந்து பாடுதல்.
- பாடலின் நடைக்கேற்பச் சுவடுகளையும், பாத அசைவுகளையும் எவ்வாறு அமைக்கலாம் என மாணவருக்கு ஆலோசனை வழங்குங்கள்.
- இயல்பாக, எளிய முறையில் வட்டத்தில் குறிப்பிட்ட பாடலுக்கு ஏற்றவிதத்தில் நடக்கவும், பின்னர் ஓடவும், துள்ளித் துள்ளி ஓடவும் செய்யுங்கள்.
- அப்பாடலுக்கு ஏற்ற விதத்தில் கைகொட்டி ஆடவும். வரிசையாக நின்று ஆடவும் ஆலோசனை வழங்குங்கள்.
- தாமாகவே ஆடியவாறு அரைவட்டம் "V", வடிவம், "X" வடிவம் போன்ற கோலங்களில் ஆடிய பின்னர் வேறு கோலங்களில் ஆடவும் முயற்சி செய்யத் தூண்டுங்கள்.
- U வடிவங்களில் ஆடி மேடைக்கு வெளியே அழகாக வெளியேறி ஒழுங்காக பாடலை நிறைவு செய்யுமாற்றலை ஊக்குவியுங்கள்.

(40 நிமிடங்கள்)

**படி 2.3.2**

* வகுப்பிலுள்ள மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
* சகல குழுவும் கிராமியப் பாடலை ஆடிப் பயிற்சி செய்கின்றனரா என உறுதி செய்து முழுமைப்படுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

**படி 2.3.3**

* ஒவ்வொரு குழுவும் தனித்தனியாகவும், குழுவாகவும் பாடலைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
* பல்வேறு கோலங்களில் ஆடுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
* ஒரு குழு செயன்முறை நிகழ்த்தும் போது ஏனைய குழுக்கள் தமது விமர்சனங்களை முன்வைக்க இடமளியுங்கள்.
* பின்வரும் விடயங்கள் நன்கு பதியும் வண்ணம் கலந்துரையாடுங்கள்.

> ◆ தாளத்திற்கேற்றபடி இயங்கி அசைவுகளை மேற்கொள்ளல் அவசியம்.
> ◆ பரத நாட்டிய அடவுகள் இடம்பெறாமல் எளிய பாதச் சுவடுகளில் கோலங்களில் இயங்குதல்.
> ◆ இரசித்து, மகிழ்ச்சியாக கூட்டுறவினைப் பேணும் வகையில் சீராக, ஒத்திசைந்து கோலங்களில் ஆடிப்பாடுதல் அவசியம்.
> உ-ம் :- U,V.X வடிவங்கள்

(20 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

* கிராமியப் பாடல்களுக்கேற்ப கிராமிய பண்புகளுடன் ஆடும் திறனை வெளிக் காட்டுவார்.
* தாமாகவே அசைவுகளை அமைத்து ஆடுவார்.
* ஆசிரியர் வழிகாட்டலில் கூட்டுறவு மனப்பாங்குடன் செயற்படுவார்.
* ஒவ்வொருவரும் ஏனையோரின் கருத்துக்களுக்கும் மதிப்பளித்து ஏற்றுக் கொண்டோ அன்றிப் பண்புடன் மாற்று ஆலோசனைகளை வழங்கியோ ஒத்திசைவதற்கு முன்வருவார்.

## செயற்பத்திரம் 2.3.2

**சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**

❖ படி 2.3.1 இல் குறிப்பிடப்பட்ட வண்ணம் ஆசிரியரால் தெரிவு செய்யப்பட்ட பாடலை ஆடற் கோலங்களுடனும், பாத அசைவுகளுடனும் ஆடுங்கள்.
❖ பின்வரும் விடயங்களைக் கவனியுங்கள்.
- எளிய பாதச் சுவடுகளை ஆடுதல்.
- கோலங்களில் ஆடுதல்.
- தாளத்துடன் பாடி ஆடுதல்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பரத நாட்டியத்திற்குரிய வணக்க முறையினை செய்து காட்டுவார்.

**செயற்பாடு 3.1** : நடனத்திற்குரிய செய்முறைகளை இலகுவாக்கும் வகையில் ஆரம்ப உடற்பயிற்சிகளைச் செய்வோம்.

**நேரம்** : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளை)

**தர உள்ளீடு** : - தட்டுக்கழி, தட்டுப்பலகை, எளிய பாத நிலைகள் ஒட்டப்பட்ட பட அட்டை, செயற்பத்திரம் 3.1.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.1.1**

- நடனமாடுவதற்கு நாம் எமது அங்கங்களை அசைக்க வேண்டும். அதற்குத் தயாராக சில அங்க அசைவுகளையும், பாத அசைவுகளையும் பயிற்சி செய்வதன் மூலம் நடனம் கற்றலை இலகுவாக்கிக் கொள்ள முடியும்.
- நடனமாடுவதற்குரிய செய்முறையை இலகுவாக்கும் வகையிலான ஆரம்ப உடற்பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

- ◆ நாட்டியம் செய்வதற்கு வேண்டிய ஆரம்ப உடற்பயிற்சிகளை ஆசிரியர் செய்து காட்டல். (விரல்களின் அசைவு, கை அசைவு மூடுதல் திறத்தல், துள்ளல், உடலைச் சமனிலையில் வைத்து நிற்றல், சமபாத அரைமண்டி, முழுமண்டி போன்ற பாத நிலைகள்)
- ◆ முத்திரைகளைப் பிடிப்பதற்கு ஆரம்பப் பயிற்சியாக விரல்களை அசைத்தல், மணிக்கட்டினைச் சுழற்றுதல் போன்ற கைக்குரிய பயிற்சிகளை அளித்தல்.
- ◆ உடல் சமநிலையில் நிற்க இடுப்பில் கை வைத்து நிற்றல், கால்களைச் சமமாக வைத்தல், நின்ற நிலையில் துள்ளல் போன்ற பயிற்சிகளைச் செய்தல்.
- ◆ அரைமண்டி, முழுமண்டி நிலைக்குரிய ஆரம்பப் பயிற்சியாக பாதத்தினை 180 பாகையில் வைத்து அரைமண்டி நிலையில் இருத்தல். பின்பு விரல் நுனிகளில் பாதங்களை வைத்து முழுமண்டி நிலைக்குச் செல்லுதல். முழுமண்டி நிலையில் உடலை சமநிலையில் வைத்திருக்கப் பயிற்சி செய்தல்.

(40 நிமிடங்கள்)

**படி 3.1.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- சகல குழுவும் சரியாகப் பயிற்சி செய்கின்றனரா என உறுதி செய்து முழுமைப்படுத்துக.

(40 நிமிடங்கள்)

படி 3.1.3

- ஒவ்வொரு குழுவும் தனித்தனியாக உடற்பயிற்சியினைச் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவர்களை அதனை அவதானித்து தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

> ◆ நடனமாடுவதற்குத் தயாராக சில உடற்பயிற்சிகளை செய்தல் வேண்டும்.
> ◆ சமபாத, அரைமண்டி, முழுமண்டி ஆகிய பாத நிலைகளையும் கை அசைவுகளையும் செய்து காண்பிக்குக.

(40 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- துள்ளல், நடத்தல், முழுமண்டி நிலையில் இருந்து எழுந்து நிற்றல் போன்றவற்றைச் செய்து காட்டல்.
- இது போல வேறு வகையான பாத அசைவுகளையும் பயிற்சி செய்யத் தூண்டப்படுவார்.
- முழுமண்டி, அரைமண்டி நிலைகளில் தொடர்ச்சியாக அசைவின்றி நிற்றல்.


## செயற்பத்திரம் 3.2.2


**சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**

- அரைமண்டி, முழுமண்டி நிலைகளைச் செய்து காட்டுங்கள்.
- சமபாதம் நின்ற நிலையில் துள்ளுதல் போன்ற செயற்பாடுகளைச் செய்து காட்டுங்கள்
- அரைமண்டியின் வேறு பெயர்களைக் கூறுங்கள்.
- முழு மண்டிக்குரிய மறு பெயரைக் கூறுங்கள்

## பாத நிலைகள்


சமபாதம்


ஆயதம்


பாத நிலைகள்
சம பாதம்
ஆயதம் (அர்த்த மண்டலி)
சுவஸ்திகம்
சுவஸ்திகம்
ப்ரேங்கண மண்டலம்

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைககளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** . பரத நாட்டியத்திற்குரிய வணக்க முறையினையும், தியான ஸ்லோகத்தினையும் அபிநயத்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.1** : நாட்டியத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் செய்யப்படும் நமஸ்காரத்தினை பக்தியுடனும், அங்க சுத்தத்துடனும் செய்வதற்குக் கற்றுக் கொள்வோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : - தட்டுக்கழி, தட்டுப்பலகை, எளிய பாத நிலைகள் முத்திரைகள் வரையப்பட்ட பட அட்டை, செயற்பத்திரம் 3.1.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**
**படி 3.1.1**

- நமஸ்காரம் நாட்டியப் பயிற்சியின் ஆரம்பத்திலும், முடிவிலும் ஆடப்பட வேண்டியதன் அவசியத்தைக் கூறுதல்.
- பூமாதேவி, குரு, தெய்வம் ஆகியோருக்கு வணக்கம் செலுத்துவதாக அமைகின்றதன் முக்கியத்துவத்தைக் கூறுதல்.
- நமஸ்காரத்தினை முழுமையாக ஆசிரியர் செய்து காட்டுதல்.
- நமஸ்காரத்தில் இடம்பெறும் அஸம்யுத, ஸம்யுத கஸ்தங்களையும் பாத பேதங்களையும் குறிப்பிடுதல்.
- மேற்குறிப்பிட்ட விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

- நாட்டியத்தில் நமஸ்காரமானது பயிற்சியின் ஆரம்பத்திலும், முடிவிலும் இடம்பெறல் வேண்டும். இது சம்பிரதாயமாகும்.
- நடனமாடும் போது பூமியைக் கால்களால் உதைக்கின்றோம். அதனைப் பொருத்தருளுமாறு பூமாதேவியை மன்னிப்புக் கோருமுகமாக நமஸ்காரம் செய்யப்படுவது சம்பிரதாயமாக வழங்கப்பட்டது என்பதைக் கூறுதல்.
- குரு, தெய்வம் என்போருக்கும் நமஸ்காரம் செய்வதாகவும் அமைந்திருக்கிறது என்பதைக் கூறுதல்.
- நமஸ்காரத்தினை ஆசிரியர் முழுமையாகச் செய்து காட்டுதல்.
- ஆசிரியர் பகுதி பகுதியாகச் செய்து காட்ட மாணவர்கள் அதனைப் பின்பற்றி ஆடச் சந்தரப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் அங்க சுத்தம், முத்திரைகள், பாதநிலை என்பனவற்றை சரியான நிலையில் பிடித்து முழுமையாக நமஸ்காரத்தினை செய்து காட்டுவதற்கு நெறிப்படுத்துங்கள்.
- ஆசிரியரும், மாணவரும் இணைந்து நமஸ்காரத்தினை முழுமையாகச் செய்தல்.
- மாணவர்களைக் குழுவாகவும், தனியாகவும் தெரிவு செய்து ஆடிக் காட்டச் சந்தரப்பம் வழங்குங்கள்.

(40 நிமிடங்கள்)

## படி 3.1.2

- மாணவர்களின் தொகைக்கேற்ப சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தை வழங்கி மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்..

(20 நிமிடங்கள்)

## படி 3.1.3

- ஒவ்வொரு குழுவும் தமக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பத்திரத்தை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் முன்வைத்த செயற்பாட்டை ஏனைய குழுவினரும் அதனை அவதானித்து தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்
- பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

- நாட்டியப் பயிற்சியின் ஆரம்பத்திலும் முடிவிலும் நமஸ்காரம் செய்வது சம்பிரதாய வழக்கம்
- பூமாதேவியிடம் மன்னிப்புக் கோரும் முகமாக நமஸ்காரம் செய்யப்படுகின்றது.
- நமஸ்காரம் செய்வதற்குப் பிரயோகிக்கப்படும் அஸம்யுத கஸ்தங்களாவன கடகாமுகம், சிகரம், சதுரம் என்பதைக் கூறுதல்.
- நமஸ்காரத்தில் இடம்பெறும் ஸம்யுத ஹஸ்தம் அஞ்சலி ஆகும்.
- நமஸ்காரம் செய்வதற்குப் பிரயோகிக்கப்படும் பாதநிலைகள் சமபாதம் முழுமண்டி என்பதாகும்.
- நமஸ்காரத்திற்குரிய முத்திரைகளைச் சரியான நிலையில் பிடித்து அங்க சுத்தத்துடன் ஆடுதல்.

(20 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- நாட்டியத்தில் நமஸ்காரத்தின் முக்கியத்துவத்தினை கூறுவார்.
- நமஸ்காரத்தில் இடம்பெறும் அஸம்யுத, ஸம்யுத கஸ்தங்களைக் கூறுவார்.
- நமஸ்காரம் செய்யும் போது பிரயோகத்திலுள்ள பாதநிலைகள் எவையென்பதைக் கூறுவார்.
- நமஸ்காரத்தினை அங்க சுத்தத்துடன் ஆடிக் காட்டுவார்.

# செயற்பத்திரம் 3.1.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.

- நமஸ்காரம் செய்வதன் நோக்கத்தினைக் கூறுக.
- நமஸ்காரத்தில் இடம்பெறும் அஸம்யுத கஸ்தங்கள் எவையென்பதைக் குறிப்பிடுக.
- நமஸ்காரத்தில் இடம்பெறும் ஸம்யுத ஹஸ்தம் யாது?
- நமஸ்காரத்தில் இடம்பெறும் பாதபேதங்களைக் குறிப்பிடுக.
- நமஸ்காரத்தினை அங்க சுத்தத்துடன் ஆடிக் காட்டுக.

பின்னிணைப்பு

நமஸ்காரம் செய்யும் பொழுது இடம்பெறும் பாத நிலைகளும், பயன்படுத்தப்படும் முத்திரைகளும்.



01



02



03



04



05

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : பரத நாட்டியத்திற்குரிய வணக்க முறையினையும், தியான ஸ்லோகத்தினையும் அபிநயத்துடன் ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2** : தியான ஸ்லோகத்தினை அபிநயிக்கக் கற்றுக் கொள்வோம்.

**நேரம்** : 03 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (5 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : - தட்டுக்கழி, தட்டுப்பலகை, எளிய பாத நிலைகள் முத்திரைகள் ஒட்டப்பட்ட பட அட்டை, செயற்பத்திரம் 3.2.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.2.1**

- எளிய பாத நிலைகள், முத்திரைகள் ஒட்டப்பட்ட பாட அட்டையை காட்சிப்படுத்துக.
- தியான ஸ்லோகத்திற்குரிய ஸ்லோகத்தினை ஆசிரியர் கூறிக் கொண்டே அபிநயித்துக் காட்டி மாணவரை அவதானிக்கச் செய்க.

◆ தியான ஸ்லோகம் சிவன் மேல் பாடப்பட்டது என்பதைக் கூறுதல்.
◆ தியான ஸ்லோகத்தினை முழுமையாக உச்சரித்துக் காட்டுதல்.
◆ தியான ஸ்லோகத்தின் கருத்தினைக் கூறுதல்.
◆ தியான ஸ்லோகத்தினை சரியான உச்சரிப்புடன் ஆசிரியர் கூற மாணவர் அதனைத் தொடர்ந்து கூறச் சந்தரப்பம் வழங்குங்கள்.
◆ ஆசிரியர் தியான ஸ்லோகத்தினை அங்க சுத்தத்துடனும், அபிநயத்துடனும் அபிநயித்துக் காட்ட மாணவர்கள் அதனைப் பின்பற்றிச் செய்வதற்கு சந்தரப்பம் வழங்குங்கள்.
◆ தியான ஸ்லோகத்தில் அஸம்யுத, ஸம்யுத அபூர்வ முத்திரைகளைக் கூறுதல்.
◆ மாணவர்களைக் குழுக்களாகவும் எழுமாற்றாகவும், தெரிவு செய்து தனியாகவும் ஸ்லோகத்தினை அபிநயித்துக் காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.
◆ சகல மாணவர்களும் ஸ்லோகத்தின் உச்சரிப்பினை பிழையின்றிக் கூறி, அபிநயம் செயற்வதற்கு வழிப்படுத்துக.
◆ தியான சுலோகத்தில் மொத்தம் பதினொரு முத்திரைகள் பயனபடுத்தப்படுகின்றன என்பதைக் கூறுவார்.

(80 நிமிடங்கள்)

**படி 3.2.2**

- மாணவர்களின் தொகைக்கேற்ப சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தை வழங்கி மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

## படி 3.2.3

- ஒவ்வொரு குழுவும் தமக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பத்திரத்தை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் முன்வைத்த செயற்பாட்டை ஏனைய குழுவினரும் அதனை அவதானித்து தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> ◆ தியான ஸ்லோகம் வடமொழியில் அமைந்துள்ளது. சிவன் மேல் பாடப்பட்டுள்ளது.
> ◆ ஸ்லோகத்தினை உச்சரிப்புப் பிழையின்றி பாவத்துடனும், அங்க சுத்தத்துடனும் அபிநயத்துக் காட்டல் வேண்டும்.
> ◆ தியான ஸ்லோகத்தினை அபிநயத்துக்காட்ட பிரயோகிக்கும் அஸம்யுத ஹஸ்தங்களாவன சூசி, முகுளம், அலபத்மம், சந்திரகலா, சதுரம் ஹம்ஸாஸ்யம்.
> ◆ ஸ்லோகத்தினை அபிநயிக்கப் பிரயோகிக்கும் ஸம்யுத ஹஸ்தங்களாவன சிவலிங்கம், அஞ்சலி.
> ◆ ஸ்லோகத்தினை அபிநயிக்கப் பிரயோகிக்கப்படும் அபூர்வ முத்திரைகள், ப்ராலம்பம், திரிலிங்கம், காங்கூலபேதம் / சிலிட்ட காங்கூலம்

(80 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- தியான ஸ்லோகத்தினை உச்சரிப்புப் பிழையின்றிக் கூறுவார்.
- தியான ஸ்லோகத்தினை அங்க சுத்தத்துடனும், பாவத்துடனும் அபிநயித்துக் காட்டுவார்.
- ஸ்லோகத்தில் பிரயோகிக்கப்படும் அஸம்யுத, ஸம்யுத, அபூர்வ முத்திரைகளை இனங்கண்டு கூறி அவற்றைப் பிடித்துக் காட்டுவார்.

# செயற்பத்திரம் - 3.2.2 - I

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- தியான ஸ்லோகத்தினைப் பிழையின்றிக் கூறுவார்.
- தியான ஸ்லோகத்தினை பாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயித்துக் காட்டுவார்.

# செயற்பத்திரம் -II

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- தியான ஸ்லோகத்தில் குறிப்பிடப்படும் தெய்வம் யார் என்பதைக் கூறுவார்.
- தியான ஸ்லோகம் எந்த மொழியில் எழுதப்பட்டுள்ளது என்பதைக் கூறுவார்.
- தியான ஸ்லோகத்தில் பிரயோகிக்கப்படும் அஸம்யுத ஹஸ்தங்களைப் பிடித்துக் காட்டுவார்.
- ஸ்லோகத்தினை அபிநயிக்கப் பிரயோகிக்கும் ஸம்யுத ஹஸ்தங்களைக் கூறிப் பிடித்துக் காட்டுவார்.
- ஸ்லோகத்தினை அபிநயிக்கப் பிரயோகிக்கும் அபூர்வ முத்திரைகளைக் கூறிப் பிடித்துக் காட்டுவார்.
- தியான ஸ்லோகத்தில் பயன்படுத்தப்படும் முத்திரைகளின் எண்ணிக்கையைக் கூறுவார்.

பின்னிணைப்புப் பத்திரம்

## தியான ஸ்லோகம்

ஆங்கிகம் புவனம் யஸ்ய வாச்சிகம்
ஸர்வ வாங்மயம் /
ஆஹார்யம் சந்திர தாராதி தம் நுமஹ்
சாத்விகம் சிவம் //

**கருத்து:-**
உலகத்தை உடம்பாகவும், பேசும் பாசைகள் யாவும் ஒரே பாசையாகவும் சந்திர நட்சத்திரங்களை ஆடை ஆபரணங்களாகவும் அணிந்த பரிசுத்தமான சிவபெருமானே, உம்மை வணங்குகின்றேன்.

| சொல் - பொருள் | | | | உபயோகிக்கப்படும் முத்திரைகள் |
|---|---|---|---|---|
| 1.0 | ஆங்கிகம் | - | உடம்பு | பிரளம்பம் |
| 2.0 | புவனம் | - | உலகம் | சூசி |
| 3.0 | யஸ்ய | - | யாருடைய | பிரளம்பம் |
| 4.0 | வாச்சிகம் | - | பேச்சு | முகுளத்தில் இருந்து அலபத்மம் வலது கை மட்டும் |
| 5.0 | ஸர்வ | - | எல்லாம் | சூசி |
| 6.0 | வாங்மயம் | - | மொழி | திரிலிங்கத்திலிருந்து சந்திரகாலா |
| 7.0 | ஆஹார்யம் | - | ஆடை, ஆபரணம் | சதுரம் |
| 8.0 | சந்திர | - | சந்திரன் | அலபத்மம் |
| 9.0 | தாராதி | - | நட்சத்திரம் | காங்கூலபேதம்/சிலிட்ட காங்கூலம் |
| 10.0 | தம் | - | உம்மை | சூசி |
| 11.0 | நுமஹ | - | வணங்குதல் | அஞ்சலி |
| 12.0 | சாத்விகம் | - | பரிசுத்தமான | ஹம்சாஸ்யம் |
| 13.0 | சிவம் | - | சிவன் | சிவலிங்கம் |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : ஒற்றைக் கை முத்திரைகளையும், இரட்டைக் கை முத்திரைகளையும் பதாக விநியோகத்தையும் செய்து காட்டுவார்.

**செயற்பாடு 3.2** : ஒற்றைக்கை முத்திரைகளை உச்சரிப்புப் பிழையின்றிக் கூறி, அபிநயித்துக் காட்டுவோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (2 பாடவேளை)

**தர உள்ளீடு** : - ஒற்றைக்கை முத்திரைகள் / அஸம்யுத ஹஸ்தங்கள் ஒட்டப்பட்ட பட அட்டை, ஒலிப்பதிவு நாடா, பதிகருவி, செயற்பத்திரம் 3.2.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.2.1**

- ஒற்றைக்கை முத்திரைகள் ஒட்டப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- இனங்கண்ட முத்திரைகளைத் தாமாகவே அபிநயிக்க முயற்சிப்பதற்கு இடமளித்தல்.
- பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

- ஒரு பாவத்தை விளக்குவதற்கு அல்லது ஒரு கருத்தை வெளியிடுவதற்கு விரல்களைப் பல்வேறு விதமாக மாற்றியமைத்தலே முத்திரைகள் ஆகும். இம்முத்திரை அடவு, அபிநயம் இரண்டிற்கும் முக்கியமானது. முத்திரை மொழிக்குச் சமமானது. இம்முத்திரை ஒற்றைக்கை முத்திரை, இரட்டைக் கை முத்திரை என இருவகைப்படும்.
- ஒற்றைக் கை முத்திரைகளை ஆசிரியர் செய்து காண்பிக்க மாணவர்கள் அதனைப் பின்பற்றி செய்து காண்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- மாணவர்கள் முத்திரைகளைச் செய்யும் போது விரல்களை நேர்த்தியாகப் பிடித்து செய்வதற்கு நெறிப்படுத்துக.
- மாணவர்களும், ஆசிரியரும் இணைந்து ஒற்றைக்கை முத்திரைகளைக் கூறி, செய்து காண்பித்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகவும் எழுமாறாகவும், தனியாகவும் தெரிவு செய்து முத்திரைகளின் பெயர்களைக் கேட்டல்.

(20 நிமிடங்கள்)

**படி 3.2.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- சகல மாணவர்களும் ஒற்றைக்கை முத்திரைகளைச் சரியாகச் செய்து காண்பிக்கிறார்களா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்,

(30 நிமிடங்கள்)

படி 3.2.3

- குழுவாகவும், தனியாகவும் ஒற்றைக்கை முத்திரைகளைச் செய்து காட்டச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒவ்வொரு மாணவரும் ஒற்றைக்கை முத்திரைகளை செய்து காட்டும் போது ஏனைய மாணவர்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - நாட்டியத்தில் அடவு, அபிநயம் இரண்டிற்கும் முக்கியமான முத்திரைகள், விரல்களின் பல்வித நிலைகளாகும். இதனை ஹஸ்தங்கள் எனவும் அழைப்பர். இக்கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு முத்திரைகள் பிரயோகிக்கப்படுகின்றன.
> - ஒற்றைக்கை முத்திரைகளை சரியான உச்சரிப்புடன் கூறி விரல்களை நேர்த்தியாக வைத்து செய்து காட்டுக.

(30 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- முத்திரை என்றால் என்ன என்பதைக் குறிப்பிடுவார்.
- ஒற்றைக்கை முத்திரைகள் 1-28 வரை கூறுவார்.
- முத்திரைகளை இனங்கண்டு கூறுவார்.
- முத்திரைகளுக்கு இடையேயுள்ள வேறுபாட்டினைக் கூறுவார்.
- ஒற்றைக் கை முத்திரைகளைச் செய்து காட்டுவார்.

# செயற்பத்திரம் - 3.2.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- ஒற்றைக்கை முத்திரைகளைச் சரியான உச்சரிப்புடன் கூறி நேர்த்தியாகப் பிடித்துச் செய்து காட்டுக.

(1) பதாக ஹஸ்தத்தில் மோதிர விரலை மடிக்க வரும் ஹஸ்தத்தினை செய்து காட்டுக.

(2) மலர்ந்த தாமரை, இதனைக் குறிக்கும் முத்திரையைச் செய்து காட்டுக.

(3) மூன்றாவது கடகாமுக கஸ்தத்தைப் பிடித்துக் காட்டுக.

(4) முஷ்டிஹஸ்தத்தில் பெருவிரலை நீட்ட வரும் முத்திரையைச் செய்து காண்பிக்குக.

கீழ்வரும் முத்திரைகளை ஆசிரியர் செய்து காட்ட மாணவர்கள் இனங்கண்டு கூறல்.

| | | |
|---|---|---|
| ⌘ சிம்ம முகம் | ⌘ சதுரம் | ⌘ ஹம்ஸாஸ்யம் |
| ⌘ மயூரம் | ⌘ அராளம் | ⌘ மிருகசீர்ஷம் |
| ⌘ அலபத்மம் | ⌘ கடகாமுகம் | ⌘ சிகரம் |


பின்னிணைப்புப் பத்திரம்

## ஒற்றைக்கை முத்திரைகள் / அஸம்யுத ஹஸ்தாஹ

பதாகஸ் திரிப்பதாகோ அர்த்தபதாகஹ் - கர்த்தரீமுகஹ. /
மயூராக்யோ அர்த்த சந்த்ரஸ்ச அராள - ஷுகதுண்டகஹ //
முஷ்டிஸ்ச சிகராக்யஸ்ச கபித்த - கடகாமுகஹ /
சூசி சந்திரகலா பத்மகோஷ - ஸர்ப்பஷிரஸ்ததா //
மிருக ஷீர்ஷ சிம்ஹ முகஹ காங்கூலஸ்ச - அலபத்மகஹ /
சதுரோ பிறமறஸ்சைவஹம்சாஸ்யோ - ஹம்சபக்ஷகஹ //
சந்தம்ஷோ முகுளஸ் சைவ தாம்ரசூட - த்ரி சூலகஹ /

| இல | முத்திரையின் பெயர் | - | கருத்து |
|---|---|---|---|
| 01 | பதாகம் | - | கொடி |
| 02 | திரிப்பதாகம் | - | மரம் |
| 03 | அர்த்தபதாகம் | - | அரைக்கொடி |
| 04 | கர்த்தரீமுகம் | - | கத்தரிக்கோல் |
| 05 | மயூரம் | - | மயில் |
| 06 | அர்த்தசந்திரன் | - | அரைமதி |
| 07 | அராளம் | - | வளைந்து |
| 08 | ஷுகதுண்டம் | - | கிளிமூக்கு |
| 09 | முஷ்டி | - | முட்டிகை |
| 10 | சிகரம் | - | மலை உச்சி |
| 11 | கபித்தம் | - | விளாம்பழம் |
| 12 | கடகாமுகம் | - | வளையின் வாய் |
| 13 | சூசி | - | ஊசி |
| 14 | ஸந்திரகலா | - | அரைச்சந்திரன் |
| 15 | பத்மகோஷம் | - | பழம் |
| 16 | சர்ப்பஷிரஸ் | - | பாம்புப் படர்க்கை |
| 17 | மிருகசீர்ஷம் | - | மான் தலை |
| 18 | சிம்ஹமுகம் | - | சிங்கத்தின் முகம் |
| 19 | காங்கூலம் | - | பழம் |
| 20 | அலபத்மம் | - | மலர்ந்த தாமரை |
| 21 | சதுரம் | - | சாதுர்யம் |
| 22 | பிறமறம் | - | தேனீ |
| 23 | ஹம்ஸாஸ்யம் | - | அன்னத்தின் அலகு |
| 24 | ஹம்ஸபஷம் | - | அன்னத்தின் சிறகு |
| 25 | ஸந்தம்ஷம் | - | இடுக்கி |
| 26 | முகுளம் | - | மொட்டு |
| 27 | தாம்ரசூடம் | - | கோழி |
| 28 | த்ரிசூலம் | - | திரிசூலம் |

## ஒற்றைக்கை முத்திரைகள் / அஸம்யுத ஹஸ்தாஹ (1-28)




உரு 16
16


உரு 17
17


உரு 18
18


உரு 19
19


உரு 20
20


உரு 21
21


உரு 22
22


உரு 23
23


உரு 24
24


உரு 25
25



உரு 26
26



உரு 27
27


உரு 28
28











**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : ஒற்றைக் கை முத்திரைகளையும், இரட்டைக் கை முத்திரைகளையும் பதாக விநியோகத்தையும் செய்து காட்டுவார்.

**செயற்பாடு 3.2.** : பதாக ஹஸ்த விநியோகத்தினைக் கற்றுக் கொள்வோம்.

**நேரம்** : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : - பதாக ஹஸ்த விநியோகம் எழுதப்பட்ட ஸ்லோக அட்டை,

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.2.1**

- பதாக விநியோகத்திற்குரிய ஸ்லோகத்தினை ஆசிரியர் கூறிக் கொண்டே அபிநயித்துக் காட்டி மாணவரை அவதானிக்கச் செய்தல்.
- பதாக விநியோகத்தினையும், அவற்றின் கருத்துக்களையும் கூறுதல்.
- பதாக விநியோகத்தினைச் சரியான முறையில் அபிநயித்துக் காட்டுதல்.
- ஸ்லோகத்தினை அங்கசுத்தத்துடனும் பாவத்துடனும் அபிநயித்தல் வேண்டும் என்பதை கூறுதல்.
- மேற்குறிப்பிட்ட விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் செயற்பாட்டினை நிகழ்த்துங்கள்.

> - பதாக ஹஸ்தத்தின் பிரயோகம் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய அவசியத்தை விளக்கிக் கூறுதல்.
> - பதாக ஹஸ்த விநியோகத்தை சரியான முறையில் உச்சரித்துக் காட்டுதல்.
> - ஆசிரியர் பதாக ஹஸ்த விநியோகத்தினை சரியான உச்சரிப்புடன் கூறி மாணவர்களும் செய்து காட்டச் சந்தர்ப்பம் வழங்கல்.
> - ஆசிரியரும் மாணவரும் இணைந்து அபிநயித்தல்.
> - மாணவர்கள் முழுமையாகக் கூறி அபிநயித்துக் காட்டுதல்.
> - மாணவர்களைக் குழுக்களாகவும் எழுமாறாகவும், தனியாகவும் தெரிவு செய்து அபிநயித்துக் காட்டச் சந்தர்ப்பம் வழங்குக.
> - சகல மாணவர்களும் ஸ்லோகத்தினை உச்சரிப்புப் பிழையின்றிக் கூறி அபிநயித்துக் காட்டுகின்றார்களா என்பதை உறுதி செய்க.

(30 நிமிடங்கள்)

**படி 3.2.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தை வழங்கி மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 3.2.3

- ஒவ்வொரு குழுவும், தமக்கு வழங்கப்பட்ட செயற்பத்திரத்தை முன்வைக்கச் சந்தர்ப்பத்தை வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் முன்வைத்த செயற்பாட்டை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்ததை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - பதாக ஹஸ்த விநியோகத்திற்குரிய ஸ்லோகம் வடமொழியில் அமைந்துள்ளது என்பதை கூறுவார்.
> - பதாக ஹஸ்த விநியோகத்திற்குரிய ஸ்லோகத்தைத் தெளிவான உச்சரிப்புடன் கூறுவார்.
> - விநியோகத்தினை கருத்துக்கேற்ப பாவத்துடனும் அங்க சுத்தத்துடனும் அபிநயித்துக் காட்டுவார்.
> - அதன் கருத்துக்களைக் கூறுவார்.

(50 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- பதாக ஹஸ்த விநியோகத்திற்குரிய ஸ்லோகத்தினை உச்சரிப்புப் பிழையின்றிக் கூறுவார்.
- பதாக ஹஸ்த விநியோக ஸ்லோகத்தின் கருத்துக்களைக் கூறுவார்.
- பதாக ஹஸ்த விநியோகத்தினை கருத்துக்கேற்ப அபிநயித்துக் காட்டுவார்.

# செயற்பத்திரம் - 3.2.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- பதாக ஹஸ்த விநியோக ஸ்லோகத்தினை உச்சரிப்புப் பிழையின்றிக் கூறி பாவத்துடனும், அங்க சுத்தத்துடனும் அபிநயித்துக் காட்டுக.
- எழுமாறாகச் சில விநியோகங்களை ஆசிரியர் கூற மாணவர் அதன் பொருளை கூறி அபிநயித்துக் காட்டுவார்.

  உ-ம்:- நத்யாம், கண்டனே, சந்திரிகாயாம், பிரதாபே, ஆசீர்வாதம் சிந்தெளது, மாஸே, வர்ஷதினே
- ஆசிரியர் அபிநயித்துக் காட்ட மாணவர்கள் அதனை இனங்கண்டு கூறுவார்.

  உ-ம்:- நாட்டியாரம்பே, அமர மண்டலே, வாயெள, தரங்ககே, அங்கராககே, தாளபத்ரேச்ச, கட்கரூபஸ்ய தாரனே, சபதே சாப்பி, ஆத்மார்த்தே

# பதாகஹஸ்த விநியோகஹ

நாட்டியாரம்பே வாரிவாஹே வனே வஸ்துநிஷேதனே /
குசஸ்தலே நிஷாயாம் ச நத்யாம் அமரமண்டலே //
துரங்கே கண்டநே வாயௌ ஷயனே கமனோத்யமே /
ப்ரதாபேச ப்ரஸாதேச சந்திரிகாயாம் கனாதபே //
கவாட்டபாட்டனே ஸப்தவிபக்த்யர்த்தே தரங்ககே /
வீதிப்ரவேஷபாவேபி சமத்வேச அங்கராககே //
ஆத்மார்த்தே ஸபதேசாப்பி தூஷ்னீம்பாவநிதர்வுனே /
தாளபத்ரேச கேட்டேச்ச திரௌவ்யாதிஸ்பர்ஷனேததா //
ஆஷீர்வாதக்ரியாயாம்ச நிருபஷ்ரேஷ்டஸ்யபாவனே /
தத்ரதத்ரேதிவசனே சிந்தௌது ஸுக்ருதிக்ரமே //
ஸம்போதனே புறோகேபி கட்கருபஸ்ய தாரனே /
மாஸே ஸம்வத்ஸரே வர்ஷதிநே ஸம்மார்ஜனேததா //
ஏவமர்த்யேஷு யுஜ்யந்தே பதாகஹஸ்தபாவனாஹ /

**கருத்து.**

| | | |
|---|---|---|
| **நாட்டியாரம்பே** | - | நடனத்தின் ஆரம்பம் |
| **வாரிவாஹே** | - | மேகங்கள் |
| **வனே** | - | காடு |
| **வஸ்து நிஷேதனே** | - | பொருட்களை வேண்டாம் எனக் கூறல் |
| **குசஸ்தலே** | - | மார்பு |
| **நிஷாயாம்** | - | இரவு |
| **நத்யாம்** | - | நதி |
| **அமரமண்டலே** | - | தேவலோகம் |
| **துரங்கே** | - | குதிரை |
| **கண்டநே** | - | வெட்டுதல் |
| **வாயௌ** | - | காற்று |
| **ஷயனே** | - | நித்திரை - படுத்திருத்தல். |
| **கமனோத்யமே** | - | முன்செல்லல் |
| **ப்ரதாபேச** | - | புகழ்தல் |
| **ப்ரஸாதேச** | - | அனுகூலம் |
| **சந்திரிகாயாம்** | - | நிலவொளி |
| **கனாதபே** | - | கடும் சூரிய ஒளி, வெப்பம் |
| **கவாட்ட பாட்டனே** | - | கதவினை மூடித் திறத்தல். |
| **ஸப்த விபக்த்யர்த்தே** | - | வேற்றுமை உருபுகள் |

| | |
|---|---|
| தரங்ககே | - சிறு அலைகள் |
| வீதிப் ப்ரவேஷபாவேபி | - வீதியில் பிரவேசித்தல் |
| சமத்வேச | - ஸமத்துவம் |
| அங்கராககே | - உடம்பின் அங்கங்களைத் தொடுதல். |
| ஆத்மார்த்தே | - தன்னைக் குறித்தல் |
| ஷபதே | - சபதம், சத்தியம் செய்தல் |
| தூஷ்னீம் பாவநிதர்ஷனே | - அமைதி |
| தாளபத்ரே | - பனை ஓலை, பனை ஓலையில் எழுதுதல் |
| கேடே | - கேடயம் |
| திரௌவ்யாதி ஸ்பர்ஷனே | - பொருட்களைத் தொடல் |
| ஆஷீர்வாதக்ரியாயாம் | - ஆசீர்வதித்தல் |
| நிருபஷ்ரேஷ்டஸ்ய பாவனே | - அரசனைப் போல் பாவனை செய்தல். |
| தத்ரதத்ரேதி வசனே | - இங்கு அங்கு எனல் |
| ஸிந்தௌது | - கடலைகள் |
| ஸுக்ருதிக்ரமே | - நல்ல செயல் |
| ஸம்போதனே | - ஒருவரை விழித்தல் |
| புறோகேபி | - முன்னோக்கிச் செல்லல் |
| கட்கருபஸ்ய தாரனே | - வாளும் கேடயமும் ஏந்தல் |
| மாஸே | - மாதம் |
| ஸம்வத்ஸரே | - வருடம் |
| வர்ஷதினே | - மழை நாள் |
| ஸம்மார்ஜனே | - நிலத்தைத் துப்பரவாக்கல் /துடைப்பத்தால் பெருக்குதல் |

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : பரத நாட்டிய வணக்கம், தியானஸ்லோகம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் முத்திரைகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.1** : நமஸ்காரம் செய்யும் போது பாவிக்கப்படும் முத்திரைகளை அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : நமஸ்காரத்தில் காணப்படும் முத்திரைகள் அடங்கிய படஅட்டை, செயற்பத்திரம் 4.1.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 4.1.1**

- வணக்கஸ்தலங்களில் நாம் மேற்கொள்ளும் செயற்பாடுகளை வினவி, மாணவரின் கருத்துக்களை அறியுங்கள்.
- நமஸ்காரத்தில் காணப்படும் முத்திரைகள் ஒட்டப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.
- நமஸ்காரம் பற்றிய பின்வரும் விடயங்களிற் கலந்துரையாடுங்கள்.

  - நமஸ்காரம் செய்யப்படும் சந்தர்ப்பங்கள்.
  - நமஸ்காரம் செய்வதன் நோக்கம் - தெய்வங்களைக் குறிக்கும். முத்திரைகள், இடம்பெறும் நிலைகள்
  - ஆசிரியர் நமஸ்காரம் செய்யும் போது பயன்படுத்தப்படும் முத்திரைகளைச் செய்து காட்டுவார்.

(20 நிமிடங்கள்)

**படி 4.1.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- பின்னிணைப்புப் பத்திரத்தை வழங்குங்கள்.
- பின்னிணைப்புப் பத்திரத்தை வாசித்து செயற்பத்திரத்திலுள்ள அறிவுரைகளுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என உறுதிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 4.1.3**

- ஒவ்வொரு குழுவும் தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குக.
- ஒரு குழு தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மற்றைய குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களில் கலந்துரையாடுங்கள்.

- நமஸ்காரம், நடனம் ஆரம்பிக்கும் முன்பும் முடிவடைந்த பின்பும் செய்யப்படும்.
- எட்டுத்திக்குப் பாலகர்களிற்கும், எம் நடனக் குற்றங்களைப் பொறுத் தருளுமாறு பூமாதேவிக்கும் நமஸ்காரம் செய்யப்படும்.
- முத்திரைகள், கடகாமுகம், சிகரம், சதுரம் அஞ்சலி என்பன
- இரு கடகாமுக முத்திரைகள் மார்பிற்கு நேராகப் பிடித்தல்
  - வலது இடது கால்களை மாறி மாறி ஒருமுறை தட்டுதல்.
- சிகரமாக மாற்றி இரு கைகளும் தோளைச் சுற்றி முன்னே வருதல்.
- சதுரமாக மாற்றி நிலத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றி அஞ்சலி ஹஸ்தம் பிடித்தல். கால்களைச் சேர்த்து நிற்றல்.
- நிலைகள் - சமநிலை, முழுமண்டி

(30 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- நமஸ்காரம் செய்யப்படும் சந்தர்ப்பங்களை அறிவார்
- வணங்கப்படும் தெய்வங்களையும், நோக்கத்தையும் அறிவார்.
- பாவிக்கப்படும் முத்திரைகளை அறிவார்.
- நமஸ்காரத்தின் போது இடம்பெறும் நிலைகளை அறிவார்.
- நமஸ்காரம் செய்யும் முறையினை அறிவார்.

## செயற்பத்திரம் - 4.1.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

1. நாட்டிய நமஸ்காரம் எப்போது செய்யப்படும்?
2. நமஸ்காரத்தின் போது எத்தெய்வங்களுக்கு வணக்கம் செலுத்தப்படுகின்றது.
3. பூமாதேவியை ஏன் வணங்குகின்றோம்?
4. நமஸ்காரத்தின் போது பாவிக்கப்படும் முத்திரைகள் எவை?
5. நமஸ்காரச் செயன்முறையைக் கூறுக.
6. நமஸ்காரத்தின் போது பாவிக்கப்படும் நிலைகள் எவை?

பின்னிணைப்புப் பத்திரம்

நமஸ்காரம் என்பது நாட்டிய வணக்கம் ஆகும். நடனம் ஆரம்பிக்க முன்பும், முடிவடைந்த பின்பும் நமஸ்காரம் செய்யப்படும். எட்டுத்திக்குப் பாலகர்களிற்கும் பூமாதேவிக்கும் எமது நடனக் குற்றங்களைப் பொறுத்தருளும்படி வேண்டி நமஸ்காரம் செய்கின்றோம்.

கடகாமுகம், சிகரம், சதுரம், அஞ்சலி ஆகிய முத்திரைகள் நமஸ்காரத்தின் போது பாவிக்கப்படுகின்றன. இரு கடகாமுக முத்திரைகளை மார்புக்கு நேராகப் பிடித்து முதலில் வலது காலில் ஒரு தட்டு தட்டப்படும். இரு கைகளும் சிகரமாக மாறித் தோள் வழியாக முன்னே சுற்றி வரும் போது காற்செய்கை கிடையாது சதுரமாக இரு கைகளையும் நிலத்திற் தொட்டுக் கண்களில் ஒற்றும் போது முழு மண்டியில் அமர்தல்; பின்பு எழுந்து சமநிலையாக இரு கால்களையும் சேர்த்து நின்று அஞ்சலி ஹஸ்தம் பிடிக்கும் செய்கையுடன் நமஸ்காரம் நிறைவு பெறும்.

சமநிலை, முழுமண்டி ஆகியன நமஸ்காரத்தின் போது பாவிக்கப்படும் நிலைகளாகும்.

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : ப,ர,த என்னும் மூன்றெழுத்துக்களும் குறிக்கின்ற சொற்கள் (பரத இலட்சணம்) எவையெனக் கூறுவார்.

**செயற்பாடு 4.2** : பாவ, இராக தாளச் சேர்க்கையான பரத இலட்சணத்தை அறிவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (1 பாடவேளை)

**தர உள்ளீடு** : - பரத விளக்கத்துடன் கூடிய விளக்கப் பட அட்டைகள், அபிநயப் படங்கள், நட்டுவாங்கத்தாளம், பத்திரிகைத் துணுக்குகள், செயற்பத்திரம் 4.2.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 4.2.1**

- அபிநயப் படங்கள், விளக்கப்பட அட்டை, பத்திரிகைத் துணுக்குகள் ஆகியவற்றைக் காட்சிப்படுத்தல்.
- பாடலொன்றை ஆசிரியர் பாடி அபிநயித்தல்.
- பின்வரும் விடயங்கள் தெளிவாகும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.

◆ பரத இலட்சணம் - ப, ர, த சேர்க்கையில் இடம்பெறுபவை.
  - பாவம்
  - இராகம்
  - தாளம்

(10 நிமிடங்கள்)

**படி 4.2.2**

- பரத நாட்டிய இலட்சணம் பற்றிய விளக்கத்தை வழங்குங்கள்.
- **மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.**
- **ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தைக் கொடுத்து மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.**

**(20 நிமிடங்கள்)**

**படி 4.2.3**

- ஒவ்வொரு குழுவும், தமக்கு வழங்கப்பட்ட செயற்பத்திரத்தை முன்வைக்கச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- **ஒவ்வொரு குழுவும் முன்வைத்த செயற்பாட்டை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.**
- **மாணவர்கள் முன்வைத்ததை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.**

- பரத இலட்சணம்:- ப என்பது பாவம், ர என்பது இராகம், த என்பது தாளம் என்பதைக் குறிக்கும்.
- பாவம் - உள்ளத்தில் உந்தும் உணர்ச்சியை முகத்தினால் வெளிப்படுத்தல் பாவமாகும்.
- ராகம் - ஸ்வரக் கோர்வைகளால் அழகு செய்யப்பட்டு, கேட்பவர்களின் உள்ளத்தில் ரஞ்சனையைக் கொடுக்கும் நாட்டியத்திற்குத் துணையான கீதமே ராகம் ஆகும்.
- தாளம் - பாட்டின் கால அளவைச் சேர்த்துக் கையினாலோ கருவியினாலோ தட்டுவது தாளம் ஆகும். சங்கீதத்தில் தாளம் பிதா எனப்படும்.

(10 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- பரத இலட்சணம் என்றால் என்ன எனக் கூறுவார்
- இராகம் என்பதன் கருத்தைக் கூறுவார்.
- தாளம் என்பதன் கருத்தைக் கூறுவார்.

# செயற்பத்திரம் - 4.2.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

1. பரத இலட்சணம் என்றால் என்ன?
2. பாவம் என்றால் என்ன?
3. இராகம் என்றால் என்ன?
4. தாளம் என்றால் என்ன?

**தேர்ச்சி 5.0** : பரத நாட்டியம், கிராமிய நடனம் என்பன பற்றியும், இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும் இவற்றின் இசை பற்றியும் விபரிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : இலங்கையின் பாரம்பரிய நடனங்களான பரத நாட்டியம், கண்டிய நடனம், ருகுணு நடனம், சப்ரகமுவ நடனம் ஆகியவற்றின் கலாச்சாரப் பின்னணியை அறிந்து விளக்குவார்.

**செயற்பாடு 5.1** : பரதத்தின் தோற்றம் பற்றிய புராண வரலாற்றினையும், பரத நாட்டியம் 5ஆவது வேதமாக கொள்ளப்பட்டதன் காரணத்தையும் கற்போம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : - கலையுடன் தொடர்புடைய இறைமூர்த்தங்களின் படங்கள், செயற்பத்திரம் 5.1.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 5.1.1**

- நாட்டியக் கலை தெய்வீகக் கலை எனக் கொள்ளப்படுவதற்கு காரணம் யாது? என்பதை மாணவருடன் கலந்துரையாடுக.
- நாட்டியக் கலைக்கும் சமயத்திற்கும் உள்ள தொடர்புகளைக் குறிப்பிடுதல். (நர்த்தன கணபதி, நடராஜ மூர்த்தம் காளிங்க நர்த்தனம், சரஸ்வதி )
- நான்கு வேதங்களையும் குறிப்பிட்டு அவ்வேதங்களில் இருந்து தொகுக்கப்பட்ட விடயங்களைக் குறிப்பிடுதல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> ◆ நாட்டியக் கலையின் புராண வரலாற்றில் இடம்பெற வேண்டியவை..
> - நாட்டியக் கலையின் தோற்றம்
> - நான்கு வேதங்களின் தொகுப்பு
> - தாண்டவத்தின் தோற்றம்
> - லாஸ்யத்தின் தோற்றம்

(20 நிமிடங்கள்)

**படி 5.1.2**

- நாட்டியக் கலையின் புராண வரலாறு பற்றிய விவரணத்தை வழங்குங்கள்.
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தைக் கொடுத்து மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

படி 5.1.3

- ஒவ்வொரு குழுவும், தமக்கு வழங்கப்பட்ட செயற்பத்திரத்தை முன்வைக்கச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்
- **ஒரு குழு முன்வைத்த செயற்பாட்டை ஏனைய குழுவினரும் அவதானித்துக்** கருத்துக் **கூற** இடமளியுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்ததை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - புராண வரலாற்றில் இடம்பெற வேண்டியவை:.
> - நாட்டியக் கலை பிரம்மாவால் படைக்கப்பட்டது.
> - இருக்கு, யசுர், சாம, அதர்வண ஆகிய நான்கு வேதங்களில் இருந்தும் முறையே பாட்டியம், அபிநயம், இசை, இரசம் என்பன தொகுக்கப்பட்டமை.
> - சிவனால் ஆடப்பட்டது தாண்டவம்.
> - பார்வதி தேவியால் ஆடப்பட்டது லாஸ்யம்
> - தண்டு முனிவர் மூலம் பரதருக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது தாண்டவம்
> - நான்கு வேதங்களின் தொகுப்பு ஐந்தாவது வேதம் நாட்டியம்

(30 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- நாட்டியத்தின் புராண வரலாறு பற்றி விளக்குவார்.
- நான்கு வேதங்களையும் குறிப்பிட்டு அவற்றில் இருந்து தொகுக்கப்பட்ட விடயங்களைக் கூறுவார்.
- சிவனால் ஆடப்பட்டது தாண்டவம், பார்வதிதேவியால் ஆடப்பட்டது லாஸ்யம் என்பதை அறிவார்.
- நாட்டியக் கலை ஐந்தாவது வேதமாக எடுத்துக் கொள்ளப்பட்டதன் காரணத்தைத் தெரிவார்.

## செயற்பத்திரம் - 5.1.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

1. நாட்டியக் கலையைப் படைத்தவர் யார்?
2. நான்கு வேதங்களும் எவை?
3. இசை எந்த வேதத்தில் இருந்து தொகுக்கப்பட்டது?
4. ஐந்தாவது வேதமாக எடுத்துக் கொள்ளப்பட்டது எது?
5. தாண்டவம் எனப் பெயர் வரக் காரணம் யாது?
6. தாண்டவம் யாரால் யாருக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது?
7. அபிநயம் எந்த வேதத்தில் இருந்து எடுக்கப்பட்டது?
8. லாஸ்யம் யாரால் ஆடப்பட்டது?

**தேர்ச்சி 1.0** : பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்து தாம் நயத்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : பரத நாட்டியம் மற்றும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பாடசாலைக் கலை விழாக்களில் இடம்பெறும் நடன நிகழ்ச்சிகளையும் இனங்கண்டு இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.2** : புதுவருடப் பிறப்பு விழாவினைப் பற்றி நாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (1 பாடவேளை)

**தர உள்ளீடு** : - தொலைக்காட்சிப் பெட்டி, ஒளி, ஒலி நாடாக்கள், ஒலி, ஒளிப்பதிவுக் கருவிகள், செயற்பத்திரம் 1.2.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 1.2.1**

- புதுவருடப் பிறப்பு ஆடல், பாடல் நிறைந்த தேசிய விழாவாகும். இதனைக் கரும்பலகையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.
- இது தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் கருத்தைப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

◆ புதுவருடப் பிறப்பு விழா என்பது புதியதோர் ஆண்டு மலர்வதைக் குறிக்கும் முகமாகக் கொண்டாடப்படும் விழாவாகும்.
◆ குழு நடனங்கள் கூடுதலாக ஆடப்படும் விழாக்களில் புதுவருடப் பிறப்பு விழாவும் ஒன்றென மாணவர்கள் தெரிந்து கொள்ள வழி வகுக்கவும்.
◆ பரத நாட்டிய ஆடல் உருப்படிகளையும் இவ்விழாவில் இடம்பெறச் செய்ய முடியும் என்பதை மாணவர்களுக்கு அறியச் செய்தல்.
◆ ஒவ்வோர் ஆண்டிலும் சித்திரை மாதத்தில் (14ஆம் திகதி) புது வருடம் பிறக்கின்றது.

(10 நிமிடங்கள்)

**படி 1.2.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தைக் கொடுத்து அதனை பூரணப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையானவிடத்து போதுமான வழிகாட்டல்களை வழங்கி, நேர்த்தியாகச் செய்யப் பண்ணுதல்.

(15 நிமிடங்கள்)

படி 1.2.3

- ஒவ்வொரு குழுவும், தாம் பட்டியல் படுத்தியவற்றை வகுப்பறையில் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- ஒரு குழு சமர்ப்பித்தவற்றை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்கள் பட்டியல்படுத்தியவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

◆ மக்கள் புதுவருடப் பிறப்பன்று மருத்து நீரில் குளித்துப் பின் புத்தாடை புனைந்து கோயிலுக்குச் சென்று வழிபடுவர்.
◆ கோயிலுக்குப் போய் கடவுளைத் தரிசனம் செய்த பின் வீடு வந்து பாற்சோறு, பலகாரங்கள் ஆகியவற்றை உண்பர்.
◆ பாடசாலைக்குச் சென்று அங்கு நடைபெறுகின்ற புதுவருடப் பிறப்பு விழாவில் கலந்து கொள்வர்.
◆ புதுவருடப் பிறப்பு விழாவில் சிலர் பங்குபற்றுவர். வேறு சிலர் பார்வையாளர்களாக இருப்பர்.
◆ சித்திரை மாதத்தில் மலர்கின்ற தமிழ் புத்தாண்டுத் தினத்தன்று சிங்கள மக்களுக்கும் புத்தாண்டு மலர்கின்றது.
◆ ஆங்கில நாட்காட்டியின்படி ஏப்ரல் 14ஆம் திகதி தமிழ் புது வருடம் பிறக்கிறது.

(15 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- புதுவருடம் வருடத்தின் எத்தனையாவது மாதத்தில் எத்திகதியில் பிறக்கிறது என்பதை அறிவார்.
- இலங்கையில் எவ்வின மக்கள் புதுவருடப் பிறப்பைக் கொண்டாடுகின்றனர் என்பதை அறிந்து கொள்வார்.
- புதுவருடப் பிறப்பன்று புத்தாடை புனைந்து கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவார்.

# செயற்பத்திரம் - 1.2.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

பாடசாலையில் நடன ஆசிரியர் குறிப்பிடும் இதர பாடசாலைகளுக்குச் சென்று அங்கு நடைபெறுகின்ற புதுவருடப் பிறப்பு விழாவினையும் அதற்கான ஆயத்தங்களையும் மாணவர்கள் பார்த்தும் தெரிந்தும் வைத்திருந்து அவை பற்றிக் குறிப்புக்களை எழுதுவதற்கு உதவி புரியுங்கள்.

**குறிப்பு :-**

- புதுவருடப் பிறப்பு விழாவன்று நீர் பார்த்:து இரசித்த நடனங்களைப் பட்டியல் படுத்துக.
- புது வருடப் பிறப்பு விழாவன்று இடம்பெற்ற நடன வடிவங்களை வகைப்படுத்துக.

**தேர்ச்சி 1.0** : பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்து நயப்பார்

**தேர்ச்சி மட்டம் 1.2** : பரத நாட்டியம் மற்றும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பாடசாலைக் கலை விழாக்களில் இடம்பெறும் நடன நிகழ்ச்சிகளையும் இனங்கண்டு இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.2** : தைப்பொங்கல் விழாவில் ஆடப்படும் நடனங்களான கும்மி, கோலாட்டம் ஆகியவற்றில் நாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (1 பாடவேளை)

**தர உள்ளீடு** : - ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, ஒளிப்பதிவு நாடா, ஒளிப்பதிவுக் கருவி, வீடியோ பெட்டிகைப் பதிவுக் கருவி, செயற்பத்திரம் 1.2.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**
**படி 1.2.1**

- கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பாடசாலை கலை விழாக்களில் இடம்பெறும் பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் தொலைக்காட்சியில் பார்த்தோ அல்லது நேரில் கண்டோ தாம் இரசித்தவற்றை கூற வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

  - மாணவர்களின் அபிப்பிராயங்களை வெளிக்கொணரச் செய்வதன் மூலம் அவர்களை வழிநடத்துங்கள்.
  - மாணவர்கள் நயந்தவற்றைக் கூறுவர்.
  - மாணவர்களின் கலை ஆர்வத்தை ஆசிரியர் ஊட்டி அவர்களின் விமர்சனங்களை பலரும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் வழிநடத்துவார்.

(10 நிமிடங்கள்)

**ஷபடி 1.2.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தைக் கொடுத்து அதனை பூரணப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையானவிடத்து போதுமான வழிகாட்டல்களை வழங்கி, நேர்த்தியாகச் செய்ய வைத்தல்.

(15 நிமிடங்கள்)

படி 1.2.3

- ஒவ்வொரு குழுவும், தாம் பட்டியல் படுத்தியவற்றை வகுப்பறையில் சமரப்பிக்கச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- ஒரு குழு சமர்ப்பித்தவற்றை ஏனைய குழுவினரும் அவதானித்து தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்கள் பட்டியற்படுத்தியவற்றை ஏனைய குழுவினரும் பின்பற்ற வழிசெய்யுங்கள்.

◆ மாணவர்கள் கிராமிய நடனங்களான கும்மி, கோலாட்டம் ஆகியவற்றை இனங்காண்பர்.
◆ கும்மி, கோலாட்டம் ஆகிய நடனங்கள் குழுவாக ஆடப்பட வேண்டிய நடனங்கள் என்பதை அறிவர்
◆ கும்மி நடனமானது இரு கைகளைக் கொட்டி ஆடப்படுகின்ற நடனம்.
◆ கோலாட்டம் என்னும் கிராமிய நடனத்தை ஆடுவதற்கு கோல்கள் பயன்படுத்தப்படுகின்றன.
◆ கும்மி நடனம் ஆடும் பொழுது வட்டமாகவும், அரை வட்டமாகவும், V வடிவிலும் கோலங்கள் உருவாக்கப்படுகின்றன.
◆ கோலாட்டம் என்னும் கிராமிய நடனத்தை ஆடும் பொழுது நடனக் கோலங்கள் உருவாக்கப்படுகின்றன.
◆ நடனம் ஆடும் பொழுது நடனக் கோலங்களை ஆடலினால் வரைவர்.
◆ குறிப்பிட்ட நடனங்களின் சிறப்பம்சங்கள்.

(15 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- கலை விழாக்களில் கண்டு களிக்கும் கிராமிய நடனங்களான கும்மி, கோலாட்டம் ஆகியவற்றின் சிறப்பம்சங்களைப் பட்டியல் படுத்துவார்.
- கும்மி, கோலாட்டம் ஆகிய நடனங்களைப் பார்த்து தாம் கிரகித்தவற்றைச் செய்து காட்டுவார்.
- இந்நடனங்களுள் தாம் இரசித்தவற்றை ஆடிக் காட்டுவார்.
- கும்மி நடனத்தில் பங்குபற்றிய மாணவர்களின் தொகையைக் குறிப்பிடுவார்
- கோலாட்டம் என்னும் கிராமிய நடனத்தில் பங்குபற்றிய மாணவர்களின் தொகையைக் கூறுவார்.
- கும்மி நடனம் ஆடும் பொழுது எவ்வகையான நடனக் கோலங்கள் உருவாகின்றன எனக் கூறுவார்.
- கோலாட்டத்தில் பங்குபற்றிய மாணவர்கள் உருவாக்கிய நடனக் கோலங்கள் எவை எனக் கூறுவார்.

# செயற்பத்திரம் - 1.2.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

> பாடசாலையில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகளில் கும்மி, கோலாட்டம் ஆகிய நடன வகைகளை இனங்கண்டு குறிப்பிடுங்கள்.

**குறிப்பு :-**

- வேறு பாடாசலையில் இடம்பெறும் கல்லூரி விழா, கலை விழா போன்ற விழாக்களில் இடம்பெறும் கும்மி, கோலாட்டம் ஆகிய கிராமிய நடனங்களை மாணவர்கள் நேரில் பார்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.
- மாணவர்கள் தாம் நேரில் பார்த்து நயந்த நடனங்கள் எவை எவையெனக் கூறுவர்.
- அந்நடனங்களில் தாம் கண்ணுற்ற சிறப்பம்சங்களை வெளிப்படுத்துவார்.

**பின்னிணைப்பு**

## கோலாட்டப் பாடல்

1. கோலாடுவோம் நாமும் பண்பாடுவோம்
மதி ஒளி நிலவினில் கூடி ஆடுவோம் - நாமே

பூலோக மீதிலே பூவையர் நாமே
பூமணம் வீசும் பூலோகம் தனிலே
பூக்களைக் கொய்து நாம் சூடிக் கொள்வோம்
புதுமையான இந்தப் பூங்காவில் நாமே

மயிலினம் கூடி நடனம் ஆடுது
குயிலினம் கூடி இசையும் பாடுது
வெள்ளிபோல் மின்னி மீனினம் துள்ளுது
புள்ளிமான் பாயுது பாங்கியரே பாரீர்

## கும்மிப் பாடல்

2. கும்மியடி தமிழ் நாடு முழுதும் குலுங்கிடக்
கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி
(கும்மியடி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.
(கும்மியடி)

**தேர்ச்சி 2.0** : சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமிய கலை தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : சிறிய அபிநயப் பாடல்களுக்கும், கதைப் பாடல்களுக்கும் அமைவான அபிநயங்களைத் தாமே அமைத்து ஆடியும் பாடியும் காட்டுவார்.

**செயற்பாடு 2.2** : "குருவி ஒன்று மரத்திலே" என்ற அபிநயப் பாடலைப் பாடி ஆடுவோம்.

**நேரம்** : 02 மணித்தியாலம் (3 பாடவேளை)

**தர உள்ளீடு** : - பாடல் எழுதப்பட்ட அட்டை, ஒலிப்பதிவுக் கருவி, ஒலிப்பதிவு நாடா, தட்டுக்கழி, செயற்பத்திரம் 2.2.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 2.2.1**

- "குருவி ஒன்று மரத்திலே" என்னும் சிறுவர் பாடலை ஆசிரியர் பாடிக் காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவர் பாடலைச் செவிமடுக்க இடமளிக்குக.
- செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையிற் கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

◆ "குருவி ஒன்று மரத்திலே" என்ற சிறுவர் பாடல் குந்தலவராளி இராகத்திற், சதுரஸ் ஏகதாளத்தில் திஸ்ர நடையில் அமைந்துள்ளமை.
◆ பாடலை காட்சிப்படுத்தி, பகுதி பகுதியாக ஆசிரியர் பாடலைப் பாடிக் காட்டலும், மாணவர் தொடர்ந்து பாடச் சந்தர்ப்பம் வழங்குதலும்.
◆ ஆசிரியரும், மாணவரும் பாடலை இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுதல்.
◆ மாணவரைக் குழுவாகவும், எழுமாறாகவும், தனியாகவும் பாடச் செய்யுங்கள்.
◆ பாடலின் கருத்திற்கேற்ப முத்திரைகளை அறிமுகப்படுத்துங்கள்.
உ-ம்: குருவி - தாம்பரசூடம், மரம் - திரிப்பாதகம்.
◆ அதேபோல் பாடலின் கருத்தை உணர்த்தி பாவத்தை வெளிக்கொணர்தல்.
◆ பாடலின் கருத்திற்கேற்ப பாவத்துடன் தாமே அபிநயப் பாடலை அபிநயிப்பதற்கு வழிகாட்டுதல்.

(30 நிமிடங்கள்)

**படி 2.2.2**

- **வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.**
- **ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**
- **சகல குழுவும் பாடலைச் சரியாகப் பாடி, ஆடிப் பயிற்சி செய்கின்றார்களா என உறுதிசெய்து முழுமைப்படுத்துக.**

(50 நிமிடங்கள்)

படி 2.2.3

- ஒவ்வொரு குழுவும், குழுவாகவும் தனியாகவும் பாடலைப் பாடச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- அவ்வாறே ஒவ்வொரு குழுவும் தனியாகவும், குழுவாகவும் அபிநயம் செய்யச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு செயற்பாட்டில் ஈடுபடும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - குருவி ஒன்று மரத்திலே என்ற சிறுவர் பாடல் குந்தலவராளி இராகத்தில், சதுஸ்ர ஏகதாளத்தில் திஸ்ர நடையில் அமைந்துள்ளது.
> - பாடலை முழுமையாக இராக, தாளத்துடன் பாடி ஆடுக. (அபிநயிக்குக.)

(40 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- குருவி ஒன்று மரத்திலே என்ற சிறுவர் பாடல் அமைந்துள்ள இராக, தாளத்தைக் குறிப்பிடுவார்.
- பாடலை இராக தாளத்துடன் பாடுவார்.
- இது போன்ற வேறு சிறுவர் பாடல்களையும் இனங்கண்டு பாடுவதற்குத் தூண்டப்படுவார்.
- பாடலை இராக தாளத்துடன் பாடி அபிநயிப்பார்.
- இதே போன்ற வேறு சிறுவர் பாடல்களையும் இனங்கண்டு அபிநயிப்பதற்குத் தூண்டப்படுவார்.

## செயற்பத்திரம் - 2.2.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

> "குருவி ஒன்று மரத்திலே" என்ற பாடலை முழுமையாக இராக தாளத்துடன் பாடி அபிநயிக்குக.

1. குருவி என்பதைக் காட்டப் பிரயோகிக்கும் முத்திரை என்ன?
2. இப்பாடலின் இராகம், தாளம் ஆகியவற்றைக் கூறுக.
3. மரத்தைக் குறிக்க உபயோகிக்கும் முத்திரை யாது?
4. இப்பாடல் எந்த நடையில் அமைந்துள்ளது?
5. இப்பாடல் கூறும் கருத்து யாது?

## சிறுவர் - அபிநயப் பாடல்.

இராகம் :- குந்தலவராளி　　தாளம் :- சதுஸ்ர ஏகம்　　நடை :- திஸ்ரம்

(1) குருவி ஒன்று மரத்திலே
கூடு ஒன்றைக் கட்டியே
அருமைக் குஞ்சு மூன்றையும்
அதில் வளர்த்து வந்தது.

(2) நித்தம் நித்தம் குருவியும்
நீண்ட தூரம் சென்றிடும்
கொத்தி வந்த இரைதனை
குஞ்சு தின்னக் கொடுத்திடும்.

(3) இறைவன் தந்த சிறகினால்
எழுந்து பறக்கப் பழகுவீர்
இரையைத் தேடித் தின்னலாம்
என்று குருவி சொன்னது

(4) நன்று நன்று நாங்களும்
இன்றே பறக்கப் பழகுவோம்
என்று கூறித் தாயுடன்
இரண்டு குஞ்சு கிளம்பின

(5) ஒன்று மட்டும் சோம்பலாய்
ஒடுங்கிக் கொண்டு உடலையே
அன்று கூட்டில் இருந்தது
ஆபத்தொன்று வந்தது

(6) எங்கிருந்தோ வந்தனன்
ஏறி ஒருவன் மரத்திலே
அங்கிருந்த கூட்டையே
அடைய நெருங்கிச் சென்றனன்

(7) சிறகிருந்து பறக்கவே
தெரிந்திடாமல் விழித்திடும்
குருவிக் குஞ்சைப் பிடித்தனன்
கொண்டு வீடு சென்றனன்.

(8) குருவிக் குஞ்சு அவனது
கூட்டில் வாடலானது
அருமை அன்னை உரைத்தது
அதனில் காதில் ஒலித்தது.

## சிறுவர் பாடல்.

இராகம் :- சங்கராபரணம் தாளம் :- ஆதி நடை :- திஸ்ரம்

பூமகளின் புன்னகை போல்
  பூத்திடுவோமே - கம்பன்
பாமணக்கும் தமிழினைப் போல்
  பரிமளிப்போமே - பூமகளின்

வண்ண வண்ண சேலை கட்டி
  மகிழ்ந்திருப்போமே - இந்த
மண்ணகமும் விண்ணகமாய்
  மாறச் செய்வோமே - பூமகளின்

மங்கையர்க்கும் ஆடவர்க்கும்
  மணம் முடிப்போமே - மன்னர்
தங்கமுடி மீது நாங்கள்
  தங்கி வாழ்வோமே - பூமகளின்

கரும்பினிலும் இனிய ரஸம்
  கருதிவைப்போமே - அதை
விரும்பி வரும் நண்பருக்கு
  விருந்தளிப்போமே - பூமகளின்

ஈசனருள் வேண்டி நிதம்
  இணையடி போற்றி - நல்ல
வாசமெழு தூப தீபம்
  வழங்கி நிற்போமே - பூமகளின்

## சிறுவர் பாடல்

தாளம் :- ஆதி

(1) சின்னஞ் சிறு கண்ணன் சிங்கார வண்ணன்
திருட்டுகளும் புரட்டுகளும் செய்வதில் மன்னன்
(சின்ன)

(2) வெண்ணெயும் பாலும் திருடித்தின்பானாம்
வெறுஞ்சட்டியானால் போட்டுடைப்பானாம்
கண்ணாலே ஒன்றையும் காணாதவன்போலவே
அன்னைமுன் நாடகம் ஆடிக் காட்டும்மாயனாம்
(சின்ன)

(3) கன்னியரைக் கண்டால் கண் அடிப்பானாம்
பின்னலைப் பின்னால் பிடித்திழுப்பானாம்
என்னடி கண்ணம்மா எங்கே போறாய் சொல்லம்மா
இனிக்கவே ஒன்று தா ஏனோ கெஞ்சி நிற்பானாம்
(சின்ன)

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** : இலகுவான சந்தர்ப்பங்களுக்கேற்ப லயத்துடன் அசைந்து காட்டுவார்.

**செயற்பாடு 3.3.** : சந்தங்களுக்கேற்ப நடைகளின் வேறுபாடுகளை அறிந்து சதுஸ்ர நடையில் (தாளத்துடன்) லயத்துடன் அசைவுகளை மேற்கொண்டு ஆடுவோம்.

**நேரம்** : 2 மணித்தியாலம் (3 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : - தட்டுக்கழி, தட்டுப்பலகை, டோல்கி போன்ற தாளவாத்தியம், செயற்பத்திரம் 3.3.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**
**படி 3.3.1**

- நாம் நடந்து செல்லும் போது அதிலுள்ள நேர இடைவெளி சமனாக இருப்பதால் அதுவே ஒரு தாளத்தின் பாற்பட்டதெனக் கொள்ளலாம் அவ்வாறே சந்தங்களுக்கு அசைதலையும் மேற்கொள்ளுகின்றோம். அதை எவ்வாறு மேற்கொள்ளலாம் எனக் கேட்டல்.
- தாள வாத்தியத்தின் சதுஸ்ர நடையினை வாசித்தல்.
- தாள வாத்தியத்தை இசைக்கும் பொழுது உங்களுக்கு என்ன தோன்றுகிறது எனக் கேட்டு மாணவர்களின் கருத்துக்களை செவிமடுத்துக் கலந்துரையாடுங்கள்.

◆ அவர்களின் கருத்துக்களுக்கேற்ப ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் அதாவது தகதிமி (சதுஸ்ரம்) என்னும் நடையில் அசைவுகளை மேற்கொள்ளும் முறைகளை ஆராய்தல்.
◆ தகதிமி என்னும் நடையே சதுஸ்ர நடையாகும். இவ்வாறு ஐந்து நடைகள் உள்ளன.
◆ இந்த நடைகளில் இலகுவானதும், பொதுவாகப் பாடல்களில் உபயோகப்படுத்து-வதுமானதாக சதுஸ்ர நடை உள்ளது.
◆ தாளவாத்தியத்தை உபயோகித்தோ அன்றி தட்டுக்கழியினை உபயோகித்தோ சதுஸ்ர நடையினை ஆசிரியர் தட்டியோ, வாசித்தோ காட்டுதல்.
◆ தாளவாத்தியத்திலும், வாசிக்க முன்வருபவரையும், ஏனையோரையும் சதுஸ்ர நடையினை வாசிக்கச் செய்தல்.
◆ அந்த நடைக்கேற்ற சந்தத்தில் மாணவர்களை இயங்க வைத்தல்.
◆ 1ஆம், 2ஆம், 3ஆம் காலங்களில் பல்வேறு வகையான கோலங்களில் ஆடுதல் (திரிகாலத்தில்) கைகளில் இயல்பான அசைவுகளை சேர்த்துக் கால்களில் சதுஸ்ர எண்ணிக்கை தகதிமி சொற்கட்டில் நான்கு வருமாறு பல்வேறு வகைக் கோலங்களில் ஆடுதல்.

(30 நிமிடங்கள்)

படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களைச் சமமான குழுக்களாவோ அன்றி இருவர் இருவராகவோ
  பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- சகல குழுக்களோ அன்றி இருவரோ பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதி செய்து முழுமைப்படுத்துக.

(45 நிமிடங்கள்)

படி 3.3.3

- ஒவ்வொரு குழுவும் ஆடலில் ஈடுபடச் சந்தர்ப்பத்தை வழங்குக.
- பல்வேறு கோலங்களில் ஆடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு செய்முறையை நிகழ்த்தும் போது ஏனைய குழுக்கள் தமது விமர்சனங்களைக் கூற இடமளிக்குக.
- பின்வரும் விடயங்களை நன்கு பதியும் வண்ணம் கலந்துரையாடுக.

- தகதிமி - 4 எண்ணிக்கை - கதுஸ்ர நடையாகும்.
- கதுஸ்ர நடையில் 1ம், 2ம், 3ம், காலங்களில் தாளவாத்தியத்தில் வாசித்தல்.
- அவ்வாறே 1ம், 2ம், 3ம் காலங்களில் ஆடியும், கோலங்களிலும் ஆடுவார்.

(45 நிமிடங்கள்)

கணிப்பீடு மதிப்பீட்டு நியதிகள்

- சதுஸ்ர நடை என்றால் - தகதிமி சொற்கட்டில் நான்கு எண்ணிக்கைகள் என அறிந்து குறிப்பிடுவார்.
- நடைகள் - ஐந்து எனக் குறிப்பிடுவார்
- சதுஸ்ர நடை பொதுவாகப் பாடல்களுக்குப் பயன்படுத்தப்படும் நடையாக உள்ளது என்பதை வெளிப்படுத்துவார்.
- தாள வாத்தியத்தில் 1ஆம், 2ஆம், 3ஆம் காலங்களில் சதுஸ்ர நடையினை வாசிப்பார்.
- 1ஆம், 2ஆம், 3ஆம் காலங்களில் சதுஸ்ர வடிவங்களில் பல்வேறு கோலங்களில் ஆடுவார்.

# செயற்பத்திரம் - 3.3.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

1. சதுஸ்ர நடையின் எண்ணிக்கை யாது?
2. நடைகள் எத்தனை?
3. சாதாரணமாக உருப்படிகள் அமைந்துள்ள நடை யாது?
4. தாள வாத்தியத்தில் திரிகாலத்திற்கு சதுஸ்ர நடையை வாசிக்கவும்.
5. மூன்று காலங்களில் சதுஸ்ர நடையை ஆடவும்
6. பல்வேறு கோலங்களில் ஆடவும்
7. சதுஸ்ர நடையின் சொற்கட்டு யாது?

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** : இலகுவான சந்தங்களுக்கேற்ப லயத்துடன் அசைந்து காட்டுவார்.

**செயற்பாடு 3.3** : சந்தகளுக்கேற்ப நடைகளின் வேறுபாடுகளை அறிந்து சதுஸ்ர நடையில் (தாளத்துடன்) லயத்துடன் அசைவுகளை மேற்கொண்டு ஆடுவோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடம் (2 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : - தட்டுக்கழி, தட்டுப்பலகை, டோல்கி போன்ற தாளவாத்தியம், செயற்பத்திரம் 3.3.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.3.1**

- நாம் சதுஸ்ர நடைக்கு கூறியது போல தாளத்தின் பாற்பட்ட லயத்துடன் கூடிய அசைவுகளெல்லாம் பார்க்க, கேட்க எவ்வாறு இருக்கும் என வினவுதல்.
- ஆசிரியர் திஸ்ர நடையினை தாள வாத்தியத்தில் வாசித்தல். அவ்வாறின்றி ஒழுங்கற்றிருப்பவை செவிக்கின்பம் அளிக்காதென்பதைக் கூறி மாணவர்களின் கருத்துக்களைச் செவிமடுத்தல்.
- ஒழுங்கற்ற நடையில் தாள வாத்தியத்தை வாசித்துக் காட்டி கலந்துரையாடுதல்.

> - திஸ்ர நடையினையும், சதுஸ்ர நடையினையும் ஆசிரியர் மாறி மாறி வாசித்து எண்ணிக்கை மாறுபடுவதை எடுத்துக் காட்டுதல்.
> - என்ன நடையென அறியும் முயற்சியினை தூண்டும் வகையில் கைகளிலோ அன்றி கருவிகளிலோ இரு நடைகளையும் வாசிக்க அல்லது தட்டிப் பார்க்கச் செய்தல்.
> - தகிட என்னும் சொற்கட்டினை உடையதே திஸ்ர நடையாகும்.
> - இது மூன்று எண்ணிக்கை உடையது.
> - விறுவிறுப்பான நடன பாவனைகளுக்கு இந்நடை உபயோகிக்கப்படும்.
> - மூன்று காலங்களிலும் கருவியில் மாணவர்கள் இசைத்தல்.
> - மூன்று காலங்களிலும் ஆடுதல்.
> - பல்வேறு கோலங்களில் ஒருங்கிசைந்து மாணவர்கள் ஆடுதல்.

(20 நிமிடங்கள்)

**படி 3.3.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களைச் சமமான குழுக்களாகவோ அன்றி இருவர் இருவராகவோ தனித்தனியாகவோ செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- சகல குழுக்களோ அன்றி தனியாளோ அன்றி இருவரோ பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதிசெய்து முழுமைப்படுத்துக.

(30 நிமிடங்கள்)

படி 3.3.3

- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும் தனியாகவும் ஆடலில் ஈடுபடச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- பல்வேறு கோலங்களில் ஆடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு செய்முறையை நிகழ்த்தும் போது ஏனைய குழுக்கள் தமது விமர்சனங்களைக் கூற இடமளியுங்கள்.
- மாணவர் கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் நன்கு பதியும் வண்ணம் கலந்துரையாடுங்கள்.

> - திஸ்ர நடை - தகிட என்னும் சொற்கட்டையும் 3 எண்ணிக்கைகளையும் கொண்டது.
> - இவ்விறுவிறுப்பான நடையை திரிகாலங்களிலும் கருவியில் இசைத்தல்
> - அவ்வாறே பல்வேறு , கோலங்களில் மூன்று காலங்களில் ஆடுதல்

(30 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- திஸ்ர நடை என்றால் - தகிட சொற்கட்டில் 3 எண்ணிக்கை என அறிந்து குறிப்பிடுவார்.
- திஸ்ர நடை வேகமான, விறுவிறுப்பான ஆடல்களுக்குப் பயன்படுத்தப்படும் எனக் கூறுவார்.
- தாள வாத்தியத்தில் திரிகாலங்களிலும் திஸ்ர நடையினை வாசிப்பார்.
- பல்வேறு கோலங்களிலும் மூன்று காலங்களில் திஸ்ர நடையில் ஆடலை மேற்கொள்வார்.

# செயற்பத்திரம் - 3.3.2

சகல குழுக்களுக்கும் அல்லது ஒவ்வொரு மாணவர்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

1. திஸ்ர நடையின் எண்ணிக்கை யாது?
2. திஸ்ர நடை எவ்வகையான ஆடலுக்கு உபயோகிக்கப்படும்?
3. திஸ்ர நடையின் சொற்கட்டு என்ன?
4. திரி காலத்தில் கைகளில் திஸ்ர நடையினை தட்டவும்.
5. திரி காலத்தில் திஸ்ர நடையினைப் பல்வேறு கோலங்களில் ஆடவும்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டல்.

**செயற்பாடு 3.4** : 1-2 வரையபன தட்டடவுகளைத் திரிகாலங்களிலும் ஆடுவோம்.

**நேரம்** : 2 மணித்தியாலங்கள் ( 03 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : - அரைமண்டியின் வரைபடம், தாளக் குறியீட்டு அட்டவணை , செயற்பத்திரம் 3.4.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.4.1**

- தட்டடவு என்பது கால்களைத் தட்டிச் செயற்படுவது என்பதைக் கூறுதல்.
- தட்டடவினை அரைமண்டியில் இருந்து தாளத்திற்கு ஏற்ப கால்களை மடித்துத் தட்டுதல் வேண்டும் என்பதை வலியுறுத்தல்.
- தட்டடவு எட்டு வகைப்படும். ஒவ்வொன்றும் அதன் எண்ணிக்கைக்கேற்ப கால்களைத் தட்டுதல் வேண்டும்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கூறி கலந்துரையாடலை நிகழ்த்துக.

◆ நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
◆ 1ஆவது, 2ஆவது தட்டடவுகளை ஆசிரியர் திரி காலங்களிலும் ஆடிக் காண்பித்தல்.
◆ ஆரம்ப அடவுப் பயிற்சி ஆதலால் அரைமண்டி நிலையில் இரு பாதங்களும் நேர் கோட்டில் வைத்துக் கால்களை மடித்துத் தட்டுவதற்குப் பயிற்சி அளிக்குக.
◆ 1ஆவது, 2ஆவது தட்டடவுகளை ஆசிரியர் ஆட மாணவர் அதனைப் பின்பற்றி ஆடச் சந்தர்ப்பம் வழங்குக.
◆ 1ஆவது, 2ஆவது தட்டடவுகளின் சொற்கட்டினை திரி காலத்திலும் கூறுவதற்குப் பயிற்சி அளித்தல்.
◆ அட்வுகளை ஆதி தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவதற்கு வழிப்படுத்துக.
◆ தாள அங்கக் குறியீட்டு அட்டவணையை காட்சிப்படுத்தி, தாள அங்கக் குறியீட்டுடன் எவ்வாறு எழுதுவது என்பதை விளக்கி எழுதுவதற்கு வழிப்படுத்துக.

(40 நிமிடங்கள்)

**படி 3.4.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களைச் சமமான குழுக்களாவோ அன்றி இருவர் இருவராகவோ பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- சகல குழுவினரும் பயிற்சியில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதிசெய்க.

(45 நிமிடங்கள்.)

## படி 3.4.3

- ஒவ்வொரு குழுவும் 1-2 தட்டடவுகளை தாளத்தில் கொலுப்பித்துக் காட்டி, திரிகாலங்களிலும் ஆடச் சந்தர்ப்பம் வழங்குக.
- 1ஆவது, 2ஆவது தட்டடவுகளை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதிக் காட்டுவதற்கு வழிப்படுத்துக.
- தட்டடவு 1ஆவது, 2ஆவது அடவுகளை ஒவ்வொரு குழுவும் செய்து காட்டும் போது ஏனைய குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

> - 1ஆவது தட்டடவினை தாளத்தில் கொலுப்பித்துக் காட்டி திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுக.
> - 2ஆவது தட்டடவினை தாளத்தில் கொலுப்பித்துக் காட்டி திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுக.
> - 1ஆவது, 2ஆவது தட்டடவுகளை தாளாங்கக் குறியீட்டுடன் எழுதுக.

(35 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- தட்டடவு என்பதன் பொருள் யாது என்பதைக் கூறுவார்.
- தட்டடவில் உள்ள அடவுகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவார்.
- 1ஆவது, 2ஆவது தட்டடவுகளுக்குரிய அடவுச் சொற்கட்டுக்களைக் கூறுவார்.
- முதல் இரண்டு தட்டடவுகள் அமைந்துள்ள தாளத்தைக் குறிப்பிடுவார்.
- தட்டடவு 1 -2 வரை கொலுப்பித்து ஆடிக் காட்டுவார்.

## செயற்பத்திரம் - 3.4.2-I

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- ⌘ தட்டடவு எத்தனை வகைப்படும்.
- ⌘ தட்டடவு செய்யும் போது கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் யாவை?
- ⌘ தட்டடவு அமைந்துள்ள தாளம் எவை?
- ⌘ தட்டடவினை 1ஆவது தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுக.
- ⌘ 1ஆவது தட்டடவை திரி காலத்திலும் லயப்பிடிப்புடன் ஆடிக் காட்டுக.

## செயற்பத்திரம் - II

- ⌘ 2ஆவது தட்டடவினை தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுக.
- ⌘ 1ஆவது தட்டடவினை திரி காலத்திலும் லயப்பிடிப்புடன் ஆடிக் காட்டுக.

## செயற்பத்திரம் - III

- ⌘ 1ஆவது தட்டடவினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.
- ⌘ 2ஆவது தட்டவினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

# 1ஆவது, 2ஆவது தட்டடவு

சொற்கட்டு :- தெய்,யா தெய்,; தெய், யா தெய்,; /
தெய், யாதெய்,; தெய், யா தெய், ; //

தாளம் :- ஆதி

| /4 | 0 | 0 |
|---|---|---|
| **1ஆம் காலம்** | | |
| தெய்,யாதெய்,; தெய்,யா தெய்,; | தெய், யா தெய், ; | தெய், யா தெய்,; // |
| **2ஆம் காலம்** | | |
| தெய்,யாதெய்,; தெய்,யா தெய்,; | தெய், யா தெய், ; | தெய், யா தெய்,; |
| தெய்,யாதெய்,; தெய்,யா தெய்,; | தெய், யா தெய், ; | தெய், யா தெய்,; // |
| **3ஆம் காலம்** | | |
| தெய்,யாதெய்,; தெய்,யா தெய்,; | தெய், யா தெய், ; | தெய், யா தெய்,; |
| தெய்,யாதெய்,; தெய்,யா தெய்,; | தெய், யா தெய், ; | தெய், யா தெய்,; |
| தெய்,யாதெய்,; தெய்,யா தெய்,; | தெய், யா தெய், ; | தெய், யா தெய்,; |
| தெய்,யாதெய்,; தெய்,யா தெய்,; | தெய், யா தெய், ; | தெய், யா தெய்,; // |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்3.4.** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டல்.

**செயற்பாடு 3.4** : 3ஆவது, 4ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் ஆடுவோம்.

**நேரம்** : 2 மணித்தியாலங்கள் ( 3 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : - பாதநிலைகளின் வரைபடம், தாள அட்டவணை, செயற்பத்திரம் 3.4.1

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**
**படி 3.4.1**

- முன்னறிவை மீட்டல்.
- தட்டடவு என்பது கால்களைத் தட்டிச் செயற்படுவது என்பதைக் கூறுதல்.
- 3ஆவது, 4ஆவது தட்டடவுகளின் செய்முறையை விளக்கி ஆசிரியர் முழுமையாக ஆடிக் காட்டல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கூறி கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

  - நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
  - முன்னறிவை மீட்டல் செய்தல்.
  - தட்டடவு 3ஆவது, 4ஆவது ஆகிய இரண்டினையும் அறிமுகம் செய்தல்.
  - 3ஆவது, 4ஆவது தட்டடவுகள் எண்ணிக்கைக்கேற்ப தட்டிச் செய்யப்படும் என்பதை விளக்குதல்.
  - 3ஆவது, 4ஆவது தட்டடவுகளை ஆசிரியர்கள் திரிகாலங்களிலும் ஆடிக் காட்டல்.
  - 3ஆவது, 4ஆவது தட்டடவுகளை ஆசிரியர் ஆட மாணவர் அதனைப் பின்பற்றி ஆடச் சந்தர்ப்பம் வழங்குக.
  - மாணவர்களைத் தனியாகவும், குழுக்களாகவும் தெரிவு செய்து ஆடிக் காண்பிக்கச் செய்தல்.
  - 3ஆவது, 4ஆவது தட்டடவுகளை முதலில் விளம்ப, மத்திம காலங்களில் சரியான முறையில் பயிற்சி அளித்த பின்பே துரித காலத்தில் பயிற்சி அளித்தல் வேண்டும்.
  - 3ஆவது, 4ஆவது தட்டடவுகளின் சொற்கட்டுக்களை சொல்லப் பயிற்சி அளித்தல்.
  - அடவுகளைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டப் பயிற்சி அளித்தல்.
  - ஆசிரியர் தாளத்தைப் போட்டு சொல்லிக் காண்பிக்க மாணவர்களும் அதனைப் பின்பற்றிக் கூறுதல்.
  - ஆசிரியர் அடவுச் சொற்களைக் கூற மாணவர்கள் தாளத்தினைப் போட்டுக் காட்டுதல்.
  - திரிகாலத்திலும் அடவினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டல்.
  - அடவுகளை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவதற்கு தாள அட்டவணையை காட்சிப்படுத்தி, மாணவர்கள் எழுதுவதற்கு வழிப்படுத்துக.

(40 நிமிடங்கள்)

## படி 3.4.2

* வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.
* 3ஆவது, 4ஆவது தட்டடவுகளை தாளத்தில் கொலுப்பித்துக் காட்ட வழிப்படுத்துக.
* சகல மாணவர்களும் 3ஆவது, 4ஆவது தட்டடவுகளை திரிகாலங்களிலும் ஆடிக் காண்பிக்கிறார்களா என்பதை உறுதி செய்து முழுமைப்படுத்துக.
* 3ஆவது, 4ஆவது தட்டடவுகளை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதவும் இடமளிக்குக.

(50 நிமிடங்கள்.)

## படி 3.4.3

* ஒவ்வொரு குழுவும் 3ஆவது, 4ஆவது தட்டடவுகளை தாளத்தில் கொலுப்பித்துக் காட்ட சந்தர்ப்பம் வழங்குக.
* 3ஆவது, 4ஆவது தட்டடவுகளை திரிகாலங்களிலும் ஆடிக் காட்டச் சந்தர்ப்பம் வழங்குக.
* 3ஆவது, 4ஆவது தட்டடவுகளை தாள அங்கக் குறியீட்டுடன் எழுத வழிப்படுத்துக.
* பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> ◆ 3ஆவது, 4ஆவது தட்டடவுகளை அவற்றின் எண்ணிக்கைக்கேற்ப தட்டிச் செய்தல் வேண்டும்.
> ◆ 3ஆவது 4ஆவது தட்டடவு ஒரு காலில் மூன்று முறை தட்டிச் செய்தல் வேண்டும்.
> ◆ 4ஆவது தட்டடவு ஒரு காலில் நான்கு முறை தட்டிச் செய்தல் வேண்டும்.
> ◆ செய்யும் போது அரைமண்டியில் இருந்து லயப்பிடிப்புடன் அழுத்தமாக செய்தல் வேண்டும்.
> ◆ 3ஆவது தட்டடவிற்குரிய சொற்கட்டு தெய்,யா தெய்,யா தெய்,;
> ◆ 4ஆவது தட்டடவிற்குரிய சொற்கட்டு தெய்,யா தெய்,யா தெய், யா தெய்,;
> ◆ ஆதி தாளத்தை கையில் போட்டுக் காண்பித்தல்.
> ◆ 3ஆவது, 4வதனை தட்டடவுகளைத் தாளத்தில் கொலுப்பித்துக் காண்பித்தல்.
> ◆ 3ஆவது, 4ஆவது தட்டடவுகளை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவர்.
> ◆ ரூபக தாளத்தை கையில் போட்டுக் காண்பித்தல்.

(30 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- 3ஆவது தட்டடவினை தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவார்.
- 3ஆவது தட்டடவினை திரிகாலங்களிலும் ஆடிக் காண்பிப்பார்.
- 4ஆவது தட்டடவினை தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவார்.
- 4ஆவது தட்டடவினை திரிகாலங்களிலும் ஆடிக் காண்பிப்பார்.
- 3ஆவது,தட்டடவினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவார்.
- 3ஆவது,தட்டடவினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவார்.

## செயற்பத்திரம் - 3.4.2 -I

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- 3ஆவது தட்டடவினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுக.
- 3ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுக.
- 3ஆவது தட்டடவின் அடவுச் சொற்கட்டு யாது எனக் கூறுக.
- 3ஆவது தட்டடவு அமைந்துள்ள தாளம் எது?

## செயற்பத்திரம் - II

- 4ஆவது தட்டடவு அமைந்துள்ள தாளம் எது?
- 4ஆவது தட்டடவின் அடவுச் சொற்கட்டு யாது?.
- 4ஆவது தட்டடவினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுக.
- 4ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுக.

## செயற்பத்திரம் - III

- 3ஆவது தட்டடவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.
- 4ஆவது தட்டவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

# 3ஆவது தட்டடவு

சொற்கட்டு :- தெய்,யா தெய்,யா தெய்,; தெய்,யா தெய், யா தெய் ,; //
தாளம் :- ரூபகம்

| O | /4 |
|---|---|
| **1ஆம் காலம்** | |
| தெய்,யா தெய், யா | தெய், ; தெய், யா தெய், யா தெய்,; // |
| **2ஆம் காலம்** | |
| தெய்,யா தெய், யா தெய்,; தெய்,யா | தெய்,யா தெய்,; தெய்,யா தெய்,யா<br>தெய்,; தெய், யா தெய், யா தெய்,; // |
| **3ஆம் காலம்** | |
| தெய்,யா தெய், யா தெய்,; தெய்,யா<br>தெ ய்,யா தெய்,; தெய், யா தெய்,யா | தெய்,; தெய், யா தெய், யா தெய்,;<br>தெய், யா தெய், யா தெய்,; தெய்,யா<br>தெய், யா தெய்,; தெய், யா தெய், யா<br>தெய்,; தெய், யா தெய், யா தெய்,; // |

## 4 ஆவது தட்டடவு

சொற்கட்டு :- தெய்,யா, தெய்,யா தெய், யாதெய், ; /
தெய்,யா, தெய்,யா தெய், யாதெய், ; //

தாளம் :- ஆதி

| /4 | 0 | 0 |
|---|---|---|
| **1ஆம் காலம்** | | |
| தெய்,யாதெய், யாதெய்,யா தெய்,; | தெய், யா தெய்,யா | தெய், யா தெய்,; // |
| **2ஆம் காலம்** | | |
| தெய்,யாதெய், யாதெய், யாதெய்,; | தெய்,யா தெய்,யா | தெய், யா தெய்,யா |
| தெய்,யாதெய், யாதெய், யாதெய்,; | தெய்,யா தெய்,; | தெய், யா தெய்,;// |
| **3ஆம் காலம்** | | |
| தெய்,யாதெய்,யா,தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,யா | தெய்,யா தெய், யா |
| தெய்,யாதெய்,யா,தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,; | தெய்,யா தெய், ; |
| தெய்,யாதெய்,யா,தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,யா | தெய்,யா தெய், யா |
| தெய்,யாதெய்,யா,தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,; | தெய்,யா தெய்,; // |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்3.4.** . பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4** : 5ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் ஆடுவோம்.

**நேரம்** : 02 மணித்தியாலங்கள் ( 3 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : பாதநிலைகளின் வரைபடம், தாள அட்டவணை
செயற்பத்திரம் 3.4.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**
**படி 3.4.1**

- 5ஆவது தட்டடவினை திரிகாலங்களிலும் ஆசிரியர் ஆடிக் காட்டுதல்.
- ஏற்கனவே கற்ற அடவுகளுக்கும் 5ஆவது தட்டடவிற்கும் உள்ள வேறுபாட்டினை மாணவர்களிடம் கேட்டறிதல்.
- 5ஆவது தட்டடவானது இரு தட்டுக்கள் வேகம் குறைவாகவும் அடுத்த மூன்று தட்டுக்களும் வேகம் கூடுதலாகத் தொடர்ச்சியாக தட்டுதல் வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுக.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- முன்னறிவை மீட்டல் செய்தல்.
- 5ஆவது தட்டடவினை ஆடும் முறையை விளக்கி, ஆசிரியர் திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுதல்.
- தெய்யா, தெய்யா, தெய் தெய் தாம் என்பது 5ஆவது தட்டடவின் அடவுச் சொற்கட்டு என்பதைக் கூறுதல்.
- 5ஆவது தட்டடவினை 1ஆம் காலத்தில் ஆசிரியர் ஆட மாணவர்கள் அதனைப் பின்பற்றி ஆடச் சந்தர்ப்பம் வழங்குக.
- 5ஆவது தட்டவினை விளம்ப காலத்தில் பயிற்சி அளித்து மாணவர்கள் லயப்பிடிப்புடன் ஆடுவார்களானால் 2ம், 3ம் காலங்களில் பயிற்சி அளித்தல்.
- 5ஆவது. தட்டடவினை திரிகாலங்களிலும் தொடர்ச்சியாக ஆடச் சந்தர்ப்பம் வழங்குக.
- 5ஆவது. தட்டடவினை தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவதற்கு பயிற்சி அளிக்குக.
- 5ஆவது தட்டடவினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவதற்கு தாள அட்டவணையைக் காட்சிப்படுத்தி வழிகாட்டுக.

(20 நிமிடங்கள்)

**படி 3.4.2**

* வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.
* **சகல மாணவர்களும் தட்டடவு 5வதினை செய்து காண்பிக்கிறார்களா என்பதை உறுதி செய்து முழுமைப்படுத்துக.**
* 5ஆவது தட்டடவினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுத நெறிப்படுத்துக.
* 5ஆவது தட்டவினை தாளத்தில் கொலுப்பித்து காட்ட வழிப்படுத்துக.

(30 நிமிடங்கள்.)

**படி 3.4.3**

* ஒவ்வொரு குழுவும் 5ஆவது தட்டடவினை தாளத்தில் கொலுப்பித்துக் காட்டி அவ்வடவினை திரிகாலங்களிலும் ஆடிக் காட்டவும் சந்தர்ப்பம் வழங்குக..
* 5ஆவது தட்டடவினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுத வழிப்படுத்துக.
* 5ஆவது தட்டடவினை ஒவ்வொரு குழுவும் செய்து காட்டும் போது ஏனைய மாணவர்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைக் கூற இடமளிக்குக.
* பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

> * 5 ஆவது தட்டடவின் சொற்கட்டு தெய்யா, தெய்யா தெய் தெய் தாம் என்பதைக் என்பதாகும்.
> * 5 ஆவது தட்டடவு ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
> * 5ஆவது தட்டடவினை ஒரு காலில் ஐந்து தரம் தட்ட வேண்டும். இரண்டு தரம் வேகம் குறைந்தும் ஏனைய மூன்று தட்டும் சற்று வேகம் கூடியும் தட்டுதல்
> * 5 ஆவது தட்டடவினை லயப்பிடிப்புடன் அரைமண்டியில் இருந்து ஆட வேண்டும்.

(30 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

* 5ஆவது தட்டடவின் சொற்கட்டினைக் கூறுவார்.
* 5ஆவது தட்டடவினை தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவார்.
* 5ஆவது தட்டடவினை திரிகாலங்களிலும், லயப்பிடிப்புடன் ஆடிக் காண்பிப்பார்.
* 5ஆவது,தட்டடவினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவார்.

## செயற்பத்திரம் - 3.4.2 - I

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- ⌘ 5ஆவது தட்டடவின் அடவுச் சொற்கட்டு யாது?
- ⌘ 5ஆவது தட்டடவினைத் ஒரு காலில் எத்தனை தரம் தட்டுதல் வேண்டும்?
- ⌘ 5ஆவது தட்டடவு அமைந்துள்ள தாளம் எது?
- ⌘ 5ஆவது தட்டடவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

## செயற்பத்திரம் - II

- ⌘ 5ஆவது தட்டடவினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுக.
- ⌘ 5ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுக.

# 5ஆவது தட்டடவு

சொற்கட்டு :- தெய்,யா தெய்,யா தெய், தெய், தாம் ;/
தெய்,யா தெய்,யா தெய், தெய், தாம்; //

தாளம் :- ஆதி

| /4 | 0 | 0 |
|---|---|---|
| **1ஆம் காலம்** | | |
| தெய், யாதெய், யா தெய், தெய், தாம்; | தெய், யா தெய், யா | தெய், தெய், தாம்;// |
| **2ஆம் காலம்** | | |
| தெய், யாதெய், யா தெய், தெய், தாம்; | தெய், யா தெய், யா | தெய்,யா தெய், யா |
| தெய், யாதெய், யா தெய், தெய், தாம்; | தெய், தெய், தாம்; | தெய், தெய், தாம்; // |
| **3ஆம் காலம்** | | |
| தெய், யாதெய், யா தெய், தெய், தாம்; | தெய், யா தெய், யா | தெய், யாதெய், யா |
| தெய், யாதெய், யா தெய், தெய், தாம்; | தெய், தெய், தாம்; | தெய், தெய், தாம்; |
| தெய், யாதெய், யா தெய், தெய், தாம்; | தெய், யா தெய், யா | தெய், யா தெய், யா |
| தெய், யாதெய், யா தெய், தெய், தாம்; | தெய், தெய், தாம்; | தெய், தெய், தாம்; // |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்3.4.** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4** : 6ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் ஆடுவோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் ( 2 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : - அரைமண்டியின் வரைபடம் , தாள அட்டவணை, செயற்பத்திரம் 3.4.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**
**படி 3.4.1**

- 6ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் ஆசிரியர் ஆடிக் காட்டுதல்.
- 6ஆவது தட்டடவின் சொற்கட்டு தெய் தெய் தாம், தெய் தெய் தாம் என்பதைக் கூறல்.
- ஏற்கனவே கற்ற அடவுகளுக்கும் இவ்வடவிற்கும் உள்ள வேறுபாட்டினைக் குறிப்பிடுதல்.
- 6ஆவது தட்டடவினை ஆடும் போது ஒரே காலில் ஆறு தரம் தட்டுதல் வேண்டும்.
- மூன்று மூன்று தட்டுக்களாகப் பிரித்துத் தட்டுதல் வேண்டும் என்பதை வலியுறுத்தல்.
- 6ஆவது தட்டடவு ஆதி தாளத்தில் அமைந்துள்ளது என்பதைக் குறிப்பிடுதல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
- முன்னறிவை மீட்டல் செய்தல்.
- 6ஆவது தட்டடவினை ஆடும் முறையை விளக்கி, ஆசிரியர் திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுதல்.
- 6ஆவது தட்டடவினை விளம்ப காலத்தில் ஆசிரியர் ஆட மாணவர்கள் அதனைப் பின்பற்றி ஆடச் சந்தர்ப்பம் வழங்குக.
- 6ஆவது தட்டவினை விளம்ப காலத்தில் பயிற்சி அளித்த பின்பு மத்திம, துரித காலங்களில் பயிற்சி அளிக்குக.
- 6ஆவது, தட்டடவினை அரைமண்டியில் இருந்து லயப்பிடிப்புடன் கால்களை மடித்துத் தட்டுதல் வேண்டும் என்பதை வலியுறுத்துக.
- 6ஆவது, தட்டடவிற்கும் முதல் கற்ற அடவுகளுக்கும் உள்ள வேறுபாட்டினைக் கூறுதல்.
- மூன்று தட்டுக்களுக்குப் பின் ஒரு கார்வை (1 - அட்சரம்)
- விட்டு மீண்டும் மூன்று தரம் அதே காலால் தட்ட வேண்டும் எனக் குறிப்பிடுதல்.
- 6ஆவது தட்டடவு ஆதி தாளத்தில் அமைந்துள்ளது என்பதைக் கூறுக.
- 6ஆவது தட்டடவின் சொற்கட்டு தெய்,; தெய்,; தாம்; ; ; தெய்,; தெய்,; தாம்; ; ; என்பதைக் கூறுக.
- 6ஆவது அடவினை தாளத்தில் கொலுப்பித்துக் காட்டப் பயிற்சி அளித்தல். 6ஆவது தட்டடவினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவதற்கு தாள அங்கக் குறியீட்டு அட்டவணையைக் காட்சிப்படுத்தி வழிகாட்டுக.

(20 நிமிடங்கள்)

## படி 3.4.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.
- சகல மாணவர்களும் 6ஆவது தட்டடவினை செய்து காண்பிக்கிறார்களா என்பதை உறுதி செய்து முழுமைப்படுத்துக.
- 6ஆவது தட்டடவினை தாளத்தில் கொலுப்பித்துக் காட்ட வழிப்படுத்துக.
- 6ஆவது தட்டடவினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுத நெறிப்படுத்துக.

(30 நிமிடங்கள்.)

## படி 3.4.3

- ஒவ்வொரு குழுவும் 6ஆவது தட்டடவினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டி அடவினைத் திரிகாலங்களிலும் லயப்பிடிப்புடன் அரைமண்டியில் ஆடிக் காட்டவும் சந்தர்ப்பம் வழங்குக..
- 6ஆவது தட்டடவுகளை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதிக் காண்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக
- பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

◆ 6ஆவது தட்டடவின் சொற்கட்டு தெய்,; தெய்,; தாம்; ; ; தெய்,; தெய்,; தாம்; ; ; என்பதாகும்.
◆ 6 ஆவது தட்டடவு ஆதி தாளத்தில் அமைந்துள்ளமை.
◆ 6ஆவது தட்டடவானது ஒரு காலில் ஆறு தரம் தட்டி செய்தல் வேண்டும். மூன்று மூன்று தட்டுக்களாக பிரித்து ஒரே காலில் தட்டுதல் வேண்டும்.
◆ 6 ஆவது தட்டடவினை லயப்பிடிப்புடன் அரைமண்டி நிலையில் இருந்து அழுத்தமாக திரிகாலங்களிலும் ஆட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.
◆ 6ஆவது அடவினை ஆதி தாளத்தில் கொலுப்பித்துக் காட்டல்.
◆ 6ஆவது அடவினை தாள அங்கக் குறியீட்டுடன் எவ்வாறு எழுதல்.

(30 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- 6ஆவது தட்டடவின் சொற்கட்டினைக் கூறுவார்.
- 6ஆவது தட்டடவினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவார்.
- 6ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும், லயப்பிடிப்புடன் ஆடிக் காண்பிப்பார்.
- 6ஆவது தட்டடவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவார்.
- 6ஆவது தட்டடவு அமைந்துள்ள தாளத்தின் பெயரைக் குறிப்பிடுவார்.

## செயற்பத்திரம் - 3.4.2 - I

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- ⌘ 6ஆவது தட்டடவு அமைந்துள்ள தாளம் எது?
- ⌘ 6ஆவது தட்டடவு செய்யும் முறை யாது?
- ⌘ ஐந்தாவது தட்டடவிற்கும் 6ஆவது தட்டடவுக்கும் உள்ள வேறுபாடு யாது?
- ⌘ 6ஆவது தட்டடவின் அடவுச் சொற்கட்டு யாது?
- ⌘ 6ஆவது தட்டடவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

## செயற்பத்திரம் - II

- ⌘ 6ஆவது தட்டடவினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுக.
- ⌘ 6ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுக.

# 6ஆவது தட்டடவு

**சொற்கட்டு :- தெய்,; தெய்,; தாம்; ; ; / தெய்,; தெய்,; தாம்; ; ; //**
**தாளம் :- ஆதி**

| /4 | 0 | 0 |
|---|---|---|
| **1ஆம் காலம்**<br>தெய்,; தெய்,; தாம் ; ; ; | தெய்,; தெய்,; | தாம் ; ; ; // |
| **2ஆம் காலம்**<br>{ தெய்,; தெய்,; தாம்; ; ; தெய்,; தெய்,;<br>தாம்; ; ; } | தெய்,; தெய்,; தாம்; ; ; | தெய்,; தெய்,; தாம்; ; ;// |
| **3ஆம் காலம்**<br>{ தெய்,; தெய்,; தாம்; ; ; தெய்,; தெய்,;<br>தாம்; ; ; தெய,; தெய்,; தாம்; ; ; தெய்,;<br>தெய்,; தாம்; ; ; } | { தெய்,; தெய்,; தாம்; ; ;<br>தெய்,; தெய்,; தாம்; ; ; } | { தெய்,; தெய்,; தாம்; ; ;<br>தெய்,; தெய்,; தாம்; ; ; // } |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.4. : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.4** : 7ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் ஆடுவோம்.

**நேரம்** : 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள் ( 2 பாடவேளை)

**தர உள்ளீடு** : அரைமண்டியின் வரைபடம் , தாள அட்டவணை செயற்பத்திரம் 3.4.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.4.1**

- 7ஆவது தட்டடவினை அறிமுகம் செய்தல். இதில் ஏழு தட்டுக்கள் உண்டு. இது இரு கால்களிலும் மாறி மாறித் தட்டப்படும் என்பதைக் குறிப்பிடுவார்.
- 7ஆவது தட்டடவின் அடவுச் சொற்கட்டு தெய் தெய் தத் தெய் தெய்தாம் என்று அமைந்திருக்கும் என்பதைக் கூறுவார்
- 7ஆவது தட்டடவு ஆதி தாளத்தில் அமைந்துள்ளது என்பதைக் குறிப்பிடுதல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

◆ நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
◆ முன்னறிவை மீட்டல் செய்தல்.
◆ 7ஆவது தட்டடவினை அறிமுகம் செய்தல்.
◆ தட்டடவு வரிசையில் இது ஏழாவதாக இடம்பெறும் என்பதை விளக்குதல்.
◆ 7ஆவது தட்டடவின் அடவுச் சொற்கட்டுக்களை ஆசிரியர் தெளிவாகச் சொல்லிக் காட்ட மாணவர்கள் கூறுதல்.
◆ 1-6 ஆவது வரையிலான தட்டடவுகளுக்கும் ஏழாவது தட்டடவிற்கும் உள்ள வேறுபாட்டை விளக்குதல்.
◆ இவ்வடவினைத் தாள அட்டவணையைப் பிரயோகித்து ஆதி தாளத்திற்கு அமைய திரி காலத்தில் ஆசிரியர் கொலுப்பித்துக் காட்டி மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
◆ 6ஆவது தட்டவினை ஆசிரியர் முழுமையாகச் செய்து காட்டிக் கொலுப்பித்தல்.
◆ முதலில் விளம்ப காலத்தில் ஆசிரியர் செய்து காட்ட மாணவர்கள் அதனைப் பின்பற்றி ஆடச் சந்தர்ப்பம் வழங்குக.
◆ விளம்ப காலத்தில் லயப்பிடிப்புடன் அரைமண்டியில் இருந்து பயிற்சி அளித்த பின்பு மத்திம, துரித காலங்களில் பயிற்சி அளிக்குக.

(25 நிமிடங்கள்)

**படி 3.4.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.
- சகல குழுக்களும் சரியாகப் பயிற்சி செய்து இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்து முழுமைப்படுத்துக.

(30 நிமிடங்கள்.)

படி 3.4.3

- ஒவ்வொரு குழுவும் 7ஆவது தட்டடவினை தாளத்தில் கொலுப்பித்துக் காட்டி அடவினை திரிகாலங்களிலும் லயப்பிடிப்புடன் அரைமண்டியில் ஆடிக் காட்டவும் சந்தர்ப்பம் வழங்குக..
- 7ஆவது தட்டடவினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதிக் காண்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக
- பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

- 7ஆவது தட்டடவின் சொற்கட்டு தெய் தெய் தத் தத் தெய் தெய் தாம் என்பதாகும்.
- 7ஆவது தட்டடவு ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
- 7ஆவது தட்டடவானது இரு கால்களிலும் மாறி மாறி ஏழு தட்டுக்களும் தட்டிச் செய்ய வேண்டும்.
- 7 ஆவது தட்டடவினை லயப்பிடிப்புடன் திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுதல்.
- 7ஆவது அடவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுதல்.

(25 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- 7ஆவது தட்டடவின் சொற்கட்டினைக் கூறுவார்.
- 7ஆவது தட்டடவினை தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவார்.
- 7ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும், ஆதி தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுவார்.
- 7ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுவார்.
- 7ஆவது அடவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவார்.

## செயற்பத்திரம் - 3.4.2 I

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

⌘ 7ஆவது தட்டடவு அமைந்துள்ள தாளம் எது?
⌘ 7ஆவது தட்டடவின் அடவுச் சொற்கட்டு யாது?
⌘ 7 ஆவது தட்டடவில் எத்தனை தட்டுக்கள் உண்டு?
⌘ 6ஆவது தட்டடவிற்கும் 7ஆவது தட்டடவுக்கும் உள்ள வேறுபாடு யாது?
⌘ 7ஆவது தட்டடவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

## செயற்பத்திரம் - II

⌘ 7ஆவது தட்டடவினைத் தாளத்தில் கொலுப்பித்துக் காட்டுக.
⌘ 7ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் ஆடிக் காட்டுக.

# 7ஆவது தட்டடவு

**சொற்கட்டு :- தெய்,; தெய்,;தத்,; தத்,; / தெய்,;தெய்,; தாம் ; ; ; //**
**தாளம் :- ஆதி**

| / 4 | 0 | 0 |
|---|---|---|
| **1ஆம் காலம்** | | |
| தெய்,; தெய்,;தத்,; தத்,; | தெய்,; தெய்,; | தாம்; ; ; // |
| **2ஆம் காலம்** | | |
| தெய்,; தெய்,;தத்,; தத்,; | தெய்,; தெய்,; | தெய்,; தெய்,; |
| தெய்,; தெய்,; தாம்; ; ; | தத்,; தத் ,; | தாம்; ; ; // |
| **3ஆம் காலம்** | | |
| தெய்,; தெய்,;தத்,; தத்,; | தெய்,; தெய்,; | தெய்,; தெய்,; |
| தெய்,; தெய்,; தாம்; ; ; | தத்,; தத் ,; | தத்,; தத் ,; |
| தெய்,; தெய்,;தத்,; தத்,; | தெய்,; தெய்,; | தெய்,; தெய்,; |
| தெய்,; தெய்,; தாம்; ; ; | தாம் ; ; ; | தாம் ; ; ; // |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4.**: பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டல்.

**செயற்பாடு 3.4** : 8ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் ஆடுவோம்.

**நேரம்** : 2 மணித்தியாலங்கள். ( 3 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : அரைமண்டியின் வரைபடம் , தாள அட்டவணை
செயற்பத்திரம் 3.4.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.4.1**

- 8ஆவது தட்டடவினை ஆசிரியர் முழுமையாக ஆடிக் காட்டி 1-7 வரையிலான தட்டடவுகளுக்கும் 8ஆவது அடவிற்குமுள்ள வேறுபாடுகள் பற்றிக் கலந்துரையாடுக.
- 8ஆவது தட்டடவில் ஏழு தட்டுக்களே உண்டு. இரு கால்களிலும் மாறி மாறி தட்டுதல் வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுக.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாட்லை நிகழ்த்துக.

◆ நமஸ்காரத்துடன் வகுப்பை ஆரம்பித்தல்.
◆ முன்னறிவை மீட்டல் செய்தல்.
◆ 1-7 வரையிலான தட்டடவுகளைச் செய்வதற்கும் 8ஆவது தட்டடவு செய்வதற்கு உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குதல்.
◆ 8ஆவது தட்டடவிலும் 7 எண்ணிக்கைகளே அமைந்துள்ளன என்பதையும் இருகால்களையும் மாறி மாறி தட்டுதல் வேண்டும் என்பதையும் வலியுறுத்தல்.
◆ 8ஆவது தட்டவினை ஆசிரியர் முழுமையாகச் செய்து காண்பித்தல். முதலில் விளம்ப காலத்தில் பயிற்சி அளித்தல். ஆசிரியர் ஆட மாணவர்கள் அதனைப்பின்பற்றி ஆடச் சந்தர்ப்பம் வழங்குக.
◆ 8ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் பயிற்சி அளித்தல்.
◆ 8ஆவது தட்டடவினைத் ரூபக தாளத்தில் கொலுப்பிக்கப் பயிற்சி அளித்தல்.
◆ 8ஆவது தட்டடவினைத் தாள அங்கக் குறியீட்டுக்கமைய பிரித்து எழுதப் பயிற்சி அளித்தல்.

(25 நிமிடங்கள்)

**படி 3.4.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.
- சகல குழுக்களும் சரியாகப் பயிற்சி செய்து இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்து முழுமைப்படுத்துக.

(30 நிமிடங்கள்.)

படி 3.4.3

- குழு ஒவ்வொன்றும் தனித்தனியாக தட்டடவு 8வதினைச் செய்வதற்குச் சந்தரப்பம் வழங்குக.
- **8ஆவது தட்டடவினை ஒவ்வொரு குழுவும் செய்துகாண்பிக்கும் போது ஏனைய மாணவர்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைக் கூற இடமளிக்குக.**
- **பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.**

> - **தட்டடவு 8வது 7 எண்ணிக்கைகளைக் கொண்டது. இரண்டு கால்களிலும் மாறி மாறித் தட்டிச் செய்யப்படுகின்றது.**
> - 8ஆவது தட்டடவு ரூபக தாளத்தில் அமைந்துள்ளமை.
> - இதன் அடவுச் சொற்கட்டு தெய் தெய் தெய் தெய் தித் தித் தெய் ஆகும்.
> - 8ஆவது தட்டடவினைத் திரிகாலத்திலும் கொலுப்பித்துக் காட்டுதல்
> - 8ஆவது அடவினை தாள அங்கக் குறியீட்டிற்கமைய எழுதுதல்.

(25 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- 8ஆவது தட்டடவினைத் திரிகாலத்திலும் ஆடிக் காட்டுவார்.
- 8ஆவது தட்டடவின் அடவுச் சொற்கட்டைக் கூறி தாளத்தில் கொலுப்பிப்பார்.
- 8ஆவது தட்டடவு அமைந்துள்ள தாளம் எது என்பதைக் குறிப்பிடுவார்.
- 8ஆவது தட்டடவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவார்.

# செயற்பத்திரம் - 3.4.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

⌘ 8ஆவது தட்டடவினை ஆடுக.

⌘ 8ஆவது தட்டடவின் அடவுச் சொற்கட்டைக் கூறி தாளத்தில் கொலுப்பிக்குக.

⌘ 8ஆவது அடவு அமைந்துள்ள தாளம் எது? இவ்வடவினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

# 8ஆவது தட்டடவு

சொற்கட்டு :- தெய்,; தெய்,; தெய்,; தெய்,; தி, தி, தெய், ; //

தாளம் :- ருபகம்

| $0_2$ | $/_4$ |
|---|---|
| **1ஆம் காலம்**<br>தெய், ; தெய், ; | தெய்,; தெய்,; தி, தி, தெய், ; // |
| **2ஆம் காலம்**<br>தெய், ; தெய், ; தெய்,;<br>தெய், ; | தி, தி, தெய்,; தெய்,; தெய்,;<br>தெய்,; தெய்,; தி, தி, தெய், ; // |
| **3ஆம் காலம்**<br>தெய்,; தெய்,; தெய்,; தெய்,;<br>தி, தி, தெய்,; தெய்,; தெய்,; | தெய்,; தெய்,; தி, தி, தெய்,; தெய்,; தெய்,;<br>தெய்,; தெய்,; தி, தி, தெய்,; தெய்,;<br>தெய்,; தெய்,; தெய்,; தி, தி, தெய்,; |

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : பரத நாட்டிய வணக்கம், தியானஸ்லோகம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் முத்திரைகளை இனங்கண்டு குறிப்பார்.

**செயற்பாடு 4.1** : தியான ஸ்லோகத்திற் பயன்படுத்தப்படும் முத்திரைகளை அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (2 பாடவேளை)

**தர உள்ளீடு** : - முத்திரைகள் வரையப்பட்ட அட்டை,
செயற்பத்திரம் 4.1.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 4.1.1**

- முத்திரைகளில், அஸம்யுத, ஸம்யுத ஹஸ்தங்கள் இடம்பெறுவதைக் குறிப்பிடுதல்.
- அத்துடன் அபூர்வ ஹஸ்தங்களும் இடம்பெறுவதைக் கூறிக் கலந்துரையாடுக.

- இடம்பெறும் ஒற்றைக் கை முத்திரைகள்
- இடம்பெறும் இரட்டைக் கை முத்திரைகள்.
- இடம்பெறும் அபூர்வ முத்திரைகள்.

(25 நிமிடங்கள்)

**படி 4.1.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதிப்படுத்துக.

(30 நிமிடங்கள்)

**படி 4.1.3**

- ஒவ்வொரு குழுவும் தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மற்றைய குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.

- ஒற்றைக் கை முத்திரைகள் :- ஸுசி,சந்திரகலா, முகுளம், அலபத்மம், சதுரம், கம்சாஸ்யம்
- இரட்டைக்கை முத்திரைகள் :- சிவலிங்கம், அஞ்சலி
- அபூர்வ முத்திரைகள் :- பிறளம்பம், திரிலிங்கம், சிலிட்ட காங்கூலம் / காங்கூல பேதம்

(25 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- தியான ஸ்லோகத்தில் இடம் பெறும் ஒற்றைக்கை முத்திரைகளை அறிந்து கூறுவார்.
- அதில் இடம்பெறும் இரட்டைக் கை முத்திரைகளைக் குறிப்பிடுவார்.
- அதில் இடம்பெறும் அபூர்வ முத்திரைகளைக் குறிப்பிடுவார்.

# செயற்பத்திரம் - 4.1.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

⌘ தியான ஸ்லோகத்தில் இடம்பெறும் ஒற்றைக்கை முத்திரைகள் எவை?
⌘ தியான ஸ்லோகத்தில் இடம்பெறும் இரட்டைக்கை முத்திரைகள் எவை?
⌘ தியான ஸ்லோகத்தில் இடம்பெறும் அபூர்வ முத்திரைகள் எவை?

**பின்னிணைப்புப் பத்திரம்**

| சொல் | பொருள் | பாவிக்கப்படும் முத்திரைகள் |
|---|---|---|
| ஆங்கிகம் | உடல் | பிரளம்பம் |
| புவனம் | உலகம் | சூசி |
| யஸ்ய | யாருடையது | பிரளம்பம் |
| வாச்சிகம் | வார்த்தைகள் | முகுளம் - அலம்பத்மம் |
| சர்வ | எல்லா | சூசி |
| வாங்மயம் | பாஷை | திரிலிங்கம் - சந்திரகலா |
| ஆகார்யம் | ஆபரணம் | சதுரம் |
| சந்திர | சந்திரன் | அலபத்மம் |
| தாராதி | நட்சத்திரங்கள் | சிலிட்டகாங்கூலம்/காங்கூலபேதம் |
| தம் | உம்மை | சூசி |
| நுமஹ் | வணங்குகின்றேன் | அஞ்சலி |
| சாத்விகம் | பரிசுத்தம் | ஹம்சாஸ்யம் |
| சிவம் | சிவபெருமான் | சிவலிங்கம் |

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்4.4.4**: பரத நாட்டியத்தின் தோற்றத்துக்குரிய பின்னணியை விளக்குவார்.

**செயற்பாடு 4.4** : உலகில் நடனத்தோற்றத்திற்கான பின்னணியை (உலகியல் வரலாறு) அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : ஆதிகால மனிதர்கள் பற்றிய படங்கள், செயற்பத்திரம் 4.4.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 4.4.1**

- ஆதிகால மனிதர்கள் பற்றிய படங்களைக் காட்டி அவர்களின் நடை, உடை பாவனைகளைப் பற்றி மாணவர்கள் கூற இடமளியுங்கள்.
- தனது கருத்தை எவ்வாறு புலப்படுத்தி இருப்பான் எனப் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

  - ஆதிகால மனிதன் தனது கருத்துக்களைப் புலப்படுத்திய விதம், அவனது நடத்தை மாற்றங்கள்.
  - உணர்வுகளின் பேதங்களால் ஏற்பட்ட விளைவு
  - பரதம் தொன்மை பெற்றதன் காரணம்

(20 நிமிடங்கள்)

**படி 4.4.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குக.
- தேவையான ஆலோசனைகளை வழங்குக.

(40 நிமிடங்கள்)

**படி 4.4.3**

- ஒவ்வொரு குழுவும் தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனைய குழு அவற்றை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- ஆதிகால மனிதன் தனது கருத்துக்களை புலப்படுத்திய விதம் :- சைகைகள், முகபாவங்கள்.
- மகிழ்ச்சியுற்ற போது கைகளைத் தட்டி கூச்சலிட்டான்.
- துக்கம் வந்த போது அழுதான்
- உணர்வுகளின் பேதங்களினால் ரஸம் பிறந்தது.
- பாவம், இராகம், தாளம் ஆகியன பாசை தோற்றம்பெற முன்னரே தோன்றியது.
- இதனால் பாவ, இராக, தாளச் சேர்க்கையான நடனம் (பரதம்) சகல பாஷைகளிலும் தொன்மை பெறுகின்றது.

(20 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- *ஆதிகால மனிதன் கருத்தைப் புலப்படுத்திய விதத்தினைக் கூறுவார்.*
- மகிழ்ச்சியுற்ற போது அவன் நடத்தை எவ்வாறு அமைந்ததென்பதைக் கூறுவார்.
- துக்கம் வந்த போது அவன் நடத்தை எவ்வாறு அமைந்ததென்பதைக் கூறுவார்.
- ரஸம் பிறந்தது எவ்வாறு என்பதைக் குறிப்பிடுவார்.
- பாவ, இராக, தாளம் எல்லா பாஷை தோன்றமுன்னர் தோன்றியதை கூறுவார்.
- பாஷைகளை விட பரதம் தொன்மை வாய்ந்ததாக கருதப்படுவதன் காரணத்தைக் கூறுவார்.

# செயற்பத்திரம் - 4.4.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

⌘ ஆதிகால மனிதன் தனது கருத்துக்களை எவ்வாறு புலப்படுத்தினான்?
⌘ மகிழ்ச்சியுற்ற போது மனிதன் என்ன செய்தான்?
⌘ துக்கம் வந்த போது மனிதன் என்ன செய்தான்?
⌘ இரஸம் எவ்வாறு பிறந்தது?
⌘ பாஷை தோன்று முன்னர் எவை தோன்றியவை எவை?
⌘ பரதம் பாஷைகளை விடத் தொன்மை வாய்ந்தது என்பதை ஆதாரபூர்வமாக விளக்குக.

**தேர்ச்சி 5.0** : பரத நாட்டியம், கிராமிய நடனம் என்பன பற்றியும், இலங்கையின் தேசிய கலாசார நடனங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றியும் இவற்றின் இசை பற்றியும் விபரிப்பார்.

**தேர்ச்சி மட்டம்5.2** : சமய விழாக்களில் இடம்பெறும் கிராமிய நடனங்களினதும், அவற்றின் இசையினதும் கலாசாரப் பின்னணியை அறிந்து விளக்குவார்.

**செயற்பாடு 5.2** : தைப்பொங்கல் அன்று ஆடப்படும் கும்மி, கோலாட்டம் பற்றி அறிவோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : - தைப்பொங்கல் நிகழ்வினை வெளிப்படுத்தும் கும்மி கோலாட்டங்கள் சம்பந்தமான படங்கள் ஒலி. ஒளிப்பதிவு நாடாக்கள், செயற்பத்திரம் 5.2.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 5.2.1**

- கும்மி, கோலாட்டம் சம்பந்தமான படங்களை பார்வையிடச் செய்தல்.
- கும்மி, கோலாட்டம் பற்றிக் குறிப்பிடுவதுடன், ஏனைய கிராமிய நடன வகைகளைப் பற்றியும் குறிப்பிடுதல்.
- கும்மி, கோலாட்டம் என்பவற்றில் இடம்பெற வேண்டிய அம்சங்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- தமிழர்களின் பண்டிகைளில் ஒன்றான தைப்பொங்கலில் ஆடப்படும் நடனங்களைக் கேட்டறிதல்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

◆ தமிழர்களின் பண்டிகைளில் ஒன்றான தைப்பொங்கல் அன்று இடம் பெறும் நடனங்கள்.
◆ கும்மி, கோலாட்டம் என்பவற்றின் தோற்றம்
◆ ஆட்ட அமைப்பு
◆ உடை, ஒப்பனை
◆ இசை, வாத்தியம்,
◆ ஆடப்படும் சந்தர்ப்பங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 5.2.2**

- தைப்பொங்கல் நிகழ்வுகளையும் அதன் சிறப்பு அம்சங்களையும் கும்மி, கோலாட்டம் நடனம் பற்றிய வழங்குங்கள்.
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப சிறிய குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தைக் கொடுத்து மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(30 நிமிடங்கள்

படி 5.2.3

- ஒவ்வொரு குழுவும், தமக்கு வழங்கப்பட்ட செயற்பத்திரத்தை முன்வைக்கச் சந்தர்ப்பத்தை வழங்குக.
- ஒரு குழு முன்வைத்த செயற்பாட்டை ஏனைய குழுவினரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்ததை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

- கும்மி, கோலாட்டம் ஆகிய கிராமிய நடனங்களில் இடம்பெறுபவை.
- தைப்பொங்கல் அன்று ஆடப்படும் நடனங்கள் கும்மி, கோலாட்டம், உழவர் நடனம் போன்றவற்றை விளக்குதல்.
- தைப்பொங்கலன்று இடம்பெறும் நடனங்களில், சூரிய வழிபாட்டினையும் உழவர்களின் வாழ்க்கை முறையினையும் வெளிப்படுத்தும் சாகித்தியங்கள் அமைந்திருத்தல்.
- கும்மி, கோலாட்டம் என்பன சமூகத்திலுள்ள அனைவரும் வயது வேறுபாடின்றி பங்குபற்றக் கூடியதாக அமைந்திருக்கும் குழு நடனமாகும்.
- கைகளைத் தட்டி ஆடுவது கும்மி, கோல்களைத் தட்டி ஆடுவது கோலாட்டமாகும்.
- ஒரே அளவிலான தாளகதி அமையுமாறு கையொலி எழுப்பி பல ஆட்டக் கோலங்களில் ஆடுவார்கள்.
- கோலாட்டமும் பல்வேறுபட்டவாறு ஜதி வேறுபாடுகளுடன் ஆடுவது சிறப்பம்சமாகும்.
- கோலாட்டத்தடிகள் 8' - 11' நீளமும் 3/4அங்குலக் கனமும் உடையவை.

(30 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- சமய விழாக்களில் ஆடப்படும் நடனங்களைக் குறிப்பிடுவார்.
- தைப்பொங்கல் விழாவில் ஆடப்படும் நடனங்களைக் கூறுவார்.
- கும்மி, கோலாட்டம் என்பவற்றின் ஆட்ட அமைப்பு, இசை, உடை, ஒப்பனை என்பவற்றைக் கூறுவார்.
- இவ்விரு நடனங்களும் களிப்பூட்டும் நடனங்களாக அமையும் என்பதைக் கூறுவார்.
- கைகளைத் தட்டி ஆடுவதுடன் பல கோலங்களில் சென்று தனியாகவும், குழுவாகவும் கைகளைத் தட்டி ஆடுவது கும்மி எனக் குறிப்பிடுவார்.

# செயற்பத்திரம் 5.2.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

(1) சமய விழாக்களில் ஆடப்படும நடனங்கள் எவை?

(2) கைகளைத் தட்டி ஆடப்படும் நடனம் எது?

(3) கோல்களைத் தட்டி ஆடப்படும் நடனம் எது?

(4) குழு நடனங்களில் இரண்டினைக் கூறுக.

(5) சமூகப் பெண்கள் வயது வேறுபாடு இல்லாமல் குழுக்களாகச் சேர்ந்து நடனம் எது?

(6) பல்வேறு வடிவங்களால் ஆட்டக் கோல அமைப்பு முறைகளைக் கொண்ட நடனம் எது?

(7) கிராமிய நடனங்களுக்குரிய வாத்தியம் எது?

(8) கும்மி, கோலாட்டம் ஆகிய நடனங்கள் ஆடும் போது அணியப்படும் உடை எது?

(9) கும்மிப் பாடல்கள் இரண்டினைக் கூறுக.

(10) கோலாட்டம் ஆடுவதற்குரிய பாடல்கள் இரண்டினைக் கூறுக.

**தேர்ச்சி 1.0** : பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் கிராமிய நடன நிகழ்ச்சிகளையும் பார்த்து தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1.** : கலை நிறுவனங்களினால் நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகளிலும் நடனப் போட்டிகளில் இடம்பெறும் நிகழ்ச்சிகளிலும் தாம் நயந்தவற்றைக் கூறுவார்.

**செயற்பாடு 1.1** : பரத நாட்டியத்திற்குரிய ஆடை அணிகள் பஞ்ச கச்சம், கொஸ்டியும் (Costume) ஆகியன பற்றி நாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவோம்.

**நேரம்** : 02 மணித்தியாலங்கள். (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : ஒலிநாடா, ஒலிப்பதிவுக் கருவி, ஒளிப்பதிவு நாடா, ஒளிப்பதிவுக் கருவி ,கொஸ்டியூம் செயற்பத்திரம் 1.1.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 1.1.1**

- பரத நாட்டியத்திற்கு உபயோகிக்கப்படும் ஆடை அணிகள் எவை என மாணவரிடம் வினாவுங்கள்.
- பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு கலந்துரையாடலை நடத்துங்கள்.

> - நீங்கள் அணிகின்ற ஆடை அணிகள் எப்படியானவை?
> - நடனத்திற்குப் பிரத்தியேகமான உடைகள், அணியப்படுகின்றன.
> - கிராமிய நடனங்களுக்குப் பிரத்தியேகமான ஆடை அணிகள் அணியப்படுகின்றன.

(30 நிமிடங்கள்)

**படி 1.1.2**

- வகுப்பறையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரிக்குக.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தைக் கொடுத்து அதனைப் பூரணப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடச் செய்க.
- தேவையானவிடத்து போதுமான வழிகாட்டல்களை வழங்கி நேர்த்தியாகச் செய்யப் பண்ணுங்கள்.

(45 நிமிடங்கள்)

**படி1.1.3**

- ஒவ்வொரு குழுவினரும் தாம் பட்டியற்படுத்தியவற்றை வகுப்பறையில் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு சமர்ப்பித்ததை ஏனைய குழுக்களும் அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்குக.
- மாணவர் பட்டியற்படுத்தியவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை மீள்வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- ஆடை அணிகள் என்பன ஆஹார்ய அபிநயத்துள் ஒரு பிரிவாகும்.
- கோயில் பூசகர் இடுப்பில் அணிகின்ற பஞ்ச கச்சம் போன்ற ஆடையே பரத நாட்டியத்திற்கு ஆரம்ப, இடைக் காலங்களில் அணியப்பட்டு வந்த ஆடையாகும்.
- கொஸ்டியூம் (Costume) என்றழைக்கப்படும் ஆடை பஞ்ச கச்சம் போன்றதே ஆயினும், உடலோடு ஒட்டியவாறு பைஜாமாவும் முன்னால் விசிறி மடிப்பும் (Fan ),(Bask) என்னும் இடுப்பைச் சுற்றி இறுக்கமாகத் தைக்கப்பட்ட ஒரு துண்டும், ரவிக்கை, தாவணி ஆகியனவும் சேர்ந்து கொஸ்டியூம் (Costume) எனப்படும்.
- பரத நாட்டிய கொஸ்டியூம் (Costume) என்பது தற்காலத்தில் பாவிக்கப்படும் ஆடையாகும். கொஸ்டியூம் பல நிறங்களில் தைத்து அணியப்படும்.
- பரத நாட்டியம் ஆடும்போது அணியப்படும் அணிகலன்கள் தோடு, ஜிமிக்கி, மாட்டல், நெற்றிப் பட்டம், உச்சிப் பட்டம், சந்திர பிறை, சூரிய பிறை, ராக்கொடி, சடை நாகம் ஒட்டியாணம், வளையல், மூக்குத்தி, மிலாக்கு, கொலுசு ஆகியன

(45 நிமிடங்கள்)

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- கலை நிகழ்ச்சிகளில் நடனக் கலை தொடர்பான நடனங்களை மாணவர்கள் பார்த்து ரம் இரசித்த ஆடை அணிகளைப் பட்டியற்படுத்துவார்.
- ஆடை அணிகளின் வர்ணங்களை வர்ணம் தீட்டி வெளிப்படுத்துவார்.
- கலை நிறுவனங்களினால் நடத்தப்படும் நடன நிகழ்ச்சிகளுக்கும், நடனப் போட்டிகளில் இடம்பெறும் நடன நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்பட்ட ஆடை அணிகளின் பெயர்களைப் பட்டியற்படுத்துவார்.
- அணிகளின் பெயர்களைக் குறிப்பிடுவார்.
- மார்பில் பதக்கம், காசு மாலை, கழுத்தில் அட்டிகை, இடுப்பில் ஒட்டியாணம், மூக்கில் மிலாக்கு, கைகளில் வளையல், வங்கி, பாதங்களில் கொலுசு, சதங்கை ஆகிய அணிகலங்கள் அணியப்படும்.

# செயற்பத்திரம் 1.1.2

**சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**

பாடசாலையில் நடன ஆசிரியர் குறிப்பிடும் பகுதிக்குச் சென்று (நடனப் போட்டிகள், கலை நிறுவனங்களினால் நடத்தப்படும் நடன நிகழ்ச்சிகள் ) நீங்கள் பார்த்து இரசித்த ஆடை அணிகலன்களைப் பட்டியற்படுத்துக.

குறிப்பு :-

- கலை மன்றங்களினால் நடத்தப்படும் (கலை) நிகழ்ச்சிகளைப் பார்வையிட்ட பின், அது பற்றி ஐந்து வரிகள் எழுதுங்கள்.

- நீங்கள் பார்த்து இரசித்த நடனங்களைப் பட்டியல்படுத்தி அவற்றில் காணப்பட்ட சிறப்பம்சங்களைக் குறிப்பிடுங்கள்.
- மார்பில் அணியப்படும் ஆபரணங்களின் பெயர்களை குறிப்பிடுக.
- கழுத்தில் அணியப்படும் ஆபரணம் யாது?
- ஒட்டியானம் எங்கு கட்டப்படுகிறது?
- பாதங்களில் எவ்வகையான அணிகலன்கள் அணிவர்?
- தலைச் சோடனைக்கு பரதத்தில் பயன்படுத்தப்படும் ஆபரணங்களின் பெயர்கள் என்ன?
- காதில் எத்தனை அணிகலன்களை அணிவர்.

**தேர்ச்சி 2.0** : சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமிய கலை தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : சிறிய அபிநயப் பாடல்களுக்கும், கதைப் பாடல்களுக்கும் அமைவான அபிநயங்களைத் தாமே அமைத்து ஆடியும், பாடியும் காட்டுவார்.

**செயற்பாடு 2.2** : முயலாரின் அகங்காரம் என்ற கதைப் பாடலைப் பாடி அபிநயம் செய்வோம்.

**நேரம்** : 02 மணித்தியாலம் (3 பாடவேளை)

**தர உள்ளீடு** : பாடல் எழுதப்பட்ட அட்டை, செயற்பத்திரம் 2.2.2, ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி

## கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு.

### படி 2.2.1

- முயலாரின் அகங்காரம் என்ற பாடலை ஆசிரியர் பாடிக் காட்டியோ, ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்தோ மாணவர் பாடலைச் செவிமடுக்க இடமளியுங்கள்.
- செவிமடுத்த பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

- ◆ பாடலை ஆசிரியர் காட்சிப்படுத்தி பகுதி பகுதியாக பாடலைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ◆ ஆசிரியரும், மாணவரும் பாடலை இராகத்துடன் பாடுங்கள்.
- ◆ மாணவரைக் குழுவாகவும், எழுமாறாகவும், தனியாகவும் தெரிவு செய்து பாடக் கேட்கவும்.
- ◆ பாடலின் கருத்திற்கேற்ப முத்திரைகளை அறிமுகப்படுத்துங்கள்.
- ◆ கதைப் பாடலின் அபிநயப் பாங்கு
- ◆ அபிநயப் பாடலில் இருந்து வித்தியாசப்படும் தன்மையைக் கூறி விளங்க வைத்தல்.
- ◆ அதாவது நாடகத் தன்மைக்குரிய ரீதியில் பாத்திரங்களைப் பிரித்து அபிநயம் செய்யும் விதத்தையும் பாடலின் கருத்தையும் சிந்தையிலிருத்தி பாவத்துடன் கதையைத் தொய்வின்றியும், நேர்த்தியாகவும் அபிநயிக்க வழிகாட்டல்.

(30 நிமிடங்கள்)

### படி 2.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறிய குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- சகல குழுவும் கதைப் பாடலைப் பாடி அபிநயித்துப் பயிற்சி செய்கிறார்களா என உறுதி செய்து முழுமைப்படுத்துங்கள்.

(45 நிமிடங்கள்)

படி 2.2.3

- ஒவ்வொரு குழுவும் தனியாகவும், குழுவாகவும் பாடலைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவ்வாறே அபிநயம் செய்யவும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு செயற்பாட்டில் ஈடுபடும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மீள்வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

◆ கதைப் பாடலில் மற்றவரின் அபிநயத்தையும், பாடலை அவதானித்துப் பதில் கூறி அபிநயிக்கும் விதத்தினைக் காணலாம்.
◆ படிப்படியாக நடனத்தின் நாடகப் பண்புகளுக்கேற்ற முறையில் பாத்திரங்களை ஏற்று நடிக்கும் பண்புகளை வளர்க்கும் முறையில் கதைப் பாடல் அமைந்துள்ளது,
◆ பாடலையும், பாடலின் கருத்தையும் பாவத்துடன் கதையைக் கூறி அபிநயித்தல்.

(45 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- பாத்திரங்கள் உரையாடும் பாங்கில் அமைந்துள்ள கதைப் பாடல்களைப் பாடுவார்.
- கதைப் பாடலைச் சந்தத்துடன் பாடி நடிக்கும் திறனை வெளிப்படுத்துவார்.
- அதன் கருத்தை உணர்ந்து பாடிப் பாவத்தை நன்கு வெளிப்படுத்துவார்.
- இதேபோன்ற வேறு சிறுவர் பாடல்களை இனங்கண்டு அபிநயம் செய்வார்.

# செயற்பத்திரம் 2.2.2

## சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.

❖ முயலாரின் அகங்காரம் என்ற கதைப் பாடலைப் பாடி அதற்கேற்ற அங்க அசைவுகளுடனும், முகபாவத்துடனும் அபிநயம் செய்க.

❖ பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்ளுங்கள்.
- பாடலின் கருத்தைப் புரிந்து கொள்ளுதல்.
- நடிப்பில் ஈடுபடுதல்.
- அங்க அசைவுகளைத் தாளத்துடன் மேற்கொள்ளல்.

## கதைப் பாடல்
## முயலாரின் அகங்காரம்.

முயல் - என்னைப் போல விரைவாக எட்டித் தாவி ஓடுபவர்
பென்னம் பெரிய உலகினிலே போட்டிக்கொருவர் யாருளரோ
சின்னக் கால்கள் ஆனாலும் சேர்ந்துத் தாவிப் பாய்ந்திடுவேன்.
மின்னல் வேகம் காட்டிடுவேன். மேவித் தாவி ஓடிடுவேன்.
நாய்கள் என்னோடோடிடுமோ. நரிகள் தானும் ஓடிடுமோ

## ஆமையாரின் பொறுமை

முயல் - நாலு காலும் வாலுந் தலையும் மேலுங் கீழும் ஓடு பூட்டி
நகர்ந்து போகும் ஆமையாரே. நத்தை கூட டாடா சொல்லும்
அசைந்தசைந்து நடந்து போகும் ஆமையாரே. ஆமையாரே
இசைந்திடுவீர் ஓடிப் பார்ப்போம். இறுதி வெற்றி நாமும் பார்ப்போம்.

ஆமை - சும்மா சும்மா துள்ளாதே. சோம்பேறி என்றென்னை எண்ணாதே.
கும்மாளங்கள் போடாதே. கூடாத எண்ணங்கள் கொள்ளாதே.
போட்டிக்கு நானும் வந்திடுவேன். புரிந்திட விதிகள் கூறிடுவாய்
காட்டிடுவேன் என் வீரத்தை - கடைசி வெற்றி என் வெற்றி!

### சம்பாஷனை

காட்டுக்கு வெளியே ஆலமரம் கல்லுப் பாறை அதன் கீழே
நம்மில் முதலாய் சென்றவர்கள் நாட்டிடுவோம் வெற்றிக் கொடியங்கே

## போட்டி ஆரம்பம்

சம்மதம் சம்மதம் சம்மதம்! சாதித்திடும் ஓட்டப் போட்டி
மேவித் திறன் நானும் காட்டச் சம்மதம் சம்மதம் சம்மதம்.

முயல் - தாவித் தாவி ஓடி வந்தேனே. தண்ணீர் தாகம் தீர்க்க நானும்
போவேனே. மேவி நாலு காலும் நோகுதே. நல்ல
மெத்தை போல பத்தை கிடக்குதே.

வாயிலே கொட்டாவி வருகுதே. தூக்கம் வந்து கண்களை
சுழற்றுதே. பாயும் கால்கள் நாலும் ஓயுதே. கொஞ்சம்
படுத்திருந்து பார்க்கத் தோணுதே.

ஆமை - ஆடி ஆடி ஆமை நானே அசைதசைந்து வருவேனே
நாடி உறுதி கொண்டு வாழ்வில் நானும் வெற்றி அடைவேனே
உறுதியுடனே உளம் சோராமல் உயர்ந்த வெற்றி அடைவேனே

இறுதி வெற்றி காணும் வரைக்கும் இயன்ற முயற்சி செய்வேனே
சோம்பிக் கிடந்தால் வாழ்விலே சோகம் வருமே தாழ்விலே
*வேம்பின் கீழே முயலுமே தூங்கித் துயரில் வீழுமே*
பற்றிப் பாறை மீதினில் பண்புடனானடைந்தேனே. வெற்றிக்
கொடியை நாட்டினேன் வீரவானைக் காணேனே

முயல் - பாய்ந்து ஓடி வந்தேனே பதுங்கித் தூங்கி கிடந்தேனே
ஓய்ந்து போன மனத்தினால் உயர்ந்த வெற்றி இழந்தேனே
மெல்ல மெல்ல நடந்தாலும் மிகுந்த உறுதி கொண்டதனால்
நல்ல வெற்றி நீர் கொண்டீர். நண்பா ஆமை வாழியவே.

**தேர்ச்சி 2.0** : சூழலில் காணப்படுகின்ற இயற்கை அம்சங்களையும் கிராமிய கலை தொடர்பான ஆக்கச் செயற்பாடுகளையும் வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம் 2.4** : வருட இறுதியில மாணவரகள தமது ஆககங்களை மேடையேற்றுவார்.

**செயற்பாடு 2.4** : மாணவர்கள் ஆகிய நாம் கற்றுக் கொண்ட நடனங்களை ஒழுங்கு முறைப்படி ஆற்றுகைப்படுத்துவோம்.

**நேரம்** : 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள். (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : நிகழ்ச்சிகளின் பாடல்கள் எழுதப்பட்ட அட்டை, அவை ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, செயற்பத்திரம் 2.4.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு.**

**படி 2.4.1**

- ஆற்றுகை நிகழ்வு என்றால் என்ன என வினவுதல்.
- ஏற்கனவே கற்ற உருப்படிகளைப் பட்டியல்படுத்த மாணவர்களுக்கு இடமளியுங்கள்.
- நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது, ஆற்றுகை செய்வது தொடர்பாகவும் பின்வரும் விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

◆ நடன நிகழ்ச்சிகளை ஆற்றுகைப்படுத்தல் தொடர்பான திட்டமிடல்.
◆ செய்ய வேண்டிய பணிகளை வெவ்வேறு குழுக்களிடம் ஒப்படைத்தல்.
◆ தேவையான உபகரணங்கள்.
◆ தேவையான பக்கவாத்தியங்கள்.
◆ தேவையான ஆடை, ஆபரணங்கள்.
◆ இடம்பெறும் நாள், நேரம், ஆடை, ஆபரணங்கள்.
◆ ஆரம்ப நிகழ்ச்சிகள்
◆ தொடர்ந்துவரும் நிகழ்ச்சிகள்
◆ இறுதி நிகழ்ச்சி

(20 நிமிடங்கள்)

**படி 2.4.2**

- மாணவரிடம் செயற்பத்திரத்தை வழங்குக.
- செயற்பத்திரத்தில் உள்ளவற்றை நிறைவேற்ற நெறிப்படுத்துங்கள்.
- ஆசிரியர், மாணவர்களின் வேலைகளை அவதானித்து ஆலோசனை வழங்குதல்.

(30 நிமிடங்கள்)

படி 2.4.3

- ஒவ்வொரு குழுவும் தத்தமது வேலைத் திட்டத்தைச் சமர்ப்பிக்கச் செய்தல்.
- அதனை அவதானித்து ஏனையோர் கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- குழுக்கள் வேலைத் திட்டங்களைத் தொகுத்துக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.

◆ தேவையான உபகரணங்களைப் பொருட் செலவின்றிப் பெற்றுக் கொள்ள ஆலோசனை வழங்குதல்.
◆ ஆடை, ஆபரணங்களும் அவ்வாறே இருத்தல் சிறந்தது.
◆ நிகழ்ச்சி நிரலில் இடம்பெறும் உருப்படிகளின் ஒழுங்கு
◆ கற்ற நடனங்கள் எல்லாவற்றையும் தயாரித்து மேடையேற்றல்.

(30 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- திட்டமிட்டுப் பயிற்சி செய்து நடன நிகழ்ச்சிகளை மேடையேற்றும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- நிகழ்ச்சி நிரலை தயாரிப்பார்.
- உபகரணங்களையும், வாத்தியக் கருவிகளையும் தேர்ந்தெடுப்பார்.
- தேவையான ஆடை ஆபரணங்களைத் தேர்ந்தெடுப்பார்.
- ஆரம்ப, இறுதி, தொடர்ந்து வரும் உருப்படிகளைத் தேர்ந்தெடுப்பார்.

# செயற்பத்திரம் 2.4.2

**சகல மாணவருக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**

❖ கலை விழாவிற்கான நிகழ்ச்சி நிரலைத் தயார் செய்க.

❖ தேவையான உபகரணங்களைத் தெரிவு செய்க.

❖ தேவையான ஆடை, ஆபணரங்கள், பக்க வாத்தியங்களைத் தெரிவு செய்க.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டல்.

**செயற்பாடு 3.4** : நாட்டடவுகளைப் பற்றி அறிந்து முதலாவது, இரண்டாவது அடவுகளை ஆடப் பழகுவோம்.

**நேரம்** : 2 மணித்தியாலங்கள் 40 நிமிடங்கள் ( 04 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : நாட்டடவு தாள அட்டவணை, நாட்டடவின் படங்கள் ஒட்டப்பட்ட அட்டை, தட்டுக்கழி,தட்டுப்பலகை, அடவில் பாவிக்கப்படும் முத்திரைகள் எழுதப்பட்ட அட்டை, செயற்பத்திரம் 3.4.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.4.1**

- நாட்டடவு முதலாவதைக் கையுடன் ஆசிரியர் ஆடிக் காட்டல்.
- நாட்டடவு என்ற பெயர் வரக் காரணம் யாதாயிருக்கும் என வினவி, மாணவரின் கருத்தைக் கூற இடமளியுங்கள்.
- கால்களை நாட்டிச் செய்வதனால் நாட்டடவு என்ற பெயர் வந்ததெனக் கூறிக் கலந்துரையாடுதல்.

- தாள அட்டவணையைக் காட்டி விளக்குதல்.
- சொற்கட்டைத் தாளத்துடன் போட்டு காட்டுதல் - தெய்யும் தத்தத் தெய்யும் தாஹா எனக் கூறுதல்.
- நாட்டடவு எட்டு வகைப்படும். எட்டு அடவுகளும் ஆதி தாளத்தில் அமைந்துள்ளன.
- எட்டு அடவுகளும் ஒரே சொற்கட்டில் அமைந்திருக்கும்.
- அடவில் பாவிக்கப்படும் முத்திரைகள் விளக்கப்பட அட்டையாகக் காட்சிப்படுத்தி விளக்கம் அளித்தல்.
- கைகளின் செய்கை இந்த அடவில் ஆரம்பமாகின்றது.
- பரத நாட்டிய அப்பியாசவரிசையில் இரண்டாவது அடவு வகையாகும்.
- நாட்டடவிற்குக் கைகளை ஆரம்பத்தில் பிடிக்கும் முறை நாட்டியாரம்பம் எனப்படும்.
- இந்த அடவுகளில் கூடுதலாகப் பாவிக்கப்படும் முத்திரை திரிப்பதாகம் ஆகும்.
- அடவினை தாளம் போட்டு ஆசிரியர் காண்பிக்க மாணவர்கள் போடுதல் (கொலுப்பித்தல்.)
- ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து தாளம் போடுதல்.
- 1ஆவது அடவின் காற் செய்கையை 1ஆம் காலத்தில் ஆசிரியர் ஆடுதல், அரைமண்டி,கால்களின் நிலை என்பவற்றைக் கவனித்தல் வேண்டும்.
- மாணவர் பின்பற்றி ஆடுதல்.
- 2ஆம், 3ஆம் காலங்களில் பயிற்சி செய்தல்.
- கைச் செய்கையை முதலாம் காலத்தில் ஆடுதல்.

- தொடர்ந்து 2ஆம், 3ஆம் காலங்களில் கைச் செய்கையை மாத்திரம் செய்தல்.
- கைச் செய்கை, காற் செய்கை இரண்டினையும் சேர்த்துப் பயிற்சி செய்தல்.
- 2ஆவது அடவின் காற் செய்கையைச் செய்து காட்டுதல்.
- மாணவர் அரைமண்டியில் நன்கு உட்கார்ந்து கைகளை நாட்டியாரம்பத்தில் முறையாக வைத்து ஆடுவதை ஊக்குவித்துக் கைகளின் செயல் முறைப் பயிற்சியைச் செய்தல். மூன்று காலங்களிலும் கையும், காலும் சேர்ந்து பயிற்சியைச் செய்தல்.
- அங்க சுத்தம், அரைமண்டி, கண்கள், கைகளின் செயல்முறைகளை அவதானித்துப் பயிற்சி செய்தல்.
- திரிப்பதாகக்கையை உள்நோக்கித் திருப்பும் போது கண்கள் உள்ளங் கைகளைப் பார்த்துப் பின் கைகள் பழைய நிலைக்குத் திரும்பும் போது கண்கள் நேராக நோக்க வேண்டும்.

(40 நிமிடங்கள்)

## படி 3.4.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- சகல குழுக்களும் செயற்பத்திர அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்படுகிறார்களா என உறுதிசெய்து முழுமையாக்குங்கள்.

(80 நிமிடங்கள்.)

## படி 3.4.3

- ஒவ்வொரு குழுவும் தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மற்றைய குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலிற் பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.

- நாட்டடவின் சொற்கட்டு தெய்யும்தத்த தெய்யும் தாஹா ஆகும். அது எட்டு வகைப்படும். ஆதி தாளத்தில் இவ்வடைவு அமைந்துள்ளது, கைகளின் செய்கை இவ்வடவிலே ஆரம்பமாகிறது.
- அடைவின் வரைவிலக்கணத்தை முழுமையாகக் கூறுதல். அமைந்துள்ள தாளம், சொற்கட்டு, முத்திரைகள் போன்ற முழுமையான விபரங்கள்.
- அடைவினை திரிகாலங்களிலும் அங்க சுத்தம், அரைமண்டியைக் கவனித்து ஆடுதல்.
- தாளம் போட்டுத் திரிகாலங்களிலும் கொலுப்பித்தல்.
- அரைமண்டி, அங்க சுத்தம், கால்களின் நிலை, கண்களின் அசைவு, நாட்டியாரம்பம் முதலானவை ஆடும் போது கவனிக்கப்பட வேண்டும்.

(40 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- நாட்டடவு என்ற பெயர் வந்துள்ளன எனக் கூறுவார்.
- அதன் வகைகளைக் குறிப்பிடுவார்.
- அடவின் வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுவார்.
- நாட்டடவின் முதலாம், இரண்டாம் அடவுகளை ஆடுவார்.
- நாட்டடவின் சொற்கட்டைக் கொலுப்பிப்பார்.
- அரைமண்டி, அங்க சுத்தம் பேணி 1ஆம், 2ஆம் நாட்டடவுகளை ஆடுவார்.

# செயற்பத்திரம் 3.4.2

**சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**

1. நாட்டடவு என ஏன் பெயர் வந்தது?
2. அது எத்தனை வகை?
3. அவ்வடவிற்கு கைகள் வைக்கும் நிலையை எவ்வாறு அழைப்பர்?
4. அதன் சொற்கட்டு என்ன?
5. அது என்ன தாளத்தில் அமைந்துள்ளது?
6. பரத நாட்டிய அடவு வரிசையில் அது எத்தனையாவது அடவு?
7. இந்த அடவு வகையிற் கூடுதலாகப் பாவிக்கப்படும் முத்திரை எது?
8. அடவினைத் திரிகாலங்களிலும் கொலுப்பிக்குக.
9. முதலாவது நாட்டவினை திரிகாலங்களிலும் ஆடவும்.
10. இரண்டாவது நாட்டவினைத் திரிகாலங்களிலும் ஆடவும்.
11. அடவுகள் ஆடும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ளவும்.
    - அரைமண்டி, கால்களின் நிலை
    - அங்கசுத்தம், நாட்டியாரம்பம்
    - கண்களின் அசைவுகள்.

## நாட்டடவு 1 - 8 அடவுகளுக்குரிய தாள அட்டவணை

சொற்கட்டு : தெய், யும், தத், தத், தெய், யும், தாஹா /
தெ, யும், தத், தத், தெய், யும், தாஹா//

தாளம் : ஆதி (சதுஸ்ர திரிபுடை)

| $/_4$ | 0 | 0 |
|---|---|---|
| **1ஆம் காலம்**<br>தெய், யும், தத், தத், தெய், யும் தாஹா / | தெய், யும், தத், தத், | தெய், யும், தாஹா// |
| **2ஆம் காலம்**<br>தெய், யும் தத், தத், தெய், யும், தாஹா<br>தெய், யும், தத், தத், தெய், யும் தாஹா | தெய், யும், தத், தத்,<br>தெய், யும், தாஹா | தெய், யும், தத், தத்,<br>தெய், யும், தாஹா// |
| **3ஆம் காலம்**<br>தெய், யும், தத், தத், தெய், யும், தாஹா<br>தெய், யும், தத், தத், தெய், யும், தாஹா<br>தெய், யும், தத், தத், தெய், யும், தாஹா<br>தெய், யும், தத், தத், தெய், யும், தாஹா | தெய், யும், தத், தத்,<br>தெய், யும், தாஹா<br>தெய், யும், தத், தத்,<br>தெய், யும், தாஹா | தெய், யும், தத், தத்,<br>தெய், யும், தாஹா<br>தெய், யும், தத், தத்,<br>தெய், யும், தாஹா// |

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகளில் சிலவற்றை ஆடிக் காட்டல்.

**செயற்பாடு 3.4** : நாட்டடவுகள் 3,4 ஆகியவற்றை ஆடுவோம்.

**நேரம்** : 2 மணித்தியாலங்கள் 40 நிமிடங்கள் ( 4 பாடவேளை)

**தர உள்ளீடு** : 3,4 நாட்டடவுகள் ஒட்டப்பட்ட படஅட்டை, தட்டுக்கழி, தட்டுப்பலகை, செயற்பத்திரம் - 3.4.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.4.1**

- நாட்டடவு 3ஐயும், 4ஐயும் ஆசிரியர் ஆடிக் காட்டல்.
- நாட்டடவு 1, 2. என்பவற்றுக்கு இடையேயுள்ள ஒத்த பண்புகளை வினவி, மாணவர் தம் கருத்தைக் கூற இடமளியுங்கள்.
- பின்னால் காலை வைத்து ஆடும் செய்கையினால் இவ்வடவுகள் வேறுபடும் பாங்கைக் கூறிக் கலந்துரையாடுதல்.

◆ நாட்டடவி 3ஆவது காற் செய்கையினை 1ஆம் காலத்தில் ஆசிரியர் ஆடுதல்.
◆ மாணவர் கவனித்துப் பின்பற்றி ஆடுதல்.
◆ ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து ஆடுதல்.
◆ அடவு 3இன் கைச் செய்கையினை மாத்திரம் செய்தல் - திரிப்பதாக முத்திரை மாத்திரம் பாவிக்கப்படும்.
◆ காலுடன், கையும் சேர்ந்து பயிற்சியை மேற்கொள்ளல்.
◆ அடவி 4ஆவது காற் செய்கையினை ஆடிக் காட்டுதல்.
◆ மாணவர் பின்பற்றி ஆடுதல்.
◆ நான்காவது அடவின் கைச் செய்கையினை மாத்திரம் செய்தல்.
◆ மூன்று காலங்களிலும் பயிற்சி செய்தல்.
◆ காலும் கையும் சேர்ந்த பயிற்சியை மேற்கொள்ளல்.
◆ அரைமண்டி, அங்க சுத்தம், அழுத்தம், கால்களின் நிலை, கண்களின் அசைவுகள் ஆகியன பயிற்சியின் போது சிரத்தையுடன் கவனிக்கப்பட்டு ஆடலில் ஈடுபடல்.

(40 நிமிடங்கள்)

**படி 3.4.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- சகல குழுக்களும் செயற்பத்திர அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்படுகிறார்களா என உறுதிசெய்து முழுமையாக்குங்கள்.

(80 நிமிடங்கள்.)

படி 3.4.3

- ஒவ்வொரு குழுவும் தமது பெறுபேறுகளைச் சமர்ப்பித்து ஆற்றுகையை நிகழ்த்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- **ஒரு குழு தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மற்றைய குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.**
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலிற் பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.

◆ நாட்டடவு 3ஆம், 4ஆம் அடவுகளுக்குத் திரிபதாக முத்திரை உபயோகிக்கப்படும்
◆ நாட்டடவு 3இன் காற் செய்கை, பின்னர் கைச்செய்கை, பின்பு முழுமையாகப் பயிற்சி செய்தல்.
◆ அவ்வாறே நாட்டடவு 4இன் காற் செய்கை பின்னர் கைச் செய்கை அதன்பின் முழுமையாகப் பயிற்சி செய்தல்.
◆ பயிற்சியின் போது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவை:-
  - அரைமண்டி
  - பாதங்களின் விரிந்த நிலை
  - அங்க சுத்தம்
  - கண்களின் நிலை
  - கால்களின் அழுத்தம் என்பனவாம்.
◆ பாதங்களுக்கிடையே காணப்படும் இடைவெளி

(40 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

■ நாட்டடவு 3இனை முழுமையாக ஆடுவார்.
■ நாட்டடவு 4இனை முழுமையாக ஆடுவார்.
■ இரு அடவுகளுக்கும் உபயோகிக்கப்படும் முத்திரைகளை அறிந்து கூறுவார்.
■ அடவுகளை ஆடும்போது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்களை வெளிப்படுத்துவார்.

# செயற்பத்திரம் 3.4.2

**சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**

❖ 3ஆவது, 4ஆவது நாட்டடவுகளுக்குப் பாவிக்கப்படும் முத்திரை யாது?
❖ 3ஆவது 4ஆவது நாட்டடவுகளைத் திரிகாலங்களிலும் ஆடவும்.
❖ அடவுகளை ஆடும் போது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் யாவை?

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.5** : தாளத்திற்கேற்ப ஆடல்.

**செயற்பாடு 3.5** : ஆதி, ரூப தாளங்களை அறிந்து அத்தாளங்களுக்கேற்ப ஆடல்களை அமைத்து ஆடுவோம்.

**நேரம்** : 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் ( 02 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : தாள அங்கங்கள் விளக்கப்பட்ட அட்டை, தடுக்கழி, செயற்பத்திரம் 3.5.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.5.1**

- ஆசிரியர் ஆதி, ரூபக தாளங்களைத் தனித்தனியே போட்டுக் காண்பித்தல்.
- இரு தாளங்களுக்கும் இடையே அவதானித்த வித்தியாசங்களைக் கூற மாணவர்களுக்கு இடமளித்தல்.
- தாள அங்கங்களையும் செய்முறைகளையும் பற்றிக் கலந்துரையாடல்.

◆ விளக்கமளிக்கப்பட்ட அட்டவணையைக் காட்சிப்படுத்தி தாள அங்கங்களை விளக்குதல்.
◆ ஆதி தாளத்தில் லகு, த்ருதம் ஆகிய அங்கங்கள் உண்டு. லகுவின் எண்ணிக்கை 5 ஜாதிகளுக்கேற்ப மாறுபடும்.
◆ லகு என்பது ஒரு முறை தட்டி விரல்களை எண்ணுதல் ஆகும். இதன் அடையாளம் 1
◆ ஆதி தாளத்தில் 1 O O ஆகிய அங்கங்கள் உண்டு.
◆ சதுஸ்ர திரிபுடை தாளம் தான் ஆதி தாளம் என்ற பெயரில் விளங்குகின்றது.
◆ மிகவும் பரிச்சயமான பாடல்களில், கூடுதலான அடவுகள் ஆதி தாளத்திலேயே அமைந்திருக்கும்.
◆ இதன் செயன்முறை ஒருமுறை தட்டி மூன்று விரல்களை எண்ணிப் பின்னர் ஒரு முறை தட்டி ஒரு முறை திருப்பிப் பின்னர் இன்னொரு முறை தட்டித் திருப்புதல் ஆகும். .
◆ ஆசிரியர் ஆதி தாளம் போட்டுக் காண்பித்தல். மாணவர்கள் பின்பற்றிப் போடுதல்.
◆ ரூபக தாளம் O/4 என்ற அங்கங்களை உடையது.
◆ ஒருமுறை தட்டித் திருப்பிய பின்னர் மீண்டும் தட்டி விரல்களைமூன்று முறை எண்ணுதல் இதன் செயன்முறையாகும்.
◆ ரூபக தாளத்தினை ஆசிரியர் போட்டுக் காண்பித்தல். மாணவர் தாளத்தினைப் போடுதல்.
◆ ஆசிரியர் ஆதி தாளம் போட்டவாறு தகதிமி, தகதிமி என்ற சொற்கட்டைக் கூறுகையில் மாணவர் அதற்கேற்ற வகையில் வெவ்வேறு கோலங்களில் ஆடலில் ஈடுபடுவர்.
◆ அவ்வாறே ரூபக தாளத்தினை ஆசிரியர் போட்டவாறு தகதிமி என்ற சொற் கட்டைக் கூறுகையில் மாணவர் அதற்கேற்றவாறு ஆடலில் ஈடுபடுவர்.

(20 நிமிடங்கள்)

படி 3.5.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- சகல குழுக்களும் செயற்பத்திர அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்படுகிறார்களா என உறுதிசெய்து முழுமையாக்குங்கள்.

(40 நிமிடங்கள்.)

படி 3.5.3

- ஒவ்வொரு குழுவும் தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மற்றைய குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலிற் பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.

  - ஆதி தாளத்தில் லகு, த்ருதம் ஆகிய அங்கங்கள் உண்டு. லகுவின் அடையாளம் / த்ருதத்தின் அடையாளம் O அதற்குரிய அங்கங்கள் $1_4$OO ஆகும். சதுஸ்ரதிரிபுடை தாளமே ஆதி தாளம் என்று அழைக்கப்படும்.
  - லகுவின் எண்ணிக்கை ஜாதிகளுக்கேற்ப மாறுபடும். ரூபக தாளத்தின் அங்கம் O 1 ஆகும்.
  - ஆதி தாளத்தினைப் போட அதற்கேற்ப மாணவர்கள் ஆடுதல்.
  - ரூபக தாளத்தினைப் போட அதற்கேற்ப மாணவர்கள் ஆடுதல்.

(20 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ஆதி தாளத்தின் அங்கங்களைக் குறிப்பிடுவார்.
- ஆதி தாளத்தின் செயன்முறையைச் செய்து காட்டுவார்.
- ஆதி தாளத்தின் வேறு பெயரைக் குறிப்பிடுவார்.
- ரூபக தாளத்தின் அங்கங்கள், செயன்முறை ஆகியவற்றை அறிந்து கூறுவார்.
- ஆதி, ரூபக தாளங்களுக்கேற்ப ஆடல்களை மேற்கொள்வார்.

# செயற்பத்திரம் 3.5.2

**சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**

1. ஆதி தாளத்தின் அங்கங்கள் எவை?
2. அதன் வேறு பெயர் என்ன?
3. ஆதி தாளத்தினைப் போட்டுக் காண்பிக்குக.
4. ஆதி தாளத்தில் ஆடல்களை மேற்கொள்ளுக.
5. ரூபக தாளத்தின் அங்கங்கள் எவை?
6. ரூபக தாளத்தினைப் போட்டுக் காண்பிக்குக.
7. ரூபக தாளத்தில் ஆடல்களை மேற்கொள்ளுக.
8. லகுவின் செயன்முறை என்ன?
9. துருதத்தின் செயன்முறை என்ன?
10. லகுவின் செயன்முறை எதற்கேற்ப மாறுபடும்? அவை எவை?

## பின்னிணைப்புப் பத்திரம்

| | தாளங்களின் பெயர் | ஜாதி | அங்கங்கள் | அட்சரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆதி தாளம் / திரிபுடை தாளம் | சதுஸ்ரம் | $1_4\ 0_2\ 0_2$ | 08 |
| 2. | ரூபக தாளம் | சதுஸ்ரம் | $0_2\ \ 1_4$ | 06 |

### செய்முறை

**1. ஆதி தாளம் / திரிபுடை தாளம்**

கையால் ஒரு தட்டுத் தட்டி மூன்று விரல்களை எண்ணிய பின் ஒரு தட்டும் வீச்சும், ஒரு தட்டும் வீச்சும்.

**2. ரூபக தாளம்**

கையை ஒரு முறை தட்டித் திருப்பிய பின் கையை மீண்டும் ஒரு முறை தட்டி மூன்று விரல்களை எண்ணுவதே

லகு, த்ருதம், அனுத்ருதம், ஆவர்த்தனம் ஆகியவற்றின் விளக்கம்.

01. லகு :- கையைத் தட்டி விரல்களை எண்ணுதல் லகு எனப்படும்.
இதன் குறியீடு :- / , ஜாதிகளுக்கேற்ப எண்ணிக்கை மாறுபடும்.

02. த்ருதம் :- கையைத் தட்டித் திருப்புதல் த்ருதம் எனப்படும்.
இதன் குறியீடு :- 0, எண்ணிக்கை - 2

03. அனுத்ருதம் :- கையை ஒரு முறை தட்டுதல்.
இதன் குறியீடு :- ◡, எண்ணிக்கை - 1

04. ஆவர்த்தனம்:- ஒரு தாளத்திற்குரிய அங்கங்களை ஒரு முறை போடுவது ஒரு ஆவர்த்தனம் எனப்படும்
இதன் குறியீடு :- //

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.6** : வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.6** : கிராமிய நடனங்களில் ஒன்றான கோலாட்டத்தினை ஆடிப் பழகுவோம்.

**நேரம்** : 02 மணித்தியாலங்கள் ( 03 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : கோலாட்டப் படங்கள் ஒட்டப்பட்ட அட்டை, தட்டுக்கழி, தட்டுப்பலகை, கோல்கள்,, பாடல் எழுதிய அட்டை, ஒலி, ஒளிப்பதிவு நாடா, தொலைக்காட்சிப் பெட்டி, பதிவுக் கருவி, செய்பத்திரம் 3.6.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.6.1**

- ஆசிரியர் பாடலைப் பாடி கோலாட்டப் பாடலை ஆடிக் காட்டுதல்.
- பாடலிலும், ஆடலிலும் அவதானித்தவற்றைக் கூற இடமளியுங்கள்.
- கோல்களை வைத்துத் தட்டியாடும் கிராமிய நடனத்தின் பண்புகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- கோலாட்டப் படங்கள் ஒட்டப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- பாடலைக் காட்சிப்படுத்தி மாணவர் அதனை வாசித்தல்.
- படங்களையும், பாடல்களையும் தொடர்பு படுத்தல்.
- பாடலை ஆசிரியர் பாடுதல்.
- மாணவர் தொடர்ந்து பின்பற்றிப் பாடுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- பாடலின் இராக, தாளத்தைக் குறிப்பிடுதல்.
- பாடலுடன் கோலாட்டத்துக்கேற்ற விதத்தில் சுவடுகளை அமைத்துப் பயிற்சி அளித்தல்.
- ஏற்கனவே அறிமுகமான கோலங்களான V,X, / ஆகியவற்றில் ஆடுதல்.
- மகிழ்ச்சியாக பாடலுக்கேற்ற விதத்தில் ஆடலில் ஈடுபடல்.
- கோல்களை ஏற்ற விதத்தில் சரியான முறையில் உபயோகித்தல்.

(30 நிமிடங்கள்)

**படி 3.6.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களை எண்ணிக்கைக்கேற்ப குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்படுகிறார்களா என உறுதிசெய்துமுழுமையாக்குங்கள்.

(50 நிமிடங்கள்.)

படி 3.6.3

* ஒவ்வொரு குழுவும் தமது பெறுபேறுகளைச் சமர்ப்பித்து ஆற்றுகையை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
* **ஒரு குழு தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மற்றைய குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.**
* குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
* கலந்துரையாடலிற் பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.

> ◆ பாடலின் இராக தாளத்தைக் குறிப்பிடல்.
> ◆ பாடலைத் தாளத்துடன் பாடுதல்.
> ◆ கோலாட்ட நடனத்தின் கிராமியப் பண்புகளுக்கு ஏற்ற விதமாகப் பல்வேறு கோலங்களில் ஆடுதல்.
> ◆ மகிழ்ச்சியாக ஆடுதல்.
> ◆ கோல்களைச் சரியான முறையில் உபயோகித்தல்.

(40 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

■ கோலாட்டப் பாடலின் இராக, தாளத்தைக் குறிப்பிடுவார்.
■ பாடலுக்கேற்ற விதத்தில் ஆடுவார்.
■ பல்வேறு கோலங்களான V, X. / ஆகியவற்றில் ஆடுவார்.
■ கோலாட்டத்தின் விசேட அம்சங்களைக் குறிப்பிடுவார்.
■ தேவைப்படும் போது கோலாட்ட நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவார்.

# செயற்பத்திரம் 3.6.2

**சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**

1. கோலாட்டப் பாடலின் இராகம், தாளம் என்ன?
2. கோலாட்டத்தின் விசேட அம்சங்கள் எவை?
3. கோலாட்டத்தினை மகிழ்ச்சியாக சரியான முறையில் கோல்களை உபயோகித்து பல்வேறு கோலங்களில் ஆடிக் காட்டுக..

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டிய பாத அசைவுகளையும், கை முத்திரைகளின் வகைகளையும் கிராமிய நடனங்களின் எளிய சுவடுகளையும் லயத்துடன் ஆடிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.6** : வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக் காட்டுவார்.

**செயற்பாடு 3.6** : கிராமிய நடனங்களில் ஒன்றான கும்மியை ஆடப் பழகுவோம்.

**நேரம்** : 02 மணித்தியாலங்கள் ( 03 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : கும்மிப் படங்கள் ஒட்டப்பட்ட அட்டை, தட்டுக்கழி, தட்டுப்பலகை, கோல்கள்,, பாடல் எழுதிய அட்டை, ஒலி, ஒளிப்பதிவு நாடா, தொலைக்காட்சிப் பெட்டி, பதிவுக் கருவி, செயற்பத்திரம் 3.6.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 3.6.1**

- ஆசிரியர் பாடலைப் பாடி கும்மி நடனத்தினை முழுமையாக ஆடிக் காட்டுதல்.
- பாடலிலும், ஆடலிலும் அவதானித்தவற்றைக் கூற இடமளியுங்கள்.
- கைகளைக் கொட்டி ஆடும் கிராமிய நடனத்தின் பண்புகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- ◆ பாடலைக் காட்சிப்படுத்தல் - வாசித்தல்.
- ◆ கும்மி நடனத்தின் படங்கள் ஒட்டப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ◆ பாடலைத் தாளத்துடன் ஆசிரியர் பாடுதல்.
- ◆ மாணவர்கள் தொடர்ந்து பாடுவதற்குப் பயிற்சி அளித்தல் - இராக, தாளத்தைக் குறிப்பிடுதல்.
- ◆ இணைந்து பாடுதல்.
- ◆ கும்மி நடனத்தின் விசேட பண்பு கைகளைக் கொட்டுதல் ஆகும்.
- ◆ கும்மிப் பாடல்களுக்கு ஏற்ற விதத்தில் ஆடப் பயிற்சி அளித்தல்.
- ◆ கிராமிய நடனங்களுக்கு ஏற்ற கோலங்களில் ஆடுதல்.
- ◆ ஏற்கனவே ஆடிய கோலங்களான U,X, / ஆகியவற்றில் ஆடுதல்.
- ◆ மகிழ்ச்சியாக பாடலுக்கேற்ற விதத்தில் ஆடலில் ஈடுபடல்.
- ◆ படத்தையும், பாடலையும் தொடர்புபடுத்துதல்.

(40 நிமிடங்கள்)

**படி 3.6.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாகவோ, மூன்று குழுக்களாகவே எண்ணிக்கைக்கேற்ப பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்படுகிறார்களா என உறுதிசெய்து முழுமையாக்குங்கள்.

(40 நிமிடங்கள்.)

**படி 3.6.3**

- ஒவ்வொரு குழுவும் தமது பெறுபேறுகளைச் சமர்ப்பித்து ஆற்றுகையை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- **ஒரு குழு தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மற்றைய குழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.**
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலிற் பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.

> - பாடலைத் தாளத்துடன் பாடுதல்.
> - இராக, தாளம் குறிப்பிடுதல்.
> - கும்மி நடனத்தின் கிராமியப் பண்புகளுக்கு ஏற்ற விதமாகச் சுவடுகளை அமைத்தல்.
> - பல்வேறு கோலங்களான U./ ,X,V இல் ஆடுதல்.
> - மகிழ்ச்சியாக ஆடுதல்.

(40 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- கும்மி நடனத்தின் இராக, தாளத்தை அறிந்து குறிப்பிடுவார்.
- பாடலுக்கேற்ற விதத்தில் ஆடுவார்.
- பல்வேறு கோலங்களான V,U, X. / ஆகியவற்றில் ஆடுவார்.
- கும்மி நடனத்தின் விசேட அம்சங்களைக் குறிப்பிடுவார்.

# செயற்பத்திரம் 3.6.2

**சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**

1. கும்மிப் பாடலின் இராக, தாளம் என்ன?
2. கும்மியின் விசேட பண்புகள் யாவை?
3. கும்மி நடனத்தினை மகிழ்ச்சியுடன் பல்வேறு கோலங்களில் ஆடிக் காண்பிக்குக.

**தேர்ச்சி 4.0** : பரத நாட்டியம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.4** : ஒற்றைக்கை முத்திரைகளின் பெயர்களைக் கூறி, பதாக முத்திரை விநியோகத்தையும் கருத்துடன் கூறுவார்.

**செயற்பாடு 4.4** : ஒற்றைக்கை முத்திரைகளை அபிநயிப்போம். பதாக விநியோகத்தை அபிநயிப்போம்.

**நேரம்** : 02 மணித்தியாலம் (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** :
- முத்திரைகளின் படங்களுடைய விளக்கப்பட அட்டை, பதாக முத்திரை விநியோகம் எழுதப்பட்ட விளக்கப்பட அட்டை, பதாக முத்திரைப் படங்கள்
- செயற்பத்திரம் 4.4.2

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 4.4.1**

- நாம் வேலைகளில் ஈடுபடும் போது எம் கைகளும், விரல்களும் இயங்கும் முறை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- வெவ்வேறு வேலைகளுக்கு வெவ்வேறு விதமாக விரல்கள் அசையும் பாங்கை இரசித்துச் செயற்பட இடமளியுங்கள்.

> - அவ்வாறு செய்யப்படும் செய்கைகளுக்குத் தகுந்தபடி கையும், விரல்களும் அசைந்து மடங்கி விரிந்து செய்யப்படும் அபிநயமே முத்திரை எனப்படும்.
> - ஒரு கையினால் செய்யப்படுவது ஒற்றைக்கை முத்திரைகள் எனவும், அஸம்யுத ஹஸ்தாஹா எனவும் இரு கைகளினாலும் செய்யப்படுவது அதாவது இரு கைகளையும் இணைத்துச் செய்யப்படுவது இரட்டைக்கை முத்திரைகள் எனவும் ஸம்யுதஹஸ்தாஹ என்றும் அழைக்கப்படும்.

**படி 4.4.2**

- வகுப்பிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திலுள்ள அறிவுரைகளுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதிப்படுத்துக.
- பின்னிணைப்புப் பத்திரத்தை வழங்குங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 4.4.3

- ஒவ்வொரு குழுவும் தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஒரு குழு தமது பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது ஏனைய குழு அவற்றை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- குழுக்களின் பெறுபேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.

> - ஒற்றைக்கை முத்திரைகள் 1- 2.8 ஆகியவற்றை நன்கு அபிநயித்தல். கருத்துக்களை அறிதல்
> - ஒற்றைக் கை முத்திரையின் முதலாவது முத்திரையான பதாக முத்திரை விநியோகத்தின் கருத்தை அறிந்து அபிநயித்தல்.

(40 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- முத்திரைகள் என்றால் என்ன எனக் கூறுவார்.
- அவற்றின் பிரிவுகளையும் மறு பெயர்களையும் குறிப்பிடுவார்.
- ஒற்றைக் கை முத்திரைகளின் எண்ணிக்கை எத்தனை எனக் கூறுவார்.
- முத்திரைகளை அபிநயிப்பார்.
- பதாக முத்திரையின் விநியோகத்தின் கருத்தை அறிந்து அபிநயிப்பார்.

# செயற்பத்திரம் 4.4.2

**சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**

## குழு - I

1. முத்திரைகள் என்றால் என்ன?
2. ஒற்றைக்கை முத்திரைகளை எழுதுக / கூறுக.
3. அவற்றை அபிநயிக்குக.
4. அதன் மறுபெயர் என்ன? அவை எத்தனை?

**பின்னிணைப்புப் பத்திரம்**

## பதாக முத்திரை விநியோகம்

நாட்டியாரம்பே வாரிவாஹே வனே வஸ்த்து நிசேதனே/
குசஸ்தலே நிஷாயாம்ச நத்யாம் அமரமண்டலே //
துரங்கே கண்டனே வாயௌஷயனே கமனோத்யமே/
ப்ரதா பேச ப்ரஸாதேச சந்திரிகாயாம் கனாதபே //
கவாட பாடனே ஸப்தவிபக்த்யர்த்தே தரங்ககே /
வீதிப்ரவேச பாவேபி ஸமத்வேச அங்கராகதே //
ஆத்மார்த்தே ஸபதேசாபி தூஷ்ணீம் பாவநிதர்ஷனே/
தாளபத்ரேச கேடேச திரவ்யாதி ஸ்பர்ஷனே ததா//
ஆஷீர்வாதக்கிரியாயாம் நிருபஸ்ரேஷ்டஸ்ய பாவனே/
தத்ரதத்ரேதி வசனே ஸிந்தௌது ஸுக்ருதிக்ரமே//
ஸம்போதனே புறோகேபி கட்கரூபஸ்ய தாரனே/
மாஸே சம்வத்ஸரே வர்ஷதினே சம்மார்ஜனே ததா//
ஏவமர்த்யேஷு யுஜ்யந்தே பதாகஹஸ்த பாவனாஹ /

(35 நிமிடங்கள்)

| | | |
|---|---|---|
| நாட்டியாரம்பே | - | நாட்டியாரம்பம் |
| வாரிவாஹே | - | முகில்கள் |
| வனே | - | காடு |
| வஸ்த்துநிஷேதனே | - | பொருட்களை வேண்டாமென்று மறுத்தல். |
| குசஸ்தலே | - | மார்பு |
| நிஷாயாம்ச | - | இரவ |
| நத்யாம் | - | நதி |
| அமரமண்டலே | - | சுவர்க்கம் |
| துரங்கே | - | குதிரை |
| கண்டனே | - | வெட்டுதல் |
| வாயௌ | - | காற்று |
| ஷயனே | - | நித்திரை செய்தல் |
| கமனோத்யமே | - | முன்னே செல்லுதல். |
| ப்ரதாபேச | - | புகழ்தல் |
| ப்ரஸாதேச | - | நற்காரியம் |
| சந்திரிகாயாம் | - | நிலாவொளி |
| கனாதபே | - | வெப்பம் அல்லது கடும் சூரிய ஒளி |
| கவாட பாடனே | - | கதவை மூடித் திறத்தல். |
| ஸப்தவிபக்த்யர்த்தே | - | ஏழு .வேற்றுமை முடிவுகள் |
| தரங்ககே | - | சிறு அலைகள் |
| வீதிப்ரவேச | - | ஒரு வீதியினுட் பிரவேசித்தல். |

| | | |
|---|---|---|
| ஸமத்வேச | - | சமத்துவம் |
| அங்கராககே | - | உடம்பின் அங்கங்களைத் தொடுதல். |
| ஆத்மார்த்தே | - | தன்னைக் காண்பித்தல். |
| ஸபதே | - | சபதம் அல்லது சத்தியம் செய்தல். |
| தூஷ்னீம்பாவநிதர்ஷனே | - | அமைதி |
| தாளபத்ரேச | - | பனை ஓலை அல்லது பனை ஓலையில் எழுதுதல். |
| கேடேச | - | கேடயம் |
| திரவ்யாதிஸ்பர்ஷனே ததா | - | பொருட்களைத் தொடுதல். |
| ஆஷீர்வாதக்கிரியாம் | - | ஆசிர்வதித்தல் |
| நிருபஸ்ரேஷ்டஸ்ய | - | அரசர்களுக்குள் பெரியவன். |
| தத்ர தத்ரேதி வசனே | - | இங்கு அங்கு எனல். |
| ஸிந்தௌது | - | சமுத்திர அலைகள். |
| ஸுக்ருதிக்ரமே | - | நற்காரியங்களின் தொடர்ச்சி |
| ஸம்போதனே | - | ஒருவரை விளித்தல். |
| புறோகேபி | - | முன்னோக்கிச் செல்லல். |
| கட்கரூபஸ்யதாரனே | - | வாளும், கேடயமும் ஏந்துதல். |
| மாஸே | - | மாதம் |
| ஸம்வத்ஸரே | - | வருடம் |
| வர்ஷதினே | - | மழை நாள். |
| ஸம்மார்ஜனே | - | நிலத்தை துப்பரவாக்குதல் அல்லது துடைப்பத்தால் பெருக்குதல். |

**தேர்ச்சி 5.0** : இலங்கை வாழ் மக்களின் சமய சமூக விழாக்களில் இடம்பெறும் நடனங்களின் கலாச்சாரப் பின்னணியை அறிந்து விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 5.3** : இலங்கையின் பிரதேசவாரியான கூத்து வகைகளின் கலாசாரப் பின்னணியை விளக்குவார்.

**செயற்பாடு 5.3** : மன்னாரில் இடம்பெறும் நாட்டுக்கூத்து வகைகளைப் பற்றி அறிவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடு** :
- நாட்டுக்கூத்துப் படங்கள் ஒலி. ஒளிப்பதிவு நாடாக்கள், ஒலி, ஒளிப்பதிவுக் கருவிகள்,
- செயற்பத்திரம் 5.3.2
- பின்னிணைப்புப் பத்திரம்

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 5.3.1**

- இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெறும் கூத்துக்கள் பற்றிய படங்களைக் காட்டி இனங்காணச் செய்தல்.
- ஒளி - ஒலி நடாக்களைக் கருவிகளில் போட்டு காணச் செய்யலாம்.
- நாட்டுக் கூத்துக்களில் காணப்படும் பிரதேச வேறுபாட்டுச் சொற்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்துங்கள்.

◆ நாட்டுக் கூத்தின் தோற்றம்.
◆ அதன் பிரதேச வேறுபாடுகள்.
◆ உடை அலங்காரம்.
◆ நாட்டுக் கூத்தை இயக்குபவர்.
◆ வேறுபாட்ட பாங்குகள்

(10 நிமிடங்கள்)

**படி 5.3.2**

- மாணவரை எண்ணிக்கைக்கேற்ப குழுக்களாகப் பிரித்துச் செயறபத்திரங்களை வழங்குக.
- பின்னிணைப்புப் பத்திரத்தை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

படி 5.3.3

- ஒவ்வொரு குழுவும் தமக்கு வழங்கப்பட்ட பின்னிணைப்புப்பத்திரத்தை வாசித்துப் புரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- **செயற்பத்திரத்திற்கேற்ப மாணவர்கள் செயற்படுவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.**
- **பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.**
- **ஒரு குழு பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மறுகுழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.**
- **பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.**

◆ கிராமங்களே ஒரு நாட்டின், நாகரிகத்தையும், பண்பையும் வளர்த்தன.
◆ அக்கிராமங்களின் பெருமை.
◆ இலங்கையில் நாட்டுக் கூத்து ஆடப்படும் பிரதேசங்கள்.
யாழ்ப்பாணம், மன்னார், சிலாபம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, என்பன.
◆ நாட்டுக் கூத்தில் முக்கியமானவர் - அண்ணாவியார், கதைப் போக்கு, இசை, ஆடை என்பவற்றின் வித்தியாசத்தினால் இருவகை பாணிகளாக ஆடப்படுகின்றன.
◆ மன்னாரில் ஆடப்படும் நாட்டுக் கூத்தின் வகைகள்:-
வடபாங்கு, தென்பாங்கு
◆ அவற்றின் மறு பெயர்கள் - வடபாங்கு - யாழ்பாங்கு,
தென்பாங்கு - மாதோட்டப் பாங்கு
◆ மத அடிப்படையில் கூத்துக்கள் ஆடப்படுவதுண்டு - கிறிஸ்தவ மதக் கூத்துக்கள்.
◆ அதன் காரணம் - கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த மக்கள் கூடுதலாக மன்னாரில் வாழ்வதனாலாகும்.
◆ ஆடப்படும் கூத்துக்களின் பெயர்கள்.
- அந்தோனியார் நாடகம்.
- எஸ்தாக்கியர் நாடகம்
- மூவிராசாக்கள் நாடகம்
- ஞான சவுந்தரி நாடகம்
◆ அவை வேறுபடும் விடயங்கள்
- வடபாங்கு - விருத்தப்பா எனும் பாடல் வகை, வல்லோசையுடையது.
- தென்பாங்கு - பாடல் வகை மெல்லோசை உடையது.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ஒரு நாட்டின் நாகரீகம், பண்பை வளர்ப்பதைப் பற்றிக் அறிவார்.
- கிராமங்களின் பெருமையை அறிவார்.
- கிராமங்களில் நாட்டுக் கூத்து தோன்றிய பின்னணியைக் கூறுவார்.
- ஆடப்படும் பிரதேசங்கள், பாங்குகளை அறிந்து குறிப்பிடுவார்.
- நாட்டுக் கூத்தில் அண்ணாவியாரின் முக்கியத்துவம் பற்றி விபரிப்பார்.
- மன்னாரில் இடம்பெறும் கூத்துக்களின் விபரங்களை கூறுவார்.
- கூத்துக்கள் வேறுபடும் விதம் பற்றிக் குறிப்பிடுவார்.

# செயற்பத்திரம் 5.3.2

**சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**

- ஒரு நாட்டின் நாகரிகம், பண்பு என்பவற்றை வளர்ப்பவை எவை?
- நாட்டுக் கூத்துக்கள் எங்கே தோன்றின?
- இலங்கையில் நாட்டுக் கூத்து ஆடப்படும் மூன்று இடங்களைக் குறிப்பிடுக.
- நாட்டுக் கூத்தின் இரு வகை பாங்குகள் எவை?
- நாட்டுக் கூத்தை நெறிப்படுத்துபவர் யார்?
- மன்னாரில் ஆடப்படும் நாட்டுக் கூத்துக்களின் சிறப்பம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
- வடபாங்கு பாடல் வகையும் தென்பாங்கு பாடல் வகையும் எவ்வாறு வேறுபடுகின்றன.
- கிறிஸ்தவ மதம் சார்ந்த நாட்டுக் கூத்துக்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

**பின்னிணைப்புப் பத்திரம்**

ஒரு நாட்டின் நாகரிகத்தையும் பண்பையும் ஓங்கி வளர்த்த பெருமை கிராமங்களையே சாரும். இயற்கை அழகு நிறைந்த கிராமங்களில் வாழும் மக்களது வாழ்க்கையானது உயிர்த் துடிப்புள்ளதாக இருக்கும். அவர்களின் கலைகள், அவர்களின் உணர்ச்சிகளையும் செயல்களையும் வெளிப்படுத்தும் ஒரு சாதனமாகும். அங்கு தோற்றம் பெற்ற நாட்டுக்கூத்தும் அந்தப் பெருமைக்குரியது. நாட்டுக்கூத்து யாழ்ப்பாணம், மன்னார், சிலாபம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் ஆடப்பட்டு வந்தது. நாட்டுக்கூத்து தற்போது சில இடங்களில் ஆடப்பட்டு வருகின்றது. நாட்டுக்கூத்தில் முக்கியமானவர் அண்ணாவியார். அவரே நாட்டுக்கூத்தை இயக்குபவர். அந்நாட்டுக்கூத்து இசை, கதைப்போக்கு, ஆடை என்பவற்றின் சில வித்தியாசங்களில் இரு வகைகளாக ஆடப்படுகின்றது. மன்னாரில் வடபாங்கு, தென்பாங்கு என இரு வகைப்பாணிகளாக ஆடப்படுகின்றது. வடபாங்கு யாழ் பாங்கு எனவும், தென்பாங்கு மாதோட்டப் பாங்கு எனவும் அழைக்கப்படும். மன்னார்ப் பிரதேசத்தில் கூடுதலாக கிறிஸ்தவ மக்கள் செறிந்து வாழ்வதால் கிறிஸ்தவ மதக் கூத்துக்கள் கூடுதலாக ஆடப்பட்டு வந்தாலும், இந்து மதக் கூத்துக்களும் ஆடப்படுகின்றன. சிங்கள மொழியிலும் நாடகம் என்று அழைக்கப்படும் நாட்டுக் கூத்துக்கள் தமிழில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டு ஆடப்படுகின்றன. வடபாங்கு என்னும் வகையிலே இடம்பெறும் விருத்தப்பா என்னும் பாடல் வகை42மெல்லோசையுடையதாகவும், தென்பாங்கிலே இப்பாடல் வகை வல்லோசை உடையதாகவும் இருக்கும். அங்கு ஆடப்படும் கூத்துக்கள் சில அந்தோனியார் நாடகம், எஸ்தாக்கியர் நாடகம், மூவிராசாக்கள் நாடகம், ஞானசவுந்தரி நாடகம் என்பன.

**தேர்ச்சி 5.0** : இலங்கை வாழ் மக்களின் சமய சமூக விழாக்களில் இடம்பெறும் நடனங்களின் கலாச்சாரப் பின்னணியை அறிந்து விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 5.3** : இலங்கையின் பிரதேசவாரியான கூத்து வகைகளின் கலாச்சாரப் பின்னணியை விளக்குவார்.

**செயற்பாடு 5.3** : மன்னாரில் இடம்பெறும் நாட்டுக்கூத்து வகைகளைப் பற்றி அறிவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடு** :
- நாட்டுக்கூத்துப் படங்கள் ஒலி.- ஒளி நாடாக்கள்,
- ஒலி, ஒளிப்பதிவுக் கருவிகள், தொலைக்காட்சிப் பெட்டி
- செயற்பத்திரம் 5.3.2
- பின்னிணைப்புப் பத்திரம்

**கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு**

**படி 5.3.1**

- மன்னாரில் இடம்பெறும் நாட்டுக் கூத்துப் படங்கள், நாட்டுக் கூத்துப் பாடல்கள். ஒளிநாடாக்கள் முதலியவற்றை அவ்வக் கருவிகளில் போட்டுக் காண்பித்தல்.
- முன்னர் கற்ற பாடங்களில் பார்வையிட்ட நாட்டுக் கூத்துப் பாடல்களை நினைவுபடுத்தி அவற்றுடன் இவற்றைத் தொடர்புபடுத்தல்.
- மன்னாரில் ஆடப்படும் நாட்டுக்கூத்தின் பாணிகளிலுள்ள வேறுபாடுகள் பற்றிக் கலந்துரையாடுதல்.

◆ வடபாங்கில் கடவுள் வாழ்த்தின் தன்மை
◆ தென்பாங்கில் கடவுள் வாழ்த்தின் தன்மை
◆ பாத்திரங்களின் வருகை
◆ பாக்களின் தன்மை
◆ ஆடல் தருவின் பாங்கு

(10 நிமிடங்கள்)

**படி 5.3.2**

- மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- பின்னிணைப்புப்பத்திரத்தை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்.)

**படி 5.3.3**

- தேவையான ஆலோசனைகளை வழங்கி செயற்பத்திரத்திற்கேற்ப செயற்படுவதை உறுதிப்படுத்துங்கள்.
- பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு பெறுபேறுகளைச் சமர்ப்பிக்கும் போது மறுகுழு அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.

- வடபாங்கில் கடவுள் வாழ்த்து விருத்தப்பாவில் அமைந்திருக்கும்.
- தென்பாங்கில் - வெண்பாவில் அமைந்திருக்கும்.
- வடபாங்கில் பாத்திரங்களின் வருகையில் ஒரு வரவே உண்டு.
- வடபாங்கில் பாக்கள் மெல்லோசை உடையவை.
- வடபாங்கில் தெய்வ வணக்கம், கதைச் சுருக்கம் கூறும் தோடயம் என்னும் பாவகை வழக்கிலுண்டு.
- தென்பாங்கில் ஆடல்தரு கிடையாது. நாடகக் கதை, கவி இன்னிசை எனும் பாவகை உண்டு.

(10 நிமிடங்கள்.)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- வடபாங்கு, தென்பாங்கு கடவுள் வாழ்த்தின் தன்மையைக் கூறுவார்.
- இரு வகைப் பாங்கிலும் பாத்திரங்களின் வகையைக் கூறுவார்.
- பாக்களின் தன்மையைக் கூறுவார்.
- ஆடல் தருவின் பாங்கினைக் குறிப்பிடுவார்.
- தென்பாங்கிற் பாக்கள் வல்லோசை உடையவை என்பதை கூறுவார்.

# செயற்பத்திரம் 5.3.2

**சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குங்கள்.**

- வடபாங்கிற் கடவுள் வாழ்த்து எவ்வாறு அமையும்?
- தென்பாங்கிற் கடவுள் வாழ்த்து எவ்வாறு அமையும்?
- வடபாங்கில் பாத்திரத்தின் வருகை எவ்வாறு அமைந்திருக்கும்?
- தென்பாங்கில் பாத்திரத்தின் வருகை எவ்வாறு அமைந்திருக்கும்?
- வடபாங்கில் பாக்கள் எவ்வாறு அமைந்திருக்கும்?
- தென்பாங்கில் பாக்கள் எவ்வாறு அமைந்திருக்கும்?
- வடபாங்கில் ஆடல்தரு எப்படி அமைந்திருக்கும்?
- தென்பாங்கில் ஆடல்தரு எப்படி அமைந்திருக்கும்?

பின்னிணைப்புப் பத்திரம்

| வடபாங்கு | தென்பாங்கு |
|---|---|
| 1. கடவுள் வாழ்த்து - விருத்தப்பாவில் அமைந்திருக்கும். | வெண்பாவில் அமைந்திருக்கும். |
| 2. ஒவ்வொரு பாத்திரத்திற்கும் ஒரு வரவே உண்டு. பாத்திர நிகழ்ச்சி மீண்டும் இருந்தால் வரவில்லாமலும் ஆடல்தரு இல்லாமலும் பாத்திரங்கள் கலந்து கொள்ளும். | பாத்திரங்கள் தத்தமது நிகழ்ச்சிகள் முடியப் போய் வரலாம். எத்தனை முறையும் போய் வரலாம். ஒவ்வொரு வருகைக்கும், செல்கைக்கும் தனித்தனி தருக்களும் அதற்குரிய ஆடல் முறைகளும் உண்டு<br>உ-ம்:- ஞானசவுந்தரி நாடகத்தில் தருமர் என்னும் கதாபாத்திரம் ஏழுதடவைகளும் பிலேந்திரன் என்னும் கதாபாத்திரம் பதினொரு தடவைகளும் தோன்றுவர். |
| 3. தெய்வ வணக்கமும் செயற்படு பொருளுடன் கதைச் சுருக்கமும் கூறும் தோடயம் எனும் பாவகை வழக்கில் உண்டு | பாத்திரங்களுக்கு சபைத்தரு (ஆடல்தரு) கிடையாது. நாடகக் கதை, கவி, இன்னிசை எனும் பாவகை உண்டு. |
| 4. தரு, சிந்து வண்ணம் முதலியவற்றால் கூறப்படும் பாக்கள் மெல்லோசை உடையவை. | பாக்கள் வல்லோசை உடையவை |

# பகுதி - II

# செயற்பாடுகளின் தொடரகம்

# கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தற் செய்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத்திட்டங்களாகக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளை யும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back), முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர் களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின் அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சி களை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங் காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின் போது மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களை பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student-Centered), தேர்ச்சி மட்ட (Competency-Based), செயற்பாடு சார்ந்த (Activity-Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற் பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றுப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல்-கற்பித்தலை கணிப்பீடு-மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்ப தற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களை கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங் கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகச் செய்துகொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படை யாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றனவா என்பதைக் கண்டுகொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு கணிப்பீட்டின் மூலம் கண்டுகொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத் திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தற் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்க.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாடவிடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்க. இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்க. ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் செய்கையை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப்படம் (Concept Map)
- சுவர்ப்பத்திரிகை (Wall News Paper)
- புதிர்ப்போட்டி (Quiz)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Book)
- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolio)
- கண்காட்சி (Exhibition)
- விவாதம் (Debate)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussion)
- கருத்தரங்கு (Seminar)
- சமயோசிதப் பேச்சு (Impromptu Speeche)
- நடிபங்கு (Role Play)
- இலக்கிய மீளாய்வை முன்வைத்தல்
  (Presentation of Literature Reviews)
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப்புத்தகம்
  (Field Book / Nature Diary)
- செய்முறைச் சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேச கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தல் சாதனங்களையும் அறிமுகஞ் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற் பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால் கற்றல் - கற்பித்தற் செய்கை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் ஆர்வத் தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபடுவதற்கு முடியுமாகின்றது.

- மாணவர் கற்றலில் உயர்மட்ட அடைவைப்பெற வேண்டுமாயின் தொடர்ச்சியான கணிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டியது அவசியமாகும.

- மாணவர் கற்றல் அடைவு கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போதும், பாட அலகின் முடிவிலும், மாத முடிவிலும், தவணைமுடிவிலும், ஆண்டு இறுதியிலும் கணிப்பீடும் மதிப்பீடும் செய்யப்படும்.

- பரத நாட்டிய கணிப்பீட்டில் அறிமுறை, செய்முறை ஆகிய இரண்டும் இடம்பெறல் வேண்டும்.

- இப்புதிய பாடத்திட்டத்தில் கற்றல் செயற்பாடுகள் தனியாள் நிலையிலும் குழுநிலையிலும் இடம்பெறுவதால் இவ்விரு நிலைகளிலும் மாணவர் கணிப்பிடப்படல் வேண்டும்.

- இரசித்தல், ஆக்கத்திறன் என்பவை தொடர்பான கணிப்பீட்டிற்கு மாணவர்களுக்கு வகுப்பறையில் மேலதிக சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். அவற்றை அவதானிப்பதன் மூலம் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

- மாணவர்களின் அறிதல் ஆட்சித்திறன், மனவெழுச்சிப் பண்புகள், உளவியக்கத் திறன்கள், கற்றவற்றை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தும் ஆற்றல் என்பவற்றை விருத்தி செய்வதற்கு உதவுவதோடு அவர்களின் பலம், பலவீனம் என்பவற்றை இனங்கண்டு அவர்களுக்கு உதவும் வகையில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தை பாடசாலைகளில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக முன்னர் கூறப்பட்ட மாதிரிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான மாதிரிக் கருவிகள்

## கருவி : 02

01 கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : முதலாம் தவணை

02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் : 2.1

03. கருவிக்குரிய பாடப் பகுதிகள் :
- இயற்கைச் சூழலிலுள்ள உயிரினங்களைப் போல் பாவனை செய்து காட்டுவார்.
- விலங்கினங்கள்.
  - குரங்கு
  - யானை
  - முயல்
  - புலி
  - சிங்கம்

04. கருவியின் தன்மை : நடிபங்கு (Role Play)

05. கருவியின் நோக்கங்கள் :
- விலங்கினங்கள் தொடர்பாகத் தாம் பெற்றுக் கொண்ட அறிவைப் பிரயோகித்துப் பாவனை செய்வார்.
- குழுவாகச் செயற்படுவதற்கு தம்மைத் தயார் செய்து கொள்வார்.
- சூழலில் காணப்படுகின்ற விலங்கினங்களுக்கும், காட்டிலுள்ள விலங்கினங்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை இனங்கண்டு நடித்துக் காட்டுவார்.

**06. கருவிகளைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியர்களுக்கு** :
- மாணவர்களைப் பொருத்தமானவாறு இரு குழுக்களாகப் பிரிக்கவும்.
- பின்வரும அட்டவணையிற் காட்டியவாறு ஒவ்வொரு குழுவிற்கும் உரிய பாடப் பகுதியை வழங்கவும்.

| குழு-I | குழு-II |
|---|---|
| - குரங்கு போலப் பாவனை செய்தல்<br>- முயல் போலப் பாவனை செய்தல் | - யானை போலப் பாவனை செய்தல்.<br>- சிங்கம் போலப் பாவனை செய்தல்.<br>- புலி போலப் பாவனை செய்தல். |

- பாவனை செய்து பயிற்சி பெற அறிவுறுத்தல் வழங்கவும்.
- பொருத்தமான நேரமொன்றில் இரண்டு குழுக்களையும் அழைத்துப் பரீட்சை நடத்தவும்.

**மாணவருக்கு:**
- குறித்த விலங்குகளைப் போல எல்லா விதத்திலும் பாவனை செய்ய வேண்டும்.

**07. புள்ளி வழங்கும் முறை** :
- குரங்கு போலப் பாவனை செய்தல்.
- யானை போலப் பாவனை செய்தல்.
- முயல் போலப் பாவனை செய்தல்.
- சிங்கம் போலப் பாவனை செய்தல்.
- புலி போலப் பாவனை செய்தல்.

**08. புள்ளிகளின் வீச்சு** :
- மிகவும் நன்று - 4
- நன்று - 3
- சாதாரணம் - 2
- முன்னேற்றம் காண வேண்டும் - 1

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான மாதிரிக் கருவிகள்

## கருவி : 06

01 கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : முதலாம் தவணை

02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் : 5.1

03. கருவிக்குரிய பாடப் பகுதிகள் :
- தமிழ் மக்களின் பாரம்பரிய நடனங்களின் கலாசாரப் பின்னணியை விளக்குவார்.
- கிராமிய நடனங்கள்
  - கும்மி
  - கோலாட்டம்
  - கரகம்
  - காவடி

04. கருவியின் தன்மை : வெளிக்களப் புத்தகம்

05. கருவியின் நோக்கங்கள் :
- கிராமிய நடனங்களான கும்மி, கோலாட்டம், கரகம், காவடி ஆகியவற்றின் வெவ்வேறு பாடல்களைச் சேகரிப்பார்.
- அந்த நடனங்களுக்கு உபயோகிக்கப்படும் பக்கவாத்தியக் கருவிகளின் படங்களைச் சேகரிப்பார்.
- அந்த நடனங்களின் புகைப்படங்கள், பத்திரிகைகளில் பிரசுரமாகும் கட்டுரைகள், படங்கள் முதலானவற்றைச் சேகரிப்பார்.
- மேலதிகமாக தமது முயற்சியினால் வேறும் தகவல்களைச் சேகரிப்பார்.
- வெளிக்களப் புத்தகத்தை உருவாக்குவார்.

06. கருவிகளைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்

M rphpa ufS fF : • மாணவர்களுக்குத் தனித்தனியாக இப்புத்தகத்தைத் தயாரிக்குமாறு கூறுக.

• பின்வரும் முறையில் பாடப் பகுதிகளை வழங்குக.

1. நான்கு வகைக் கிராமிய நடனங்கள் தொடர்பான பாடல்களைச் சேகரிக்குமாறு கூறுக.
2. உபயோகிக்கப்படும் இசைக் கருவிகளின் படங்களைச் சேகரிக்கும்படி அறிவுறுத்துக.
3. அவை பற்றிப் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள், படங்கள், வேறு புகைப்படங்கள் ஆகியவற்றைச் சேகரிக்கக் கூறுக.
4. மேலதிகமாகப் பிரத்தியேகமாகச் சேகரிக்கப்படக் கூடியவற்றைச் சேகரிக்கலாம் என அறிவுறுத்துக.
5. சேகரிக்கப்பட்டவை உள்ளடக்கப்படும் வெளிக்களப் புத்தகத்தை உருவாக்கிக் கையளிப்பார்.

மாணவருக்கு : • பாடம் முடிவடைந்து வெளிக்களப் புத்தக வேலை கொடுக்கப்பட்டு 20 நாட்களுக்குள் புத்தகத்தை ஒப்படைத்தல் வேண்டும்.

• கொடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் பூரணப்படுத்தப்பட வேண்டும்.
• பிரத்தியேகமாகக் கூடுதலாகச் சேகரித்தால் கூடுதலான புள்ளி வழங்கப்படும்.

**07. புள்ளி வழங்கும் முறை :** • கும்மி நடனத்திற்குரிய பாடல் பக்கவாத்தியக் கருவிகளின் படங்கள், நடனத்திற்குரிய பத்திரிகைச் செய்திகள் முதலானவற்றைச் சேகரிப்பார்.

• கோலாட்டத்திற்குரிய பக்கவாத்தியக் கருவிகளின் படங்கள், அந்த நடனத்திற்குரிய பத்திரிகைச் செய்திகள் முதலானவற்றைச் சேகரிப்பார்.
• கரகத்திற்குரிய பாடல், பக்கவாத்தியக் கருவிகளின் படங்கள், அந்த நடனத்திற்குரிய பத்திரிகைச் செய்திகள் முதலானவற்றைச் சேகரிப்பார்.
• காவடிக்குரிய பாடல், பக்கவாத்தியக் கருவிகளின் படங்கள், அந்த நடனத்திற்குரிய பத்திரிகைச் செய்திகள் முதலானவற்றைச் சேகரிப்பார்.
• மேலதிகத் தகவல்களைச் சேகரிப்பார்.
• வெளிக்களப் புத்தகத்தை முழுமையாக்கிக் கையளிப்பார்.

**08. புள்ளிகளின் வீச்சு :**

| | | |
|---|---|---|
| • மிகவும் நன்று | - | 4 |
| • நன்று | - | 3 |
| • சாதாரணம் | - | 2 |
| • முன்னேற்றம் காண வேண்டும் | - | 1 |

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான மாதிரிக் கருவிகள்

## கருவி : 04

01 கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : இரண்டாம் தவணை

02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் : 4.1, 4.2

03. கருவிக்குரிய பாடப் பகுதிகள் :
- பரத நாட்டிய வணக்கம், தியான ஸ்லோகம் ஆகியற்றில் பயன்படுத்தப்படும் முத்திரைகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- வணக்கம் (நமஸ்காரம்)
  - கடகாமுகம், சிகரம், சதுரம், அஞ்சலி
- தியான ஸ்லோகம்
  - சூசி, பிறளம்பம், முகுளம், சிவலிங்கம், சிலிட்ட காங்கூலம், பதாகம், திரிலிங்கம், சந்திரகலா,
- ப, ர, த என்னும் மூன்றெழுத்துக்களும் குறிக்கின்ற சொற்கள் பரத இலட்சணம் ப - பாவம், ர - ராகம், த- தாளம்,

04. கருவியின் தன்மை : புதிர்ப் போட்டி

05. கருவியின் நோக்கங்கள் :
- நமஸ்காரத்திற்குப் பயன்படுத்தப்படும் முத்திரைகளான ஒற்றைக்கை, இரட்டைக்கை, அபூர்வ முத்திரைகளையும், தியான ஸ்லோகம், பரத இலட்சணம் ஆகியவற்றைப் பற்றிப் பெற்றுக் கொண்ட அறிவைப் பயன்படுத்தி வினாக்களை ஆக்குவார்.
- அந்த நடனங்களுக்கு உபயோகிக்கப்படும் பக்கவாத்தியக் கருவிகளின் படங்களைச் சேகரிப்பார்.
- குழு என்ற உணர்வுடன் புதிர்ப் போட்டிகளில் கலந்து கொள்வார்.

## 06. கருவிகளைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்

**ஆசிரியர்களுக்கு** :

- மாணவர்களுக்கு பொருத்தமானவாறு இரு குழுக்களாகப் பிரிக்கவும்.
- பின்வரும் அட்டவணையிற் காட்டியவாறு ஒவ்வொரு குழுவிற்கும் உரிய பாடப்பகுதியை வழங்கவும். (ஏற்கனவே வழங்கப்பட்ட குறிப்புக்கள்)

| குழு-I | குழு-II |
|---|---|
| • நமஸ்காரத்திற்குப் பாவிக்கப்படும் முத்திரைகள்<br>• இடம்பெறும் ஒற்றைக் கை, இரட்டைக்கை முத்திரைகள்<br>• பரத இலட்சணம் | • தியானஸ்லோகம், கருத்து, பாவிக்கப்படும் முத்திரைகள்<br>• அதிலிடம்பெறும் ஒற்றைக்கை,<br>• இரட்டைக்கை அபூர்வ முத்திரைகள் |

- ஒவ்வொரு குழுவிற்குமுரிய பாடப் பகுதிகளில் 10 வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரமொன்றை அதற்குரிய விடைகளுடன் பாடப் பகுதி நிறைவடைந்த பின் ஒரு கிழமைக்குள் ஒப்படைக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கவும்.
- மாணவர்கள் தயார் செய்த வினாப்பத்திரங்களில் இருந்து புதிர்ப் போட்டிக்கேற்ற வினாக்களைத் தெரிவு செய்க.
- பொருத்தமான நேரத்தில் குழுக்களை அழைத்துப் போட்டியை நிகழ்த்துக.

**மாணவருக்கு** :

- பாடம் முடிவடைந்து ஒரு கிழமைக்குள் 10 வினாக்கள் அடங்கிய வினாப் பத்திரமொன்றையும் அதற்குரிய விடைகளையும் தயார் செய்து ஆசிரியரிடம் ஒப்படைக்கவும்.
- உங்கள் குழுவிற்கு வழங்கப்படும் பாடப் பகுதியில் மாத்திரமே வினாக்கள் தயார் செய்யப்பட வேண்டும்.
- முழுப் பாடத்திலும் கற்ற விடயங்களை அவதானித்துப் புதிர்ப் போட்டியில் பங்குகொள்ளத் தயாராகுக.

**07. புள்ளி வழங்கும் முறை** :
- குழுவிற்குரிய வினாப்பத்திரத்தை தயார் செய்வார்.
- வினாப்பத்திரங்களுக்குரிய விடைப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பார்.
- கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான விடையைக் கூறுவார்.
- போட்டியின் வெற்றி தோல்விகளை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வார்.

**08. புள்ளிகளின் வீச்சு** :

| | | |
|---|---|---|
| • மிகவும் நன்று | - | 4 |
| • நன்று | - | 3 |
| • சாதாரணம் | - | 2 |
| • முன்னேற்றம் காண வேண்டும் | - | 1 |

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான மாதிரிக் கருவிகள்

fUtp : 05

01 **கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : இரண்டாம் தவணை

02. **உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்** : 4.1, 4.2, 4.3, 4.4.

03. **கருவிக்குரிய பாடப் பகுதிகள்** :
- ஒற்றைக்கை முத்திரை (1-28)
- தியான ஸ்லோகம்.

04. **கருவியின் தன்மை** : வினா விடைப் புத்தகம்.

05. **கருவியின் நோக்கங்கள்** :
- நாட்டியம் செய்வதற்குரிய ஒழுங்கு முறைகளை அறிந்து செயற்படுவார்.
- நாட்டியம் ஆடும்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்களைத் தெரிவார்.
- நாட்டியத்தில் முத்திரைகளைப் பிரயோகிப்பார்.
- முத்திரைகளை இனங்காண்பார். கருத்துக்களை வெளிப்படுத்துவார்.
- நாட்டியக் கிரமம், ஒற்றைக்கை முத்திரைகள், பதாக விநியோகம் ஆகிய பாடங்களின் வினாக்களுக்கு விடையளிப்பார்.

06. **கருவிகளைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியர்களுக்கு** :
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் உரிய பாடப்பகுதியை வழங்குக.
- பின்வரும் அட்டவணையிற் காட்டியவாறு ஒவ்வொரு குழுவிற்கும் உரிய பாடப்பகுதியை வழங்கவும்.

| குழு-I | குழு-II |
|---|---|
| • பரத இலட்சணம்<br>• புராண வரலாறு<br>- பரதத்தின் தோற்றம் | • ஒற்றைக்கை முத்திரைகள் (1 28)<br>- தியான ஸ்லோகம். |

- ஒவ்வொரு குழுவிற்குமுரிய பாடப் பகுதிகளில் 10 வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரமொன்றை அதற்குரிய விடைகளுடன் பாடப் பகுதி நிறைவடைந்த பின் ஒரு கிழமைக்குள் ஒப்படைக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கவும்.

**மாணவருக்கு** :
- பாடம் முடிவடைந்து ஒரு கிழமைக்குள் 20 வினாக்களுக்கு விடைகளை எழுதி ஆசிரியரிடம் ஒப்படைக்கவும்.
- உங்கள் குழுவிற்கு வழங்கப்படும் பாடப் பகுதியில் மாத்திரமே வினாக்கள் தயார் செய்யப்பட வேண்டும்.

**07. புள்ளி வழங்கும் முறை** :
- குழுவிற்குரிய வினாப்பத்திரத்தை தயார் செய்வார்.
- வினாப்பத்திரங்களுக்குரிய விடைப்பத்திரங்களை சமர்ப்பிப்பார்.
- கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான விடையைக் கூறுவார்.

**08. புள்ளிகளின் வீச்சு** :

| | | |
|---|---|---|
| • மிகவும் நன்று | - | 4 |
| • நன்று | - | .3 |
| • சாதாரணம் | - | 2 |
| • முன்னேற்றம் காண வேண்டும் | - | 1 |

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான மாதிரிக் கருவிகள்

## கருவி : 01

01 **கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : மூன்றாம் தவணை

02. **உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்** : 4.1, 4.3

03. **கருவிக்குரிய பாடப் பகுதிகள்** :
- தியான ஸ்லோகம்
- வணக்கம்
- ஒற்றைக்கை முத்திரைகள் (1-28)
- பதாக விநியோகம்

04. **கருவியின் தன்மை** : குழுக் கலந்துரையாடல்.

05. **கருவியின் நோக்கங்கள்** :
- தியான சுலோகம் தொடர்பாக தாம் பெற்றுக் கொண்ட அறிவை வினாக்கள் ஆக்குவதற்குப் பயன்படுத்துவார்.
- குழு என்ற உணர்வுடன் சம்பாஷணையில் பங்குபற்றுவார்.
- அன்றாட வாழ்க்கைக்கும் நாட்டியத்திற்கும் இடையே உள்ள தொடர்பினை மாணவர்கள் அறிவார்.

06. **கருவிகளைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியர்களுக்கு** :
- மாணவர்களைப் பொருத்தமான குழுக்களாகப் பிரிக்குக.
- பின்வரும் அட்டவணையிற் காட்டியவாறு ஒவ்வொரு குழுவிற்கும் உரிய பாடப்பகுதியை வழங்கவும்.

| குழு-I | குழு-II |
|---|---|
| - வணக்கம்<br>- நமஸ்காரம்<br>- பயன்படுத்தப்படும் முத்திரைகள் | - தியான சுலோகம்<br>- கருத்து<br>- பயன்படுத்தப்படும் முத்திரைகள்<br>- ஒற்றைக்கை முத்திரைகள்<br>- இரட்டைக்கை முத்திரைகள் |

- ஒவ்வொரு குழுவிற்குமுரிய பாடப் பகுதிகளில் 10 வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரமொன்றை அதற்குரிய விடைகளுடன் பாடப் பகுதி நிறைவடைந்த பின் ஒரு கிழமைக்குள் ஒப்படைக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கவும்.
- மாணவர்கள் தயார் செய்த வினாப்பத்திரங்களில் இருந்து சம்பாஷணைக்கு ஏற்ற வினாக்களைத் தெரிவு செய்க.
- வசதியான நேரத்தில் இரு குழுக்களுக்கிடையும் சம்பாஷனை நடத்துக.

மாணவருக்கு :
- பாடம் முடிவடைந்து ஒரு கிழமைக்குள் 20 வினாக்களுக்கு விடைகளை எழுதி ஆசிரியரிடம் ஒப்படைக்கவும்.
- உங்கள் குழுவிற்கு வழங்கப்படும் பாடப் பகுதியில் மாத்திரமே வினாக்கள் தயார் செய்யப்பட வேண்டும்.
- முழுப் பாடத்திலும் கற்ற விடயங்களை அவதானித்துச் சம்பாஷனையில் பங்கு கொள்வதற்குத் தயாராகுக.

**07. புள்ளி வழங்கும் முறை :**
- குழுவிற்குரிய வினாப்பத்திரத்தை தயார் செய்வார்.
- வினாப்பத்திரங்களுக்குரிய விடைப்பத்திரங்களை சமர்ப்பிப்பார்.
- கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான விடையைக் கூறுவார்.
- பங்குபற்றும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வார்.
- கூட்டாகச் செயற்படும் மனோநிலையை உருவாக்குவார்.

**08. புள்ளிகளின் வீச்சு :**
- மிகவும் நன்று - 4
- நன்று - 3
- சாதாரணம் - 2
- முன்னேற்றம் காண வேண்டும் - 1

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான மாதிரிக் கருவிகள்

## கருவி : 03

01 கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : மூன்றாம் தவணை

02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் : 3.6

03. கருவிக்குரிய பாடப் பகுதிகள் :
- வெவ்வேறு வகையான கிராமிய நடனங்களை ஆடிக் காட்டுவார்.
- கும்மி
- கோலாட்டம்

04. கருவியின் தன்மை : செய்முறைச் சோதனை

05. கருவியின் நோக்கங்கள் :
- கிராமிய நடனத்தின் பண்புகளுக்கேற்ப ஆடுவார்.
- அவற்றின் வேறுபாடுகளை அறிவார்.
- பாடல்களைப் பாடி ஆடல்களில் ஈடுபடுவார்.
- கும்மிக்குரிய சிறப்பியல்புகளான கைகளைக் கொட்டி ஆடுவார்.
- கோலாட்டத்திற்குரிய சிறப்பியல்புகளான கோல்களை உபயோகித்து ஆடுவார்.
- பல்வேறு கோலங்களில் ஆடுவார்.

06. கருவிகளைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆசிரியர்களுக்கு :
- மாணவர்களைப் பொருத்தமான குழுக்களாகப் பிரிக்குக.
- பின்வரும் அட்டவணையிற் காட்டியவாறு ஒவ்வொரு குழுவிற்கும் உரிய பாடப்பகுதியை வழங்கவும்.

| குழு-I | குழு-II |
|---|---|
| • கும்மி நடனம் | • கோலாட்ட நடனம் |
| • பல்வேறு கோலங்களில் ஆடுதல் | • பல்வேறு கோலங்களில் ஆடுதல் |
| • பாடலைத் தாளத்துடன் பாடுதல். | • பாடலைத் தாளத்துடன் பாடுதல் |
| • கைளைக் கொட்டி ஆடுதல். | • கோல்களைச் சரியான முறையில் உபயோகித்தல். |
| • மகிழ்ச்சியாக ஆடுதல் | • மகிழ்ச்சியாக ஆடுதல். |

* ஒவ்வொரு குழுவும் ஆடிப் பயிற்சி பெற அறிவுறுத்தல் வழங்கவும்.
* பொருத்தமான நேரமொன்றில் இரு குழுக்களையும் அழைத்து பரீட்சை நடத்தவும்.

**மாணவருக்கு** :

* கும்மி கோலாட்ட நடனம் ஆடும் போது பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்.
* பாடலைத் தாளத்துடன் பாட வேண்டும்.
* கைகளைக் கொட்டி மகிழ்ச்சியுடன் கும்மி நடனத்தை ஆட வேண்டும்.
* கோல்களைச் சரியான முறையில் உபயோகித்து மகிழ்ச்சியுடன் கோலாட்ட நடனத்தை ஆட வேண்டும்.

**07. புள்ளி வழங்கும் முறை** :

* பாடலைத் தாளத்துடன் பாடுவார்.
* இயல்பாக மகிழ்வுடன் ஆடுவார்.
* உரிய முறையில் ஒத்திசைவுடன் ஆடுவார்.
* பலவித கோலங்களில் ஆடுவார்.

**08. புள்ளிகளின் வீச்சு** :

* மிகவும் நன்று - 4
* நன்று - 3
* சாதாரணம் - 2
* முன்னேற்றம் காண வேண்டும் - 1

ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය
භරත නාට්‍යය 6 (දෙ)

2010/T/06/TIM/2,500